# பாவையின் உயிர்ப்பு

வித்துவான் தா. ஏ. ஞானமூர்த்தி,
எம். ஏ.,
தமிழ்த் துறைத் தலைவர்
பி. எஸ். ஜி. கலைக் கல்லூரி, கோவை.

UNIVERSITY EXTENSION LIBRARY
30 APR 196
MADURAI

பழனியப்பா பிரதர்ஸ்

சேப்பாக்கம்,
சென்னை - 5.
::
தெப்பக்குளம்,
திருச்சி - 2.

முதற் பதிப்பு—செப்டம்பர் 1957

விலை ரூபா 1-75

ஏஷியன் பிரிண்டர்ஸ்,
சென்னை-5.

# முன்னுரை

என் இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பே **''பாவையின் உயிர்ப்''**பாக உருவாகி யுள்ளது. இதன்கண் பதின்மூன்று கட்டுரைகள் உள்ளன. இவை, திருக்குறள், சீவகசிந்தாமணி, பதிற்றுப் பத்து, அகநானூறு, நெடுநல்வாடை, சிலப்பதிகாரம், நந்திக்கலம்பகம், கம்பராமாயணம், மணிமேகலை ஆகிய நம் இன்பத் தமிழ் நூல்களில் அமைந்துள்ள அரிய கருத்துக்கள், நயங்கள் இன்னோரன்னவைகளில் சிலவற்றைக் கட்டுரைப்பவையாம்.

**'தேவரும் வள்ளுவரும்', 'பாவையின் உயிர்ப்பு', 'வீரமும் ஈரமும்', 'விலைமகளா, கலைமகளா ?', 'தேவரின் ஓர் அரிய படைப்பு', 'கம்பருடன் ஒரு நாள்'** ஆகிய இக்கட்டுரைகள் 'கலைக் கதி'ரில் வெளிவந்தவை. **'உலகை நிலைநிறுத்தும் உத்தமர்', 'சேரர்கால வாழ்வியல்', 'தெரிந்து விளையாடல்', 'நந்திவர்மன்', 'குடிமை', 'மணிமேகலையில் இயற்கைக்கு இகந்த நிகழ்ச்சிகள்'** ஆகிய இவ்வாறும் யான் திருச்சி வானொலியில் நிகழ்த்திய பேச்சுக்கள் ஆகும். இவற்றை நூல் வடிவில் வெளியிடத் தம் இசைவு தந்த கலைக்கதிர் ஆசிரியர் உயர்திரு. ஜி. ஆர். தாமோதரன் அவர்களுக்கும், அகில இந்திய வானொலி நிலையத்தவர்க்கும் என் நன்றி. இந் நூலை எழில் மிக அச்சிட்டு வெளியிட்டுதவிய பழனியப்பா பிரதர்ஸ் அவர் களுக்கு யான் என்றுங் கடப்பாடுடையேன்.

நம் தேமதுரத் தமிழ் இலக்கியங்களின் பெற்றிமையை ஓர்தற்கு இந்நூல் உதவுமென நம்புகிறேன்.

கோவை,<br>29—5—'57.

**தா. ஏ. ஞானமூர்த்தி**

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| 1. | தேவரும் வள்ளுவரும் | ... | 1 |
| 2. | பண்டைத் தமிழர் காதல் ஒழுக்கம் | ... | 14 |
| 3. | உலகை நிலை நிறுத்தும் உத்தமர் | ... | 25 |
| 4. | சேரர் கால வாழ்வியல் | ... | 40 |
| 5. | பாவையின் உயிர்ப்பு | ... | 56 |
| 6. | தெரிந்து வினையாடல் | ... | 65 |
| 7. | வீரமும் ஈரமும் | ... | 77 |
| 8. | விலைமகளா, கலைமகளா ? | ... | 89 |
| 9. | நந்திவர்மன் | ... | 94 |
| 10. | கம்பருடன் ஒரு நாள் | ... | 107 |
| 11. | குடிமை | ... | 121 |
| 12. | தேவரின் ஓர் அரிய படைப்பு | ... | 134 |
| 13. | மணிமேகலையில் இயற்கைக்கு இகந்த நிகழ்ச்சிகள் | | 149 |

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

1

# தேவரும் வள்ளுவரும்

கதிரவன் நாடோறும் இவ்வுலகில் தோன்றி இருளைப் போக்குகின்றான். அவனால் இவ்வுலகத்துப் புறவிருளைக் கடிதற்கு ஒல்லுமே யன்றி, மக்களினூடு செறிந்து கிடக்கும் அகவிருளை மாய்த்தற் கியலாது. ஆனால் நல்லறிஞர் மனத்துக்கண் தங்கிய வல்லிருளை நீக்க வல்லவ ராவர். அவர்கள் தம் மனத்திருளை மட்டு மன்றிப் பிறர் அகத்திருளையும் வீட்டுகின்றனர். அகத்தில் நிறைந்த மாசொழியின், ஆண்டு நிலைபேறுடைய ஒளி நிலவும் என்று கூறவும் வேண்டுமோ? இவ்வகையில் கதிரவனையுங் கற்றார் விஞ்சுகின்றன ரன்றோ ?

உலகில் ஆங்காங்குச் சான்றோர் பலர் தோன்று கின்றனர். அவர் ஒவ்வொருவரும் தாம் கண்ட உண்மை நெறியினை உலகத்தார்க்கு எடுத்து ஓதுகின்றனர்.

அவர்கள் நெறி ஒன்றற்கொன்று மாறுபடுவதாயினும் முடிவான நோக்கம் அவர்கள் யாவர்க்கும் ஒன்றேயாம். இவ்வையகம் உய்யவேண்டுமென்பதே அவர்கள் முடிவான நோக்கமன்றி வேறென்னை ?

இத்தகைய நல்லறிஞர் பலர் நந்தமிழ் நாட்டில் மிகப் பழையகாலந் தொட்டே தோன்றி வந்திருக்கின்றனர். அவர்தம் வானளாவிய புகழ் இன்றும் வளர்ந்து கொண்டே போகின்றதன்றோ ? அவர்தம் புகழ்க்கு எல்லை காணப்புகுவது பரம்பொருளுக்கு எல்லை காண்பதற் கொப்பாகும். வள்ளுவர் இவ்வையத்தினின்று மறையும் நாளும் உண்டோ ? அவர் பின் வந்த திருத்தக்கதேவரின் பெருமைதான் என்னே ! இவர்கள் வரலாறு செவி வழக்காய் இந்நாட்டில் வழங்கி வருவதாயினும், அவை முழுதும் உண்மையா என்பது ஐயப்பாடுதான். இவர்களை நன்கு அறியவேண்டுமாயின், இவராக்கிய நூல்களின்கண் ஆழ்ந்து ஆராய்தலே நலமாகும்.

திருத்தக்கதேவர் சமண சமயத்தைச் சார்ந்தவர். தம் நூற்கண் அவர் சமண சமயக் கொள்கைகளை ஆங்காங்கு வலியுறுத்திப் பேசிப் போவதைக் காணலாம். ஆனல் திருவள்ளுவர் எச்சமயத்தைச் சார்ந்தவர் என்று அறுதியிட்டுக் கூற இயலாது. எச்சமயத்தினரும் நம் திருவள்ளுவப் பெருமானைத் தம் சமயத்திற்குரியவராக ஆக்கிக்கொள்ள அவரது ஒப்பற்ற நூல் இடந்தருகிறது. அவர் எல்லாச் சமயத்தையும் விரும்பும் பெருந்தன்மையுடையவர் என்று கொள்வது பொருந்தும். ஆனல் பழுத்த சமணராகிய தேவரின் கண்ணுக்குத் திருவள்ளுவர் சமணராகவே தோன்றியிருக்கலா மன்றோ ?

பெரும்பாலும் எல்லாச் சமயமும் ஒழுக்கத்தினைப் பெரிதும் வலியுறுத்திப் பேசினும், சமண சமயத்திற்கு

ஒழுக்கமே உயிர் நாடியாக அமைவதாம். வள்ளுவனர் அறத்துப்பாலில் அறிவுறுத்தும் ஒழுக்கம், சமண சமயக் கொள்கைக்குப் பெரிதும் ஒத்திருக்கக் காணலாம். காமம், பொய், கொலே ஆகிய இம்மூன்றையும் சமண சமயம் கடிந்து பேசுகின்றது. திருவள்ளுவரும் தம் நூலின்கண் கூடாவொழுக்கம் என்ற அதிகாரத்தால் காமத்தை யும், வாய்மை என்ற அதிகாரத்தால் பொய்மையையும், கொல்லாமை என்ற அதிகாரத்தால் கொலேயையும் விலக்குகின்ருர். இம்மூன்றையும் ஒருசேரக் கடிதலே சிறந்த அறமாம். இவற்றைக் கடிதலாகிய இம்மூன்று அறங்களுள் கொல்லாமையே சமண சமயத்திற்குச் சிறந்ததாகும். இவ்வறத்திணேயே திருவள்ளுவரும் தம் நூலின்கண் ஏனேயவற்றைக் காட்டிலும் சிறந்ததாக எடுத்துரைக்கின்ருர். "பொய்யாமை பொய்யாமை ஆற் றின் அறம்பிற—செய்யாமை செய்யாமை நன்று," என்று பொய்யாமையாகிய அறத்தின் மேன்மையினேத் துணிந்து சொன்ன திருவள்ளுவர், "ஒன்ருக நல்லது கொல்லாமை மற்றதன்—பின்சாரப் பொய்யாமை நன்று," என்று முடிவிலே பொய்யாமையினும் கொல் லாமையாகிய அறமே விழுமியதென்பதைக் கூறுவதைக் காண்க. தவிர, "ஊழ்விணே யுறுத்துவந் தூட்டும்," என்பது சமண சமயத்தின் முக்கியமான அறிவுரை யாகும். திருவள்ளுவரும் தம் நூலகத்து அறத்துப் பாலின் இறுதியில் ஊழ்வலியை விரித்துரைக்கின்ருர். இதனல் ஊழ்வழி உயிர்செல்லும் என்பது அவரது கருத் தென்பது தெளிவாம். இங்ஙனம் திருவள்ளுவர் கருத்து சமணசமயக் கொள்கைகளுக்கு முற்றிலும் ஒத்திருப் பதைக் கண்ட திருத்தக்க தேவர், அவரைச் சமணப் பெரியாராகவே கொண்டிருக்கலாம் என்று எண்ணுவதில் இழுக்கொன்று மில்லே.

திருத்தக்கதேவர் ஒரு சிறந்த துறவி. அவர் இடையிலே துறந்தவ ரல்லர்; இளமையிலேயே துறந்தவர். அப்புலவர் பெருமான் யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை முதலியவைகளை எல்லாம் தெள்ளிதிற் புலப் படும்வண்ணம், 'நரி விருத்தம்' என்ற தொரு நூலை இயற்றினார் என்று அவர்தம் வரலாறு செப்புகின்றது. இத்தகைய துறவியாயிருந்தும், காமச்சுவை நிரம்பிய சீவகசிந்தாமணியை அவர் இயற்றுதற்குக் காரணம் என்ன ? திருவள்ளுவர் அவரை மயக்கிவிட்டார் போலும்! வள்ளுவனார் பெண்ணைப் புகழ்கின்றார்; பொன்னைப் புகழ்கின்றார்; மண்ணைப் புகழ்கின்றார்; மன்னனைப் புகழ்கின்றார். இவற்றையெல்லாம் கண்ட தேவர் மனமும் ஏன் மாறியிருத்தல் கூடாது ?

தாம் அவ்வின்பத்தைத் துய்க்காமற் போயினும் உலகமக்களாவது சால நுகர வேண்டுமென்ற பெரு நோக்கங்கொண்டு தேவர் சிந்தாமணியைச் செய்தார் போலும். காமச்சுவையை எடுத்துரைப்பதில் திருத்தக்க தேவர் திருவள்ளுவரையும் விஞ்சுகின்றார் என்பதைச் சிந்தாமணியைப் படிப்போர் நன்குணரலாம். எழில்நலம் வாய்ந்த நங்கையர் எண்மரைச் சீவகனுக்கு மணம் செய்விக்க வந்த திருத்தக்க தேவர், அந்நங்கையர் அழகிலே தம் கருத்தையெல்லாம் பறிகொடுத்துப் பாடுகின்றார். அந்தோ, திருத்தக்க தேவரின் திருவுள்ளத்தையுமா திருவள்ளுவர் இங்ஙனம் மாற்றிவிட்டார் ?

இவ்வுலக இன்பத்தை ஆரத் துய்த்தாலன்றி, மக்களுயிர் பக்குவப்படாது என்பது இப்புலவர் பெருமக்களின் கருத்தாகும். போகம் துய்க்கத்துய்க்க உயிரானது பண்பட்டு முடிவில் போகத்தின் சிறுமையையும், முத்தியின் பெருமையையும் உணரவல்ல தாகின்றது. இங்ஙனம் உணர்ந்த உயிர் உடனே முத்திக்கு வழியாகிய துறவறத்

தினை விடாதுபற்றி வீடுபேறெய்துவ தாகும். திருவள்ளுவர் இல்லறங் கூறிய பின்னர், துறவறங் கூறுவதும் இக்கருத்துப் பற்றியேயாம். 'அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை; யஃதும் பிறன்பழிப்ப தில்லாயின் நன்று' என்ற குறள் ஒன்ருலேயே இல்லறத்தின்பாலுள்ள திருவள்ளுவரின் மனப்பான்மையைத் தெரிந்துகொள்ளலாம். அறுபதினுயிரம் மனைவியை மருவி வாழ்ந்தான் தயரதன். பேரின்பத்தினைத் திளைத்தவருள் அவனினும் மிக்கவர் யாவர்? ஆனல் அதன்கண்ணேயே அவன் ஆழ்ந்துவிடவில்லை. அவ்வின்பத்தில் நனி தோய்ந்து அதன் பயனுய் அவன் அதனைக் கடந்தான் என்பதை,

'...........கருத்து முற்றத்
தோய்ந்தே கடந்தான் திருவிற்
றொடர் போக பௌவம்'

என்று கம்பர் உரைக்கின்ருர். இன்பத்தில் தோய்ந்து பின்னர் அதன் விளைவாய் ஈடேறவேண்டும் என்பதைச் சீவகன் வரலாறும் உணர்த்துகின்றது. சோலைகாப்பான் ஒருவன் மந்தியின் கையிலிருந்து பலாச்சுளையைப் பிடுங்கித் தான் உண்ட காட்சியைக் கண்ட சீவகன், 'கைப்பழமிழந்த மந்தி அரசை யிழந்த கட்டியங்காரனை ஒத்தது; இச்சோலைகாவலன் அக்கட்டியங்காரனைத் துரந்து அரசை யெய்திய என்னை யொத்தனன். வலியான் கவர்ந்து நுகர்தற்குரிய இச் செல்வத்தால் அடையும் பயனென்னை?' என்றெண்ணித் துறவறத்தின்மேல் விழைவுகொண்டான். இச்சிறிய நிகழ்ச்சி சீவகன் கண்ணைத் திறந்தது. நாம் இக்காலத்தில் இதைவிடப் பெரிய நிகழ்ச்சிகளைக் காண்கிருேம். ஒரு நொடியில் பல்லாயிரம் மக்களைத் துகளாக்கும் அணுக்குண்டினை

அறிந்தும் நம்முடைய கண் திறந்தபாடில்லையே! சீவகன் உலக இன்பம் நிறைபட நுகர்ந்ததின் பயனு லன்றோ அவன் அதன்பால் வெறுப்புற்றுத் துறவு பூண்டான்?

திருவள்ளுவர் வயப்பட்ட திருத்தக்கதேவர் தம் நூலின்கண் அவரை விடாது பின்பற்றிச் செல்கின்றார். உலகவாழ்வினுக்கு இன்றியமையாதது பொருளாகும். பொரு ளில்லையாயின், அறத்தினையும் இன்பத்தினையும் எய்த இயலாது. அறமியற்றுவதும், இன்பந் துய்ப்பது மன்றோ இந்நிலவுலக வாழ்வு? எனவே அவை பெறு தற்குக் காரணமாய பொருளின் பெருமையை ஓர்க.

'அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு,'

என்ற மொழிகளால் பொருளின் இன்றியமையாமையை வள்ளுவனார் எடுத்துரைக்கின்றார். வள்ளுவர் வழிசெல் லும் திருத்தக்கதேவர் துறவியாயினும், மக்களுக்கு இன்றியமையாப் பொருளினை இகழ்ந்துரைக்கத் துணி வாரோ? தன்னை ஈன்றெடுத்த தாயினைச் சீவகன் பல் லாண்டுகள் கழித்து நேரிற் கண்டபோது தாயாகிய விசயை,

'வென்றி யாக்கலும் மேதக ஆக்கலும்
குன்றி னார்களைக் குன்றென ஆக்கலும்
அன்றி யுங்கல்வி யோடழ காக்கலும்
பொன்துஞ் சாகத்தி னாய்! பொருள் செய்யுமே,'

என்றும்,

'பொன்னி னாகும் பொருபடை யப்படை
தன்னி னாகும் தரணி தரணியிற்
பின்னை யாகும் பெரும்பொரு ளப்பொருள்
துன்னுங் காலைத் துன்னாதன இல்லையே,'

என்றும் செல்வத்தின் பெருமையினைச் சொல்லி, 'இத் தகைய செல்வம் குன்றியுள்ள நீ எங்ஙனம் கட்டியங்கார ேைடு போர்தொடுக்க இயலும்?' என்ருள். இதனுல் செல்வத்தின் சிறப்பினைத் தேவர் உலகத்தார்க்குத் தெள்ளிதின் உரைக்குமாற்றை உணர்க.

மக்களின் ஆக்கத்திற்கு உறுதுணையாய இச்செல் வம் ஒரு நாட்டு மக்கள் அனைவரும் பெறுதற் குரியராவர். ஒரு சிலர் எண்ணரிய பொருள்பெற்று இன்பந் திளைப் பதும், ஏனையோர் அஃதின்றி அல்ல லுழப்பதும் நீதி யன்று. பல்லோர் பசிப்பிணியால் வாடப் பெருஞ்செல் வர் சிலர் தாமே போகந் துய்ப்பது பெரும் பாதகமாம். பொருளுடையார் அஃதில்லார்க்கு உதவி எல்லோரும் இன்புறச் செய்த லன்றே தலையாய அறம்?

'ஈத லிசைபட வாழ்த லிவையல்ல(து)
ஊதிய மில்லை யுயிர்க்கு,'

என்ற வள்ளுவர் மொழிகளை ஆராய்மின். தான் பெற்ற பொருளை ஒருவன் பிறர்க்குப் பகுத் தீந்து பின்னர் தான் உண்பதே வள்ளுவர் வகுக்கும் இல்லற மாகும்.

'பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்,'

என்பது குறள். திருத்தக்க தேவர் பகுத்துண்ணுதவனைப் பெரிதும் அச்சுறுத்துகின்ருர்.

'மல்லல் மலையனைய மாதவரை வைதுரைக்கும்
பல்லவரே யன்றிப் பகுத்துணப் பாவிகளும்
... ... ... ... ... ...
வில்பொரு தோள்மன்ன விலங்காய்ப் பிறப்பவே'

என்ற அவருடைய செய்யுளால் பகுத்துண்ணுதவனும் பாவியாகி விலங்காய்ப் பிறப்பான் என்பதை அறிக.

பொருள் பெற்றாலன்றி இன்பத்தினையும் அறத்தினையும் பெற இயலாதென்பதை முன்னர் கண்டோம். இன்பத்திற்கு அடிப்படை காதல். கனிந்த அன்பன்றோ காதலெனப்படுவது? இக்காதலைப் போற்றியுரைக்காத கவிஞன் யார்? திருவள்ளுவர் காதலைச் சிறப்பித்துக் கூறுவதில் வியப்பில்லை? அவர் வாசுகி யென்னும் பொற்புடைச் செல்வியை மருவி வாழ்ந்தவர் என்பர். ஆனால் காம இன்பத்தைக் கடிந்து நல்லிளமை முழுதும் நனிவாடத் துறவுபூண்ட திருத்தக்கதேவர் காதலின் நுணுக்கத்தைத் தம் நாவாரப் பேசுவாரானால், காதலின் பெருமைதான் என்னே! சீவகன் கனகமாலையை மணந்து ஏமமாபுரத்தே இருந்தபோது, அவனுடைய தோழர்களில் ஒருவனான புத்திசேனன் காந்தருவதத்தை யெழுதிய ஓலையை அவனுக்குக் கொடுத்தான். அதன்கண்,

'நோக்கவே தளிர்த்து நோக்கா திமைப்பினு நுணுகு நல்லார்
பூக்கம ழமளிச் சேக்கும் புதுமண வாள னார்தாம்
நீப்பிலார் நெஞ்சி னுள்ளா ராதலால் நினைத்தல் செய்யேன்
போக்குவல் பொழுதுந் தாந்தம் பொன்னடி போற்றி,'

என்று புலவிச் சொற்கள் பொருந்தியதாய்த் தத்தை எழுதியிருந்ததைச் சீவகன் கண்டு தான் அவளைப் பல நாள் பிரிந்திருந்தமைக்கு நாணித் தலை சாய்த்தான். இச் செய்யுளுள் '*நோக்கவே தளிர்த்து நோக்கா திமைப்பினு நுணுகு நல்லார்*,' என்று தலையாய காதலின் இயல்பு பேசப்படுகின்றது. காதலன் தலைவியை இடைவிடாது நோக்கியிருக்க வேண்டுமென்பதும், அவன் இமைக்கும் நேரம் அவளைப் பாராதவனாகிறான் ஆகையால் அதனையும் அவள் பிரிவெனக் கருதிப் பொறுக்க இயலாதவளாகிறாள் என்பதும் இதன் கருத்தாகும். இங்ஙனம் காமச்சுவை நிறைந்த பாடல்கள் பல சிந்தா

மணியில் காணலாம். முற்றத் துறந்த முனிவராம் திருத்தக்கதேவர் இவ்வாறு காதலின் நுட்பத்தினைச் சுவைபட உணர்த்துதலைக் கண்ட சிலர், 'சிற்றின்ப அனுபவ முடையார்க்கே இவ்வாறு பாட இயலும் ஆகலான், தேவரும் அவ்வனுபவ முடையவர்போலும்,' என்று ஐயுற்றனர். இதனை யறிந்த தேவர் தம்முடைய செயற் கருஞ் செய்கை யொன்றால் தாம் மாசற்றவர் என்பதை உலகறியச் செய்தார் என்று அவர் வரலாறு செப்புகின்றது. இங்ஙனம் தம் ஒழுக்கத்தின்பாலும் ஐயங் கொள்ளுமாறு காதற் சுவையினைத் தேவர் மிகுத்துக் கூறும் பாடல்கள் படித்து இன்புறற்பாலன.

இத்தகைய கனிந்த காதல் மனைவியோடு நில்லாமல் மாநிலத்தின் மற்ற உயிர்களின்பாலும் செல்லவேண்டு மென்பது புலவர்களின் விருப்ப மாகும். இங்ஙனம் பரவின் காதல் அருளாக மாறிவிடுகிறது. அன்பு காதலாகி, அவ்வருள் உலகமுழுதும் நிறையுமாயின், இம்மண்ணுலகம் பொன்னுலகினும் சிறந்து விளங்கு மன்றோ ? உலகினுக்கு இவ்வுயர்வினைத் தரவே திருவள்ளுவர் திருக்குறள் இயற்றினர். அவரைப் பின்பற்றிய திருத்தக்கதேவர் சித்தாமணியைச் செய்தார்.

இனி, பொருளைக்கொண்டு இன்பம் பெற்ற ஒருவன் அதனோடு அமையாது சீரிய அறம் இயற்றுதல் வேண்டு மென்று புலவர் பெருமக்கள் இப்புவியினுக்கு அறிவுறுத்துகின்றனர். இல்லறத்திற்குப் பகுத்துண்டலே தலையாய அறமாகும்; துறவறத்திற்கு இன்றியமையாத அறம் கொல்லாமையாம்.

'தன்னுயிர் தான்பரிந் தோம்பு மாறுபோல்
மன்னுயிர் வைகலு மோம்பி வாழுமேல்
இன்னுயிர்க் கிறைவனாய் இன்ப மூர்த்தியாய்ப்
பொன்னுயி ராய்ப்பிறந் துயர்ந்து போகுமே,'

என்ற திருத்தக்க தேவர் மொழிகளால் கொல்லாமையின் சிறப்பு விளங்கும்.

‘ பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை,’

என்பது குறள்.

இங்ஙனம் இவ்விருபெரும் புலவரும் உலகம் உய்ய வேண்டு மென்ற தண்ணளியால் ஒப்பற்ற அறத்தினை ஓதுகின்றனர். இவ்வறமும் பொருளும் இன்பமும் நாட்டில் நல்லரசாட்சி யின்றேல் நிலவா. நாட்டிற்குத் தன்னுயிர் போல மன்னுயிர் ஓம்பும் மன்னன் வேண்டும். இத்தகைய அரசன் ஆட்சிக்குட்பட்ட நாடே இன்பம் தழைத்து ஓங்குவ தாகும். கண்ணுங் கருத்துமாய் ஆளும் காவலர்கள் அருகிவிட்டமையால், இக்காலத்தில் உல கெங்கும் கோனாட்சி குலைந்து, குடியாட்சி ஓங்கி வரு கிறது. குடிகள் குறையுருவண்ணம் ஆளும் அரசன் வழி உலகம் நிற்பதாகும். இதனை,

‘ குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு,’

என்ற குறளால் வள்ளுவர் உணர்த்துகின்றார். ஆகலின் குடி பழியா வண்ணம் ஓம்புதல் கொற்றவன் கடனாகும். இதனா லன்றோ உலகினை வெறுத்துத் துறவுபூண்ட சீவகன் தன் மகனுக்கு முடிசூட்டி,

‘ குடிபழி யாமை யோம்பிற் கொற்றவேல் மன்னர் மற்றுன்
அடிவழிப் படுவர் கண்டாய் அரும்புகழ் கெடுத லஞ்சி
னொடியலோ ரெழுத்தும் பொய்யை நுண்கலை நீத்தம் நீந்திக்
கொடியெடுத் தவர்க்கு நல்கு கொழித்துணர் குமர,’

என்று அறிவுரை கூறினான்.

நல்லரசனுக்குட்பட்ட நாடு பலவித இன்பங்களுக்கு உறைவிடமாகி முடிவில் பொன்னுடாக மாறும். சச்சந்தன் ஆண்ட ஏமாங்கத நாடு தன்னின்பத்தை உலகத்தார்க்குத் தருதற்கு விண்ணுலகமே மகிழ்வோடு கீழே வீழ்ந்து இருந்தது போலத் தோன்றிய தென்பதை,

'வெற்ற இன்பம் விளைவிப்பான் விண்ணு வந்து வீழ்ந்தென
மற்ற நாடு வட்டமாக வைகு மற்ற நாடரோ,'

என்ற இவ்வடிகளால் திருத்தக்கதேவர் விளங்க வைக்கின்றார். இதனால் சச்சந்தன் ஆட்சிக்கீழ் ஏமாங்கத நாடு அறம் பொருள் இன்பம் ஆகிய மூன்றும் செவ்வனே வளரப்பெற்று எல்லையற்ற சிறப்பெய்தியது என்பதை உணரலாம்.

'முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்'

என்றபடிச் சச்சந்தனை அந்நாட்டு மக்கள் தம் கடவுளாகவே கொண்டிருக்க வேண்டு மன்றோ? இத்தகைய கோனாட்சி இருக்குமாயின், குடியாட்சி எற்றுக்கு? இவ்வாட்சியே யாண்டும் நிலவ வேண்டும் என்று வள்ளுவரும் தேவரும் தத்தம் நூலின்கண் வலியுறுத்துகின்றனர்.

திருத்தக்க தேவர் திருவள்ளுவரின் கருத்துக்களையும், சொற்றொடர்களையும் தம் நூலில் பல இடங்களில் அமைத்துப் பாடியுள்ளார். சிந்தாமணி திருக்குறளுக்கு ஒரு விரிவுரை போன்றதெனின் தவறாகாது. சீவகன் இலக்கணையை மணந்த பின்பு நகர் வலம் வந்தான். அவனது திருமேனி யழகினைத் தங்கண்ணால் காண நங்கைமார்கள் தம் மாளிகையின் மேனிலையைச் சேர்ந்தார்கள். அங்ஙனம் சேர்ந்த அப் பாவையரின் மெல்லிய இடை பெரிதும் வருந்தியதாம். நங்கைமார்கள் தம்

உறுப்புக்களுக்கெல்லாம் அணிகலன்கள் அணிவித்து நுண்ணிய இடைக்கு ஒன்றும் அணியாது விடுத்தனர். இதனைக் குறித்து, 'உலகத்தில் செல்வர்க்குத்தான் மாந்தர் சிறப்புச் செய்வர்; வறுமையுற்றார்க்குச் சுற்றம் ஏது? வறுமையுற்ற என்னைப் புறக்கணித்தன்றோ ஏனைய செழுமையுற்ற உறுப்புக்களுக்கு அணிகலன்களை இம் மங்கையர் ஈந்தார்கள்?' என்று சொல்லி வருந்தும் இடையையுடைய இளநங்கையர் சீவகனைக் காண மாடம் சேர்ந்தார்கள்.

இதன்கண்,

'இல்லாரை யெல்லாரும் எள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு,'

என்ற திருக்குறளின் கருத்து அமைந்திருப்பதைக் காண்க.

சீவகன் மாமனாகிய கோவிந்தராசனை இராசமாபுரத்திற்கு வரும்படி வேண்டி அவனுக்குக் கட்டியங்காரன் ஒரு வஞ்சக ஓலையை அனுப்பினான். அதனை விரிசிகன் என்பான் படிக்கக் கேட்ட சீவகன்,

'காலனை யளியன்றானே கையினால் விளிக்கும்,'

என்றான். அஃதாவது கட்டியங்காரன் இவ்வஞ்சக ஓலையை அனுப்பித் தனக்கே இறுதியைத் தேடிக் கொள்கின்றான் என்பது இதன் கருத்தாம். இவ்வடியிலுள்ள கருத்து,

'கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்
காற்றாதார் இன்னா செயல்,'

என்ற குறளோடு ஒத்திருக்கின்றதன்றோ?

இலக்கணை திருமண மண்டபத்திற்கு வருவதைக் கண்ட மன்னரெல்லாரும் அவள் அழகிய வடிவை நோக்கிக் காதல் மிகுந்தவராய்,

'கண்ணினல் இன்று கண்டாங் கூற்றினைக் காமர் செவ்வாய்
ஒண்ணுதல் உருவக் கோலத் தொருபிடி நுசுப்பிற் றீஞ்சொல்
... ... ... ... ... ... ... ... ... ... ...
பெண்ணுடைப் பேதை நீர்மைப் பெருந்தடங் கண்ணிற் றம்மா.'

என்றார். இச்செய்யுளில்,

'பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு,'

என்ற குறள் எடுத்தாளப் பெற்றிருக்கின்றதன்றே ?

இதுகாறும் கூறியவற்றால் வள்ளுவரும் தேவரும் ஒன்றிய நோக்கம் உடையவர் என்பது புலனும். இவ்விருநிலம் பெருநெறியில் நின்று பயனடைய வேண்டுமென்பதே அவர்தம் பெருநோக்கம். இப்புலவர்களின் பொன்னுரைகள் பொதிந்த அவர்தம் ஒப்பற்ற நூல்களைத் தேர்ந்து இவ்வுலகம் உய்வதாக!

2

# பண்டைத் தமிழர் காதல் ஒழுக்கம்

காதல் இல்லையேல் இக்காசினி இல்லை. இந்நிலவுலகத்தில் காதல் தொன்றுதொட்டு இருந்து வருவதால்தான் இவ்வுலகம் நிலைத்துவருகிறது. இந்தக் காதல் இல்லாமல் இருந்திருப்பின் இவ்வையகம் எப்போதோ அழிந்து, குலைந்து, சிதைந்து மண்ணோடு மண்ணாய் மறைந்துபோய் இருக்கும். இத்தகைய உயர்ந்த காதலைப் பற்றிச் சங்க இலக்கியங்கள் பரக்கப் பேசுகின்றன.

உலகின் சிறந்த மொழிகள் அனைத்திலும் எழுத்திற்கு இலக்கணம் உண்டு; சொல்லுக்கு இலக்கணம் உண்டு; ஆனால் வாழ்க்கைக்கு இலக்கணம் அமிழ்தினு மினிய நம் அருமைத் தமிழ் மொழியைத் தவிர, வேறு எந்த மொழியிலும் கிடையாது. இத்தகைய தனிச் சிறப்புப் பெற்றது நமது தமிழ். நம்

பண்டைப் பெருமக்கள் வாழ்க்கையைக் கூர்ந்து ஆராய்ந்தனர். அதனை இருபெரும் பகுதியாகப் பகுத்தனர். ஒன்று காதல் வாழ்க்கை ; மற்றொன்று வீர வாழ்க்கை. காதல் வாழ்க்கையை அகம் என்பர் ; வீர வாழ்க்கையைப் புறம் என்பர். காதல் வாழ்க்கை, வீர வாழ்க்கைக்கு அடிப்படை என்பது சங்க இலக்கியத்தைக் கூர்ந்து நுண்ணிதின் ஆராய்வார்க்குப் புலனாகும்.

அழகாலும், திருவாலும், கல்வியாலும், ஒழுக்கத்தாலும், குலத்தாலும் ஒத்த தலைவனும் தலைவியும் ஒரு தனியிடத்தே தற்செயலாய்ச் சந்திப்பர். இருவர்தம் உள்ளமும் ஒன்றுபடும். இருவர்தம் மாண்புமிக்க மலர் விழிகள் மகிழ்ந்து பேசும். தலைவன் தலைவியை நோக்கி, 'என் இன்னுயிரே, அமிழ்தே, நான் உன்னைப் பிரியேன்; பிரிந்தால் உயிர் தரியேன்,' என்று உறுதியளிப்பான்; உறுதி யளித்துப் பிரிவான். அடுத்த நாளும் அதே இடத்தில் தலைவியைச் சந்திப்பான்; மேலும் அடுத்துப் பல நாட்கள் சந்திக்க முயல்வான். ஆனால், தலைவியோடு அவனுடைய இன்னுயிர்த் தோழி இடையுறாது இருப்பாள். எனவே தோழிக்குத் தனது காதல் தன்மையைத் தெரிவித்துத் தோழியின் துணைகொண்டு தலைவியைச் சந்திப்பான். தோழி ஓர் இடத்தைத் தலைவனுக்குக் குறிப்பிடுவாள்; அவ்விடத்திற்குப் பகல் நேரத்தில் குறிப்பிட்ட காலத்தில் தலைவனை வரும்படியாகச் சொல்வாள்; தலைவியை அவ்விடத்திலே கொண்டுபோய்ச் சேர்ப்பாள். இதற்குப் 'பகற்குறி' என்பது பெயர்.

இங்ஙனம் காதல் ஒழுக்கம், களவொழுக்கமாகப் பல காலம் நிகழும். ஊரார் அறிவர். ஊரார் அறிந்த பின் பெற்றோர்கட்கும் தலைவன் தலைவியரது களவொழுக்கம் தெரிந்துவிடும். உடனே தலைவியைத்

தலைவியின் பெற்றோர்கள் வீட்டிலே அடைத்து விடுவார்கள். இதற்கு 'இற்செறிவு' என்று பெயர். தலைவனைக் காணாது தலைவி பெரிதும் மனங் கவல்வாள். அவள் இன்னுயிர்த் தோழி அவளுக்குத் துணைசெய்வாள்; இரவு நேரத்திலே, ஒரு குறிப்பிட்ட இடத்திலே தலைவனை வரும்படியாகச் சொல்வாள்; அந்த இடத்திலே தலைவியைக் கொண்டுய்ப்பாள். இதனை 'இரவுக்குறி' என்பர்.

தலைவன் இரவு நேரத்திலே வருவதைக் குறித்துத் தலைவிக்கு மனவருத்தம் மிகும். அக்காலத்திலே தலைவன் காட்டுவழியாக நடந்து வரவேண்டும். காட்டிலே புலி, சிங்கம், யாளி, அரவு முதலிய கொடிய விலங்குகளால் தலைவனுக்கு ஏதம் நேருமோ என்று அஞ்சுவாள் தலைவி. எனவே, உடனே திருமணத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று தலைவி தலைவனுக்கு உணர்த்துவாள். தலைவன், தலைவியின் பெற்றோரை அணுகிப் பெண்வேண்டி நிற்பான்; பெற்றோர்கள் சம்மதித்தால் தலைவன் தலைவியது ஊரிலேயே மணமுடிப்பான்;அவர்கள் அதற்கு இசைவு தாராராயின்,தலைவியை அவன் உடன்கொண்டுசென்று தன்னுடைய ஊரிலேயே மணம் செய்து கொள்வான். இங்ஙனம் திருமணம் நடைபெறும் வரை நிகழும் ஒழுக்கம் 'களவொழுக்கம்' எனப்படும். தலைவன் தலைவியைச் சந்தித்து நிகழ்த்துகின்ற களவு ஒழுக்கம் குறிஞ்சி எனப்படும்.

திருமணம் நடைபெற்ற பிறகு தலைவனும் தலைவியும் இல்லறத்திலே புகுவர். இல்லறம் இனிது நடைபெறப் பொருள் வேண்டுமன்றோ? அந்தப் பொருளின் பொருட்டுத் தலைவன், தலைவியைப் பிரிவான்; அல்லது அரசியல் காரியமாகப் பிரிவான்; அல்லது கல்வியின் பொருட்டுப் பிரிவான். தலைவன் இதுவரை கல்லாத

வனு? கற்றவன்; புலமை மிக்கவன்; எனினும் இந்தக் காலத்திலே புலமைப் பட்டம் பெற்ற பிறகும் உயர்தரப் பட்டம் பெற (Post graduate Study) மேலைநாடுகட்குப் போவது போல, அந்தக் காலத்திலும் மேலும் புலமை பெறுதற்கு வெளியூர்கட்குச் சென்று கல்வி கற்பதுண்டு; இதற்குப் 'பாலை' என்று பெயர். தலைவியைப் பிரிகின்ற நிலை பாலை.

தலைவன், தலைவியைப் பிரிந்து செல்லும்போது, 'நான் கார் காலம் வருவதற்கு முன்னே வந்துவிடுவேன்' என்று தலைவிக்கு உணர்த்துவான். தலைவி, தலைவன் குறித்த காலம் வரை அவன் பிரிவை ஆற்றி யிருப்பாள். இங்ஙனம் அவள் ஆற்றி யிருக்கும் நிலையை 'முல்லை' என்பர்.

கார்காலம் வரும்; அடுத்துக் குளிர்காலமும் நெருங்கி விடும். ஆனால் தலைவன் வரமாட்டான். தலைவிக்கு ஆற்றாமை மீதூரும். இங்ஙனம் ஆற்றாமை மிகுந்து அவள் அரற்றுவாள். தலைவி அரற்றலைக் 'காமம் மிக்க கழிபடர் கிளவி' என்பர். தலைவியின் ஆற்றாமையாகிய இந்நிலை 'நெய்தல்' எனப்படும்.

பிரிந்து சென்ற தலைவன் திரும்புவான். தலைவனும் தலைவியும் இல்லறத்தைச் செழிக்க நடாத்துவார்கள். இடையிலே தலைவன், தலைவியை விட்டுப் பரத்தையர் பால் பிரிவான். அந்தக் காலத்திலே பரத்தையர்கள் உண்டு என்பதை நம் பண்டை இலக்கண இலக்கியங் கள் செவ்வையாக எடுத்தியம்புகின்றன. பரத்தமை தீய ஒழுக்கம்—கூடா ஒழுக்கம். எனினும், அதற்கும் நம் பண்டைப் பெருமக்கள் தாம் கண்டதற் கொப்ப இலக் கணம் வகுத்தனர்; இலக்கியம் இயம்பினர். நம் பண் டைச் சான்றோர் தாம் கண்ட உண்மைகளை உள்ள வாறே சொன்னவர்கள் என்பதற்கு இஃது ஓர் ஒப்பற்ற

சான்ரும். எனவே, சங்க இலக்கியங்களில் காணப்படுவ தெல்லாம் முற்றும் உண்மை என்பது போதரும்.

தலைவன் பரத்தையரிட மிருந்து பிரிந்து வருவான்; ஒரு பெண் எதை வேண்டுமாஞலும் பொறுத்துக்கொள் வாள். ஆஞல் தன் கணவன் மற்ரெருத்தியை நாடு வதைப் பொறுக்கமாட்டாள். எனவே தலைவி ஊடல் கொள்வாள். ஊடல் கொள்ளும் நிலைதான் மருதம்.

இது சங்க இலக்கிய இலக்கணங்களில் காணப்படு கின்ற அகப்பொருட் சுருக்கம். இனி, சங்க இலக்கியங் களிலே ஒன்றிரண்டு சான்றுகள் காண்போம்.

தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றுவிட்டான் ; தலைவி அதஞல் பெரிதும் வாடுகிருள்; வருந்துகின்ருள்; மெலிகின்ருள். தோழி அதனைக் காண்கின்ருள்; 'ஐயோ, இத்தகைய கொடியவஞ தலைவன்? தலைவியைப் பிரிந்து இத்துணைக் காலம் வாழ்கின்ருனே! தலைவி வேதனை எவ்வளவு!' என்று பெரிதும் நோகின்ருள்; அவள் தலைவனை ஏசுகின்ருள்; பழிக்கின்ருள். கற்புடைய மனைவி பிறர் எவரும் தன் கணவனைப் பழிப்பதைப் பொறுக்கமாட்டாள். அவள் உள்ளத்திலே கற்புக்கனல் எழுந்து இகழ்வாரைச் சுட்டுவிடும். அத்தகைய கற்பு வாய்ந்தவர் பண்டைக்காலப் பெண்டிர். தோழி தன் கணவனை இகழ்ந் துரைத்தமைக்காகத் தலைவி உளம் நோகின்ருள்.அவள் தோழியை நோக்கி, "என்னருமைத் தோழியே, ஏன் தலைவர் பிரிந்தார்? எதற்காகப் பிரிந் தார்? எப்படிப் பிரிந்தார்? தெரியுமா? பிரிகின்றகாலை யிலே என்னை அருகழைத்தார்; என்னுடைய நீண்ட கரிய கடை குழன்ற கூந்தலைத் தடவிஞர். தடவி, 'என்னருமைத் தலைவியே, ஆரமுதே, நம் வாழ்க்கை சிறக்கவேண்டுமாயின், சிறந்த பொருள் பெறுதல் வேண்டும். நம்முடைய வாழ்க்கையிலே பாவச் செயல்

பொருந்தாது இருக்கவேண்டுமானல், அல்லது நாம் பிறருடைய உதவியை ஏற்று நடக்காமல் இருக்க வேண்டுமானல், அதற்குப் பொருள் தேவை. அப் பொருளுக்காக நான் பிரிகிறேன்,' என்று இயம்பினர். நம் நலத்திற்காக அவர் பிரிந்தார். ஆகையால் நாம் அவர் பிரிவால் எவ்வளவு துன்பம் உழல்வே மாயினும், அவர் ஓர் இடையூறும் இன்றி இனிதே பொருளீட்டி வருவாராக!'' என்கிருள் தலைவி.

''அறன்கடைப் படாஅ
வாழ்க்கையும் என்றுநம்
பிறன்கடைச் செலாஅச்
செல்வமும் இரண்டும்
பொருளின் ஆகும்
புனையிழை என்றுநம்
இருளேர் ஐம்பால்
நீவி யோரே
நோய்நாம் உழக்குவ
மாயினும் தாந்தம்
செய்வினை முடிக்க
தோழி................''

என்ற இந் நெடுந்தொகைப் பாடல் கனிந்த காதல் தன்மையை உணர்த்துகின்றது.

ஒரு தலைவன் தலைவியைப் பிரியவேண்டிய நிலை ஏற்படுகிறது; அவன் தன் அருமைத் தலைவியிடம் விடைபெற வேண்டி நிற்கிருன். பிரிவுத் துன்பம் மிகக் கொடிது; மனைவியரால் ஆற்றமுடியாத தொன்று. தலைவன் பிரிவைக் கருதித் தலைவியின் உள்ளம் குமுறு கிறது. தலைவி, தன் அருமைச் செல்வனை இடுப்பிலே இருத்திக்கொண்டு நிற்கிருள். அவள் கண்களிலே நீர்ப் பெருக் கெடுக்கின்றது. ஆனல் அந்நீர்ப் பெருக்கை

அவள் வெளிக்காட்டவில்லை; அடக்கிக் கொள்கிருள். அவள் இடுப்பிலே இருத்திக்கொண்டிருக்கும் குழந்தையின் முடிமீது மலர் சூட்டப் பெற்றிருக்கின்றது. அடக்க முடியாத் துன்பத்தால் அவள் பெருமூச்சு விடுகின்ருள். அப்பெருமூச்சு துன்ப மிகுதியால் வெப்பம் வாய்ந்ததாக இருக்கின்றது. அவ்வெப்பத்தால் குழந்தை முடிமீது சூட்டப்பெற்ற மலர் கரிந்து போகின்றது. இதைக் காண்கிருன் தலைவன்; தன் அன்புக் காதலியின் ஆற்ருெணுத் துன்பத்தை உணர்கிருன். உடனே தான் தலைவியைப் பிரிவதில்லை என முடிவு செய்கின்ருன்.

''மோயினள் உயிர்த்த
காலை மாமலர்
மணியுரு இழந்த
அணியழி தோற்றம்
கண்டே கடிந்தனம்
செலவே.........''

என்று தலைவன் கூறும் அகநானூற்று அடிகளில் எத்துணைக் காதல் வெள்ளம் பெருக்கெடுக்கின்றதென்பதைக் காண்மின்.

ஒரு காதலன். அவன் ஒரு வீரன். எத்தகைய வீரன்? 'போரென்ன வீங்கும் பொலங்கொள் திண்தோள்' வீரன் — போரென்ற உடனே பூரித்துப் போகும் தோள்களை உடைய வீரன். அவன் 'மாரன் அனையான்'—மன்மதனுக் கொப்பானவன். அவன் மலர் பறிக்கின்ருன். வீரனுக்கு மலர் பறிப்பதா தொழில்? பொருகளத்தில் நின்றல்லவோ வீரத்தினைக் காட்ட வேண்டும்? மலர் கொய்கின்ருனே! 'மாரன் அனையான் மலர் கொய்திருந்தானை' என்றல்லவோ கம்பன் பாடுகின்ருன்? ஏன் மலர்கொய்கின்ருன்? அவன் சிறந்த காத

லன். காதலன் தன் சொற்படி காதலியை ஆடவைக்க வேண்டுமென்ருல், அதற்குச் சிறந்த வழி ஒன்று உண்டு. காதலிக்கு உகந்த மலரினைக் காதலன் தானே பறித்துவந்து, தலைவியின் கரிய கூந்தலில் தனது கரத்தாலேயே சூட்டவேண்டும். இப்படித் தலைவன் சூட்டிவிடுவானுல், தலைவியின் உள்ளமும், உச்சியும் குளிர்ந்துவிடும். எனவே காதலன் தன் காதலியின் கூந்தலிலே சூட்ட மலர் பறிக்கின்ருன். அப்போது அவன் தலைவி அவனையறியாமலேயே சென்று அவனது கண்ணை மூடுகின்ருள். தலைவன் 'ஆர்' என்கிருன். உடனே தலைவி பதைக்கிருள்; துடிதுடிக்கிருள்; உயிர்க்கிருள். 'ஆர்' என்ற உடனே தலைவிக்கு வருத்தம் மிகுந்துபோய்விட்டது. ஏன்? "அவருடைய கண்களை மூட உரிமை பெற்றவள் என்னைத் தவிர வேறு யார் இருக்க முடியும்? ஆயினும் யார் என்ருரே! எனவே என்னைத் தவிர மற்றும் இவருக்குக் காதலியர் பலர் உண்டு போலும்!" என நினைத்து, 'அனலென்ன அயிர்த்துயிர்த்தாள்.' அவள் நிலையைத் தலைவன் நோக்குகிருன். 'பேதாய்! நான் என்ன சொல்ல நினைத்தேன் தெரியுமா? ஆருயிரே என்று சொல்ல நினைத்து 'ஆர்' எனத் தொடங்கினேன். அதற்குள் இப்படி, 'அனலென்ன அயிர்த்துயிர்க்கிருயே,' என்கிருன்.

'போரென்ன வீங்கும் பொருப்பன்ன
பொலங்கொள் திண்தோள்
மாரன் அனையான் மலர்கொய்திருந்
தானை வந்தோர்
காரன்ன கூந்தற் குயிலன்னவள்
கண்புதைப்ப
ஆரென்ன லோடும் அனலென்ன
அயிர்த்து யிர்த்தாள்'

பாண்டியன் நெடுஞ்செழியன் தன் தேவியைப் பிரிந்து போரின்மேற் சென்றிருக்கின்றான். 'கார் காலத்து வருவேன்' என்றுசொல்லிப் பிரிந்தவன் அவன். கார் காலம் வருகிறது. அடுத்துக் குளிர் காலமும் வரு கிறது. மன்னன் திரும்பவில்லை. எனவே தேவி அரண் மனையிலே பெரிதும் வாடுகின்றாள். பாண்டியன் நெடுஞ் செழியன் முதல் நாள் போரிலே தோற்று, அதனால் அவன் வீரர்களெல்லாம் புண்பட்டுப் பாசறையிலே கிடக்கின்றார்கள். நடு இரவு. பாண்டியன் நெடுஞ்செழிய னுக்குத் தூக்கம் வரவில்லை. ஏன்? காதலியின் நினைவா? இல்லை. 'நள்ளென் யாமத்தும் பள்ளிகொள்ளான்'— நடு இரவிலும் துயில் கொள்ளாது ஏன் திரிகின்றான்? தன்னுடைய வீரர்களெல்லாரும் புண்பட்டுப் பாசறை யில் கிடக்கின்றார்களே என்ற எண்ணம் அவன் உள்ளத்தை வாட்டுகிறது. அவர்களை நேரிலே கண்டு அவர்கட்கு ஆறுதல் கூறவேண்டும் என்ற எண்ணம் எழுகிறது; புறப்படுகின்றான். விளக்கு எரிகின்றது.

> "வடந்தைத் தண்வளி யெறிதொறு நுடங்கித்
> தெற்கேர் பிறைஞ்சிய தலைஇய நற்பல்
> பாண்டில் விளக்கிற் பரூஉச் சுடரழல,"

வாடைக் காற்று வீசுகிறது. விளக்கின் சுடர் தெற்குப் பக்கம் சாய்ந்து தென் திசையைக் காட்டுகிறது. அவனுக்குக் காதலியினது நினைவு வருகின்றது. காதலி தென்திசையில் இருக்கிறாள். 'உன்னுடைய காதலி யைப் பிரிந்து வந்தனையே! அவள் பிரிவுத் துன்பத்தில் வாடுகின்றாளே! உனக்கு அருளில்லையா?' என்று கூறு வதைப் போலச் சுடர் தெற்குப் பக்கத்தில் சாய்ந்து எரி கிறது. அவனுடைய காதல் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, புண்பட்ட போர் வீரர்களுக்கு ஆறுதல் கூறப்

புறப்படுகின்ருன். ஏன்? காதலிபால் அவன் கொண் டிருந்த அன்பு குறைந்துவிட்டதா? இல்லே. அவ னுடைய காதலானது காதலியையும் கடந்து புண்பட்ட வீரர்கள்பால் சென்றிருக்கிறது..

> "இன்னே முடிகதில் லம்ம
> ..............................
> நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
> சிலரொடு திரிதரும் வேந்தன்
> பலரொடு முரணிய பாசறைத் தொழிலே"

என்று நக்கீரர் பாடுகிருர்.

தன் காதலியைக் கடந்து இப்போது தன் வீரரை அடைந்துள்ள பாண்டியன் நெடுஞ்செழியன் அன்பு, தன் பகைவர்மாட்டும் சென்று பொருந்துவதாக என்ற குறிப்பு நக்கீரர்தம் இம்மொழிகளிலே பொதிந்திருப்பது நுண்ணிதின் ஆராய்வார்க்குப் புலனுகும்.

எனவே காதல் என்பது காதலியிடம் மட்டும் இருக்கும் அன்புதான் என்று கொள்ளுதல் கூடாது. நாளடைவிலே அந்தக் காதலானது, காதலியைக் கடந்து, தமரைக்கடந்து, உலகத்தாரை அடையவேண்டும் என்ற நுட்பத்தினைத்தான் சங்க நூல்கள் உணர்த்துகின்றன. இச்சீரிய காதல் - அன்பு - உலகில் நிறைபட இல்லை. இவ் வன்பு யாண்டும் நிறைந்திருக்குமானல், அணுக்குண்டு தோன்றியிருக்காது. நீரகக் குண்டு தோற்றம் செய் திராது. இன்னும் அழிக்கும் கருவிகள் பல தோன்றி யிரா. இதனை நினைந்து பாரதியார்,

> "நாடகத்திற் காவியத்திற் காத லென்ருல்
> நாட்டினர்தாம் வியப்பெய்தி நன்ரு மென்பர்
> ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்ருே ரத்தே
> ஊரினிலே காதலென்ருல் உறுமு கின்ருர்;

பாடைகட்டி யதைக்கொல்ல வழிசெய் கின்றார்;
பாரினிலே காதலென்னும் பயிரை மாய்க்க
மூடரெலாம் பொருமையினுல் விதிகள் செய்து
முறைதவறி யிடரெய்திக் கெடுக்கின் ருரே,''

என்று மனம் பதைத்துப் பாடுகின்ருர்.

இராமன் இலக்குமணனேடும், கோசிகனேடும் மிதிலை வீதி வழியே சென்ருன். திடீரென்று ஒரு சோதி கிளம்பிற்று. தலையை நிமிர்த்துப் பார்த்தான் இராமன். அங்கே அரண்மனையின் கன்னிமாடத்தில் ஓர் ஆரணங்கு நின்றுகொண் டிருந்தாள். இருவர்கண்களும் சந்தித்தன. இருவரும் "மாறிப் புக்கு இதயம் எய்தினர்."

" பருகிய நோக்கெனும் பாசத் தாற்பிணித்(து)
ஒருவரை யொருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக்(கு) இதயம் எய்தினர். ''

இக்காதல் காட்சியைக் காவியத்தில் படிக்கும்போது, நாம் கழிபேருவகை எய்துகிருேம். ஆனல், இத்தகைய காதல் இப்போது வீதியிலும் பூஞ்சோலைப் புதரிடத்தும் இன்னபிற பொது விடங்களிலும் நிகழுமானல், மக்கள் என்ன நினைப்பார்கள்? ஈதென்ன கலிகாலம் என்று குறை கூறுவார்கள்; ஏசுவார்கள்; பழிப்பார்கள்.

உண்மைக் காதலுக்கு உலகில் உரிய இடம் தர வேண்டும் என்பதுதான் பாரதியார் எண்ணம். உண்மைக் காதல் உலகமெலாம் பரவும்வகை நாம் செய்வோமாக! இதுவே உலகம் உய்வதற்கு உகந்த வழி.

3

# உலகை நிலைநிறுத்தும் உத்தமர்

மக்கள் இனம் ஒன்று. ஆனால் இவ்வுலகம் மக்களைப் பல வகையாகப் பகுத்துக் காண்கிறது. ஒரு நாட்டில் வாழும் மக்கள் அந்நாட்டின் பெயரால் அழைக்கப்படுகின்றனர். அந்நாட்டு மக்களுள்ளும் வேற்றுமை பல காணப்படுகின்றன. மொழி, சாதி, சமயம், நிறம் முதலியவைகளால் அவர்கள் பல வகைப்படுகின்றனர். இன்னும் கூர்ந்து கவனித்தால், இவ்வேற்றுமை கிளைத்துக் கொண்டே போவதைக் காணலாம்.

திருவள்ளுவரும் இவ்வுலகத்து மக்களில் வேற்றுமை கண்டார். அவர் கண்ட வேற்றுமைக்கு அடிப்படை நாடு, மொழி, சாதி, சமயம், நிறம் முதலியவைகள் அல்ல. அவர் காண்பது பொதுவாக இரண்டு வகையான மக்களே—சான்றோர், கயவர். நல்ல குணங்கள் யாவும்

நிரம்பியவரை அவர் சான்றோர் அல்லது மேலோர் என்கிறார்; நல்ல குணங்கள் அமையாதவரைக் கயவர் அல்லது கீழோர் என்று கூறுகின்றார். எனவே திருவள்ளுவர் மக்களுக்குள் குணத்தால் வேற்றுமை காண்கிறார். சான்ற என்ற சொல்லுக்குப் பொருள், 'நிறைந்து அமைந்த' என்பது. நல்ல குணங்கள் யாவும் நிறைந்தமைந்த தன்மையைச் சான்றாண்மை அல்லது சால்பு என்பர்.

சான்றோருடைய செயல் எப்போதும் நல்லதாகவும், பெருமைக்குரியதாகவும், பிறர்க்குப் பயன்படுவதாகவும் இருக்கும். கயவரது செயலில் நன்மை சிறிதும் காண முடியாது. 'மக்களுக்குள் பிறப்பால் ஒரு வேறுபாடும் இல்லை. எனினும் அவர்கள் தாம் செய்கின்ற தொழிலால் வேறுபடுகின்றனர்,' என்பது திருவள்ளுவர் கண்ட உண்மை. இதனைப்,

" பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான், "

என்ற குறளில் அவர் நமக்கு அறிவுறுத்துகின்றார். ஒருவன் நல்ல குணம் உடையவனாய் இருந்தால், நல்ல செயலைச் செய்கிறான். தீயகுணம் உடையவனாய் இருந்தால், தீயசெயலைப் புரிகின்றான். இதனால், ஒருவன் புரிகின்ற செயலுக்கு அவனுடைய குணம் காரணமாய் அமைகின்றது என்பது தெளிவாகிறது. எனவே திருவள்ளுவர் மக்களுக்குள் சான்றோர், கயவர் என்ற வேற்றுமையை அவர்களுடைய குணத்தைக்கொண்டு காண்கிறார் எனலாம்.

" சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ். "

இக்குறள் சான்றோர்க்கும் கயவர்க்கும் உள்ள வேற்றுமையை நன்கு புலப்படுத்துகின்றது. ஏழைகள் சான்றோர்களிடம் சென்று தம் குறையைச் சொல்லுவார்களானால், சான்றோர் அவர்கள் நிலைக்குப் பெரிதும் இரங்கித் தம்மிடம் உள்ள பொருளை 'அவர்களுக்கு உடனே கொடுத்துதவி அவர்கள் துன்பத்தைக் களைவார்கள். இதைச் 'சொல்லப் பயன்படுபவர் சான்றோர்,' என்ற மொழிகளால் வள்ளுவர் குறிக்கின்றார். ஆனால் கயவர்களோ இரக்க மற்றவர்கள்; வன்னெஞ்சர்கள். தம்மிடம் உள்ள பொருளில் ஒரு சிறிதும் பிறர்க்குக் கொடுக்க மனம் இசையார். ஆனால் அவர்களிடமிருந்து பொருளைப் பெறுதற்கு ஒரு வழி உண்டு. கரும்பிலிருந்து சாற்றை எடுக்க வேண்டுமானால், அதை நைய நெருக்கிப் பிழியவேண்டும்.' அதுபோலக் கயவர்களிடமிருந்து பொருளைப் பெற வேண்டுமானால், அவர்களை நையப்புடைத்துத்தான் பெறவேண்டும். தாமாகவே மனமிரங்கிக் கொடுக்குந் தன்மை கயவர்களிடம் கிடையாது. இஃது அவர்களுடைய இயல்பு. இக்கருத்தைத்தான் 'கரும்புபோல் கொல்லப் பயன்படுங் கீழ்,' என்ற சொற்களில் வள்ளுவர் நமக்கு உணர்த்துகின்றார்.

உண்மையான சான்றோர் உள்ளத்தில் நிலையான அன்பு குடிகொண்டிருக்கும். அவர்கள் எல்லா உயிர்களிடத்தும் அன்பு பூண்டே ஒழுகுவர். அன்புடைமை அவர்களுக்கு இயல்பாகவே அமைந்துவிடும். அவர்களுக்கு "யாதும் ஊர்; யாவரும் கேளிர்."

தலையாய அன்புடைமைக்குக் கோவலனின் வீரச் செயலைத் தக்க சான்றாகக் கூறலாம். தனக்கும் மாதவிக்கும் பிறந்த குழந்தைக்குக் கோவலன் மணிமேகலை என்று பெயரிட்டுப் பலர்க்கும் பொன்னை வழங்கிக் கொண்டிருந்தான். மிகவும் வயது முதிர்ந்த அந்தணன்

ஒருவன் கோவலனிடம் பொருள் பெறுதற்கு நடந்து வந்துகொண்டிருந்தான். அப்போது கட்டுக்கடங்காத மத யானை ஒன்று அவ்வந்தணனைத் தன் துதிக்கையால் பிடித்துக்கொண்டது. அந்தணனுக்கு நேர்ந்த ஆபத்தைக் கண்டான் கோவலன். உடனே அவன் விரைந்தோடி அந்தணனை யானைத் துதிக்கையிலிருந்து விடுவித்துத் தான் அத் துதிக்கைக்குள் புகுந்து அதன் பிடர்மீது ஏறி அமர்ந்து அதை அடக்கினான். மத யானையை எதிர்த்துப் போரிடுவது பெரிய ஆபத்தன்றோ? எனினும் தன் உயிர்க்கு நேரும் ஆபத்தை ஒரு சிறிதும் பொருட்படுத்தாது, கோவலன் மதயானையை எதிர்த்துக் கிழ அந்தணனைக் காப்பாற்றினான். அவனுக்கு அக்கிழவனிடத்து எவ்வளவு அன்பு ! எவ்வளவு இரக்கம் ! இது சான்றோர் உள்ளப் பண்பு. இப்பண்பினை 'அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு,' என்று கூறி வள்ளுவர் விளக்குகின்றார்.

சான்றாண்மைக்கு இன்றியமையாத மற்றொரு பண்பு நாணம். நாணமாவது செய்யத்தகாத செயலைச் செய்வதற்கு மனம் கூசுதல். செய்யத் தகாத செயலைச் செய்தால், பழிநேரும். இப்பழி நேர்தலுக்கு அஞ்சுதலே நாணம் என்று கூறலாம். உயிர்கள் எல்லாம் உடம்பைத் தமக்கு இருப்பிடமாகக் கொள்கின்றன. உயிர்கள் உடம்பை அடையாமற்போனால், அவைகள் பயனெய்த முடியாது. அதைப்போலவே சான்றாண்மைக்கு நிலைக்களம் நாணம் என்னும் நல்ல குணம். சான்றாண்மை நாணொடு பொருந்தினாலன்றி அது பயனடையமுடியாது. இவ்வுண்மையை,

> "ஊனைக் குறித்த உயிரெல்லாம்; நாண்என்னும்
> நன்மை குறித்தது சால்பு,"

என்ற குறளில் திருவள்ளுவர் விளக்கி உரைக்கின்றார். இதனால் நாணம் எவ்வளவு சிறப்புப் பொருந்திய குணம் என்பது தெளிவாகிறது.

மேலும், நாணுடைமை சான்றோர்க்கு ஆபரணமாக விளங்குவது என்றும், தம் பழிக்கு அஞ்சி நாணுதலே யல்லாமல், பிறர் பழிக்கும் அஞ்சி நாணும் சான்றோரை நாணுக்கு இருப்பிடம் என்று உலகத்தார் போற்றிப் புகழ்வார்கள் என்றும், நாணத்தின் சிறப்பினை வள்ளுவர் விளக்கிச் செல்கின்றார். இவ்வளவு மேன்மை வாய்ந்த நாணினைச் சான்றோர்கள் தம் உயிரினும் போற்றி ஒழுகுவார்கள். அவர்களுக்கு நாணம் பெரிது; உயிர் பெரிதன்று. நாணத்தை விடாமற் போனால், தம்முயிரே போய்விடும் என்ற நிலை ஏற் பட்டாலும், தம் உயிர் கொடுத்து நாணினை நிலை நிறுத்துவர்.

'நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாணாள் பவர்,'

என்று வள்ளுவர் பேசுகின்றார்.

நாணமற்ற மனமுடையவர் மக்கள் ஆகார். எனினும் அவர்கள் மக்கள் போல இயங்குகின்றார்களே! மரத்தினால் செய்த பாவையைக் கயிற்றினால் இயக்கி னால் அஃது உயிருள்ளது போல இயங்குகின்றது அன்றோ? ஆனால் அஃது உண்மையான உயிருள்ளதா? இல்லை. நாணமில்லாதவர் மக்கள்போல இயங்குவதும் இதைப் போன்றதே. உண்மையில் அவர்கள் மக்கள் அல்லர்; மக்கள் போல் இயங்கிப் பிறரை மயக்கு கின்றார்கள்.

இதனை,

நாண்அகத்(து) இல்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று,'

என்ற குறளில் வள்ளுவர் தெளிவு படுத்துகின்றார்.

உலகம் வாழவேண்டும் என்ற பெரு நோக்கம் கொண்டவர் சான்றோர். அவர்கள் பிறர்க்கு உதவுவதே தம் கடமையாகக் கொண்டவர்கள். ஆதலால் அவர்கள் முயன்று ஈட்டிய பொருள் முழுதும் இல்லாதவர்களுக்குக் கொடுத்து உதவி அவர்களை வாழ வைப்பார்கள். இங்ஙனம் பிறர்க்குப் பயன்படுதலை ஒப்புரவு என்று கூறுகிறார் திருவள்ளுவர். பிறர்க்கு உதவுதலாகிய ஒப்புரவை அறிந்து வாழ்கின்றவன் தான் உயிரோடுகூடி வாழ்கின்றவன் ஆவான். அதனை அறிந்து வாழாதவன் செத்தவருள் ஒருவனாகக் கருதப்படுவான்.

'ஒத்த(து) அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்,'

என்பது குறள்.

எனவே, மக்கள் உண்மையில் உயிருடையவர்களாக வாழ வேண்டுமானால் 'ஒப்புரவு' அறிந்து—அதாவது பிறர்க்குப் பயன்படுதலாகிய முறையை அறிந்து—வாழ வேண்டும் என்பதை நாம் இதனால் அறியலாம். சான்றோர் இவ்வொப்புரவினை அறிந்தொழுகும் மேன்மக்களாவர். அவர்களுடைய செல்வம் நீர் நிறைந்த குளம் போன்றது. நீர் வேண்டுபவர்கள் அக்குளத்தினிடத்தே சென்று தமக்கு வேண்டிய அளவு நீரை எடுத்துக் கொள்ளலாம் அல்லவா! அதைப் போலவே செல்வம் வேண்டுபவர் சான்றோரை அடைந்தால், தமக்கு வேண்டிய அளவு செல்வத்தைப் பெறலாம். எனவே சான்றோர்களுடைய செல்வம் ஏழைகளின் செல்வம்

என்று கூறலாம். சான்றோர்களிடத்துச் செல்வம் குறைந்தாலும் ஒப்புரவு செய்யத் தயங்கமாட்டார்கள். ஒப்புரவு செய்யாமையைத்தான் அவர்கள் வறுமையாகக் கருதுவார்கள். செல்வம் இல்லாமையை அவர்கள் வறுமையாகக் கருதுவ தில்லை. குமணன் என்னும் அரசன் தன் தம்பியால் நாடிழந்து காட்டில் வாழ்ந் திருந்த காலத்துப் பெருந்தலைச்சாத்தனுர் என்ற புலவர் பரிசில் பெறுதற்காக அவனிடம் சென்ருர். தன்னிடம் பொருளில்லாமலிருந்தும், குமணன், பொருள் இல்லை என்று புலவர்க்குச் சொல்லவில்லை. புலவர் தன்னிடம் வந்து பொருள் பெருமல் திரும்பிச் சொல்லுதல், தான் நாட்டை இழந்ததைக் காட்டிலும் கொடிது என்று எண்ணினுன். உடனே அவன் தன் வாளையெடுத்துப் புலவரிடம் கொடுத்தான். கொடுத்துத் தன் தலையை வெட்டித் தன் தம்பியிடம் கொண்டு போகும்படி புலவர்க் குச் சொன்னுன். தன்னுடைய தலைக்குத் தம்பி பெரும் பொருள் கொடுப்பான் என்பது குமணனுக்குத் தெரியும். குமணன் பொருள் இல்லாத நிலையில் இருந்தும் ஒப்புரவு செய்வதில் தவற வில்லை என்பதை இதனுல் உணரலாம். அவன் பொருளற்ற நிலையிலும் வறுமை யுற்றவனுக இல்லை. அவன் ஒப்புரவு செய்யத் தவறி யிருப்பாணுனல் அதனையே தன் வறுமையாகக் கொண்டு பெரிதும் வாடி யிருப்பான். எனவே குமணன் ஒப்புரவி னுல் ஒப்பற்ற சான்ருேனுக விளங்கினுன் எனலாம்.

சான்ருேர் தம்முடன் பழகியவரிடத்தே எப்போதும் அருளுடையவர்களாகவே விளங்குவர். இப்பண்பினைக் கண்ணேட்டம் என்பார் திருவள்ளுவர். பழகியவர்கள் தம்முயிருக்கே தீங்கு செய்வார்களாயினும், அப்போதும் அவர்கள்பால் கண்ணேட்டம் உடையவர்களாகவே விளங்கும் தன்மை வாய்ந்தோர் சான்ருேர்.

" பெயக்கண்டும் நஞ்சுண்(டு) அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர் "

தம்மோடு பழகியவர் தமக்கு நஞ்சிடுவதைக் கண்ணல் கண்டும், கண்ணொட்டத்தால் சான்றோர்கள் மறுக்க முடியாமல் அதனை உண்பார்கள். இதுவே சிறந்த நாகரிகப் பண்பாகும். இதனால் சான்றோர்கள் தம்முயிர் சென்றாலும் கண்ணோட்டத்தைச் சிதைக்கமாட்டார்கள் என்பது தெளிவாகிறது.

இக்கண்ணோட்டமாகிய பண்பினால்தான் மக்கள் பலர்கூடி இயைந்து வாழ முடிகிறது. இப்பண்பு குறையுமானால் மக்களுக்குள் பூசலும், பகையும் மிகுந்து அவர்கள் அழிந்து விடுவார்கள். முடிவில் இவ்வுண்மையை,

" கண்ணோட்டம் என்னும் கழிபெரும் காரிகை
உண்மையான் உண்டுஇவ் வுலகு "

என்று எடுத்து ஓதுகின்றார் வள்ளுவர்.

பொல்லாத யூதர்கள் ஏசுபெருமானைச் சிலுவையில் அறைந்து அவருடைய திருமேனி தவிக்கும்படியாக அவரைப் பெரிதும் துன்புறுத்திய காலத்திலும், அவர் அக்கொடியவர்கள்பால் கண்ணோட்டம் மிக்கவராய்,

" எந்தாய் இன்னதென அறிகில்லார் தாம் செய்வது, இவர்
[பிழையை மன்னியும்,"

என்று ஆண்டவனை நோக்கி வேண்டினார். பகைவரிடத்தும் எவ்வளவு இரக்கம்! அவரது கண்ணோட்டத்தின் தன்மையை நினைக்குந்தோறும் நெஞ்சம் உருகும்.

இனி, சான்றாண்மைக்கு இன்றியமையாத மற்றொரு பண்பு வாய்மை. வாய்மையாவது பொய் சொல்லாமை.

அஃதாவது, உள்ளத்திலுள்ள உண்மையையே வாயால் கூறுவது. சான்றோர் அருளுடையவர்கள். அவர்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிப் பிறரை வஞ்சிக்க மாட்டார்கள்.

"வாய்மை யெனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்."

வாய்மையெனப்படுவது பிறிதோர் உயிர்க்கு யாதொரு தீமையும் செய்யாத சொற்களைச் சொல்லுதல். சான்றோர் நெஞ்சறியப் பொய் சொல்வதில்லை. அஃதாவது தீமை விளைவிக்கும் சொல் சொல்வதில்லை. ஆகையால் அவர்கள் உலகத்தவர் உள்ளத்தில் வைத்துப் போற்றப் பெறுகிறார்கள்.

சான்றோர்க்கு விளக்காக விளங்குவது பொய்யாமை யாகிய விளக்காகும். மற்ற விளக்குகள் புற இருளை ஓட்டுகின்றன. பொய்யாமையாகிய விளக்கு சான்றோர் மனத் திருளை ஓட்டி, அங்கு ஒளி விளங்கச் செய்கிறது. எனவே, வாய்மையால் உள்ளொளி பெருகி விளங்குகின்றார்கள் சான்றோர்கள்.

இதுவரை அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம் வாய்மை ஆகிய இவைகள் சான்றாண்மைக்குரிய குணங்கள் என்பதைக் கண்டோம். ஒரு மாளிகைக்கு இன்றியமையாத உறுப்பு தூண். மாளிகையைத் தாங்கிக் கொண்டிருப்பவை தூண்கள் தாமே! அவைகள் இல்லாமற் போனால் மாளிகைகள் நிற்குமோ? மாளிகை எவ்வளவு அழகுடையதாக இருந்தாலும், தூண்கள் வலி குறைந்தால், மாளிகையும் நிலைதளர்ந்து, அழகு சிதைந்து போய்விடும். திருவள்ளுவர் சான்றாண்மையை, ஓர் அழகுயர்ந்த மாளிகையாக உருவகித்துக் காண்கிறார். அம்மாளிகைக்கு, மேலே விளக்கிய அன்பு, நாண்.

ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை முதலிய அரிய குணங்களை உறுதியான தூண்களாக அமைக்கிறார். இவற்றில் ஒன்றினுடைய வலிமை குறைந்தாலும், சான்றாண்மைக்கு இழுக்கு நேரும் என்பது வள்ளுவர் கருத்து. இவ்வருங் குணங்கள் முழுதும் நிரம்பப் பெற்றவரே சான்றோர் ஆவர்.

பிறரிடத்தில் எவ்வளவு பெரிய குற்றத்தைக் கண்டாலும் பெரியோர்கள் அக்குற்றத்தைப் பலரும் அறியும்படியாக எடுத்துரைத்துப் பழி தூற்ற மாட்டார்கள். பிறர் குற்றத்தை எடுத்துச் சொல்லுதல் இழிதகைமை. அதனைச் சொல்லாமை பெருந்தகைமை. இப்பெருந்தன்மையான இயல்பினைச் சான்றாண்மைக்குரிய தலைசிறந்த பண்பாகத் திருவள்ளுவர் கூறுகின்றார்.

தவத்திற்குரிய அறங்கள் பல உண்டு. இவ்வறங்கள் எல்லாவற்றிலும் கொல்லாமையே ஒப்பற்ற அறமாக விளங்குகிறது.

'ஒன்றாக நல்லது கொல்லாமை'—என்கிறார் வள்ளுவர்.

எப்படிக் கொல்லாமை என்னும் அறத்தைத் தவம் சிறப்பாக உடையதோ, அதுபோலச் சால்பு பிறர் குற்றத்தை எடுத்துச் சொல்லாத பண்பைச் சிறப்பாக உடையதாகும்.

> "கொல்லா நலத்தது நோன்மை பிறர் தீமை
> சொல்லா நலத்தது சால்பு"

இப்பெருங் குணத்தால் பெருமை பெற்று விளங்கினாள் கண்ணகி. அவள் கணவன் கோவலன், அவளை நீங்கிப் பரத்தையாகிய மாதவியைச் சேர்ந்து, பலகாலம் வாழ்ந்து வந்தான். கண்ணகிக்குத் தன் கணவனால் நேர்ந்த துன்பம் மிகப் பெரிது; எனினும், அவள் கோவலன் குற்றத்தைத் தன் நெருங்கிய தோழியர்

களுக்கும் எடுத்துக் கூறவில்லை. தன் துன்பத்தைப் பிறர் அறியுமாறு வெளிப்படுத்தினால் அத்துன்பத்திற்குக் காரணமாகத் தன் கணவனைப் பிறர் பழிப்பார்கள் அல்லவா? ஆதலால் கண்ணகி பொறுத்தற்கரிய துன்பத்தை மிகப் பொறுமையோடு தாங்கி நின்றாள். இதனால் அவள் சான்றாண்மை சிறந்து விளங்கியது.

> " கற்புக்கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது
> பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால் "

என்று அவள் கவுந்தியடிகளால் பாராட்டவும் பெற்றாள்.

சான்றோர்கள் எவரிடத்தும் மிகப் பணிவாக நடந்து கொள்வார்கள். அவர்கள் தங்களைவிட மிகத் தாழ்ந்தோரிடத்திலும் தோல்வியடைந்து பணிவாக நடக்கும் பண்புடையவர். "பணியுமாம் என்றும் பெருமை." பொன் உயர்ந்ததா, மட்டமானதா என்பதை அறிய அதை உரைகல்லில் தேய்த்துப் பார்ப்பார்கள். எனவே பொன்னின் உயர்வைத் தெரிவிப்பது உரைகல். அது போல, தம்மைவிடத் தாழ்ந்தோரிடத்தும் தோல்வியடைந்து பணிவாக நடக்கும் பண்பு ஒருவருடைய சால்பின் உயர்வினைத் தெரிவிப்பதாகும்.

> " சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி
> துலையல்லார் கண்ணும் கொளல் "

சான்றோர் செல்வத்தாலும், பிறவற்றாலும் எவ்வளவு பெருமையடைந்தாலும், அதனால் அவர்கள் செருக்குக் கொள்வதில்லை.

'பெருமை பெருமிதம் இன்மை' என்பர் திருவள்ளுவர்.

சான்றோர் தன்னலம் அற்றவர்கள். பிறர் நலத்திற்காகவே என்றும் பாடுபடுபவர்கள். தன்னலப் பற்று இல்

லாதவர்களால்தான் உண்மையாகப் பிறர் நலனுக்கு உழைக்க முடியும். எனவே, சான்ருேர் எல்லோர்க்கும் நன்மை செய்து ஒழுகும் பண்புடையோர் ஆவர். அவர்கள் தமக்குத் தீங்கு செய்தவர்களுக்கும் நன்மையே செய்வார்கள். தீங்கு செய்தவர்களுக்குத் தீங்கு செய்வது சான்ருண்மை யாகாது.அது மக்கள் தன்மையும் அன்று; மிருகத் தன்மை. ஆகையால்,

"இன்ஞ செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"

என்று கேட்கின்ருர் திருவள்ளுவர்.

பெரியோர்கள் எக்காலத்தும் தம்முடைய பண்பிற்கு இழுக்கு நேராமல் நடந்துகொள்வர். அவர்கள் உயர்ந்த கொள்கை யுடையவர்கள். அக்கொள்கைக்காகவே உயிர் வாழ்பவர்கள். தம் உயர்ந்த கொள்கைகளை இழக்கும் நிலை ஏற்பட்டால், அவர்கள் தம் கொள்கைகளை நிலைநிறுத்தித் தம்முயிரை விட்டுவிடுவார்கள்.

நெடுஞ்செழியன் என்ற பாண்டியன் நீதி நெறி தவருது அரசுபுரிந்து வந்த மன்னன். அவன் தன் பொற்கொல்லன் சொற்கேட்டு, கோவலனைக் கள்வன் என்று தவருக எண்ணிக் கொலைசெய்வித்தான்.கோவலன் மனைவியாகிய கண்ணகி தன் கணவன் கொலையுண்டதை அறிந்தாள்; அரசன்பால் ஆருச் சினங் கொண்டாள்; அவன் முன் சென்று தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை நிரூபித்தாள். அரசன், தான் அறியாமல் செய்த பெருந்தவறை உணர்ந்தான். அவன் மான முடைய மன்னன்; உயர்ந்த கொள்கைக்காக உயிர் வாழ்பவன். ஆகையால் அவன் தன்னுடைய தவறை உணர்ந்ததும் உள்ளம் பதைத்து, "நீதி முறை தவருது

அரசு புரிந்து நிலையான புகழ்பெற்ற பாண்டியர் பெருமையெல்லாம் என்னால் அழிந்ததே!

'பொன்செய் கொல்லன் தன் சொல்கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்' "

என்று சொல்லி மயங்கி வீழ்ந்து இறந்தான். இப் பாண்டிய மன்னன்.

"மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்"

என்ற குறளுக்குச் சிறந்த சான்றாக விளங்குகிறான்.

எனவே, சான்றோராய் விளங்குபவர்கள், அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை முதலிய பெருங்குணங்கள் பொருந்தியவர் ஆவர். அவர்கள் பிறர் குற்றத்தை எடுத்துச் சொல்லாத பண்பு பெற்றவர்கள்; தமக்குத் தீங்கு செய்தவர்க்கும் நன்மையே செய்யும் பெருந்தகைமை வாய்ந்தவர்கள். தம் மானம் கெடுமாயின் உயிர் வாழாத வீரப்பண்பு மிக்கவர்கள். இத்தகைய சான்றோர்கள் இருப்பதால் தான் இவ்வுலகம் நிலை பெற்று வருகின்றது.

இவ்வுலகத்தில் சான்றோர்கள் இல்லாமலிருந்தால் பூசலும் போருமே எங்கும் நிறைந்து எப்போதோ இவ்வுலகம் அழிந்திருக்கும்.

"உண்டால் அம்ம இவ்வுலகம்...
.....................................
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே"

'தம்முடைய நன்மைக்காக உழைக்காமல் எப்பொழுதும் பிறர் நன்மைக்கே முயற்சி செய்யும் பெரிய

வர்கள் இருப்பதால் இவ்வுலகம் இருக்கிறது' என்று வியந்து பாடுகிருன் இளம்பெருவழுதி என்ற பாண்டியன்.

எது நல்லநாடு என்பதனை அவ்வைப் பெருமாட்டியார் நமக்கு அறிவுறுத்துகின்றூர். ஓரிடம் நாடாயிருந்தாலும், காடாயிருந்தாலும், மேடாயிருந்தாலும், பள்ளமாயிருந் தாலும் அவ்விடத்தில் நல்லவர்கள் இருப்பார்களாஞல் அதுவே நல்ல நாடாகும் என்று உரைக்கின்றூர். எனவே ஒரு நாடு நல்லவர்களைப் பெருமல் வேறு பல சிறப்புக்கள் எவ்வளவு பெற்றிருந்தாலும் அது நல்லதாகாது என்பது தெளிவாகிறது.

திருவள்ளுவரும், நல்ல பண்புடையவர்களால்தான் உலகம் இருக்கிறது ; இல்லையேல் உலகத்தில் பாவம் நிறைந்து அது மண்ணோடு மண்ணாய் மாய்ந்து போகும் என்ற பொருளமைய,

“ பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன் ”

என்று கூறுகின்றூர்.

பிசிராந்தையார் என்ற புலவர் மிகவும் வயதாகியவர். ஆனால் அவர் தலை நரைக்கவில்லை. அதைக்கண்டு சிலர் வியந்து, வயதாகியும் தங்களுக்குத் தலை நரைக்காமைக் குக் காரணம் என்ன என்று அவரைக் கேட்டார்கள். அதற்கு அவர் பல காரணங்களைச் சொல்லி முடிவில் ‘சான்றோர் பலர்யான் வாழுமூரே ” என்றூர். இதனல் அவர் ஊரில் சான்றோர் பலர் வாழ்ந்ததால், அங்குத் துன்பம் எல்லாம் நீங்கி, நன்மையே பெருகி, மக்கள் அனைவரும் இன்ப வாழ்வு வாழ்ந்தார்கள் என்பதை அறியலாம்.

தற்கால உலகத்தில் பூசலும் போருமே பெருகிக் கொண்டு வருகிறது. நல்ல பண்புகள் உலகத்தில் போதிய அளவு இல்லை என்பதைத்தான் அது குறிக்கிறது. உலகம் உயர வேண்டுமானால் சான்றாண்மை வளரவேண்டும்; சான்றோர்கள் பெருக வேண்டும். வள்ளுவர் எடுத்து விளக்கும் சான்றாண்மைக்குரிய அரிய பண்புகள் உலகில் நிறையுமானால், எங்கும் அமைதி நிலவி இன்பம் பெருகும்.

4

# சேரர் கால வாழ்வியல்

பண்டைக் காலத்தில் தமிழகம் மூன்று பெரும் பகுதிகளாக விளங்கியது. அவை சேர, சோழ, பாண்டிய நாடுக ளாகும். சேர சோழ பாண்டியர் படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டு வந்தனர் என்று பரிமேலழகர் கூறுகிருர். இதனுல், இம் முப்பேர் அரசுகளும் நினைவுக் கெட்டாத காலத்திலிருந்து தமிழகத்தில் நிலவி வந்துள்ளன என்று கொள்ளலாம்.

சேரர் ஆட்சி கி. பி. இரண்டு அல்லது மூன்ரும் நூற்ருண்டு வரைச் சிறந்தோங்கி இருந்த தென்பதைப் பதிற்றுப்பத்து, புறநானூறு முதலிய நூல்களிலிருந்து உணரலாம். பண்டைச் சேர நாடு மேற்கு மலைத் தொடருக்கு அப்பாலும், மேல் கடற்கரை நெடுகிலும் அமைந்திருந்ததாகக் கொள்ளலாம். வஞ்சி அல்லது

கருவூர் சேரர் தலை நகரமாக விளங்கியது. அவர்களது துறைமுகப்பட்டினம் முசிறி. இங்கிருந்து மேனாட்டு யவனரது மரக்கலங்கள் மிளகு முதலிய பண்டங்களை ஏற்றிச் சென்றன என்பது,

"..................சேரலம்
சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமா ணன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி ..................."

என்ற அகநானூற்று அடிகளால் தெரிய வருகிறது. பழைய யவனாசிரியர் குறிப்புக்களிலிருந்தும் இவ்வுண்மை காணப் படுகிறது.

மக்கள் பிறந்து வாழ்ந்த இடங்களை யொட்டி, அவர்கள் தொழிலும், ஒழுகலாறுகளும் அமையலாயின. மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி என்றும், காடும் காடு சார்ந்த இடமும் முல்லை என்றும், கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் என்றும், வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் என்றும் வழங்கப்பட்டன.

குறிஞ்சி நிலத்தவர் தலையாய தொழில் வேட்டை யாடுதல். தினைக் கொல்லையை உழுது பயிர் செய்வதும் அவர்கள் தொழி லாகும். எனவே அவர்களை 'ஏனல் உழவர்' என்பர் புலவர்கள். ஏனல் என்பது தினை. தினைமா குறிஞ்சி நிலத்தவரின் சிறந்த உணவாகும். அவர்கள் தம் வீடுகட்கு வரகின் வைக்கோலைக் கூரையாக வேய்வார்கள். தம் மனைகளில் காட்டு மல்லிகையை வளர்ப்பதும் அவர்கள் இயல்பு. 'வரகு மீதிட்ட காண் மிகு குளவிய இருக்கை,' என்று அவர் தம் மனைகளைப் பதிற்றுப்பத்து என்ற நூல் வருணிக்கிறது. குறிஞ்சி

நில மக்கள் வில்லும், அம்புங்கொண்டு வேட்டையாடும் வன்னெஞ்சம் உடையவ ராயினும், அவர்கள் வீடுகளில் அன்பு நிறைந்திருக்கும் என்பர் பாலைக் கௌதமனுர் என்ற புலவர். அவர், அவர்கள் மனைகளை 'அன்புசேர் இருக்கை' என்கிருர். அன்பு நிறைந்த குன்றவர் இல்லங்களுக்கு விருந்தினர் வருவ துண்டு. வந்த விருந்தினரை அவர்கள் இன்முகத்தோடு வரவேற்றுத் தினைமாவை அவர்களோடு பகுத் துண்பர். இவ் வுண்மையைத் தான் 'மென்தினை நுவணை முறைமுறை பகுக்கும்,' என்ற பதிற்றுப்பத்து அடி குறிக்கிறது.

முல்லை நிலத்து மக்கள் இடையர் எனப்படுவர். மாடுகளைப் பசுமையான நிலங்களில் மேய்த்துப் பாது காப்பது அவர்களுடைய தொழில். அவர்கள் ஆவினை மேய்ப்பதால் 'ஆயர்' எனவும் படுவர். புனத்தை உழுது விளைக்கும் வரகு முதலியன இந்நிலத்தவர்க் குரிய உணவுகளாம். அவர்கள் முல்லை மாலையையும், இலையால் தொடுக்கப்பட்ட மாலையையும் சூடிக்கொள்வார்கள். அவர்கள் தம் பசுக்களை எல்லாம் புல் நிறைந்துள்ள நிலத்தில் மேயவிட்டுத், தாம் கற்கள் நிறைந்த காட்டி டத்தே ஒளி வீசும் மணியைப் பெறுவார்கள் என்ற குறிப்பு பதிற்றுப்பத்தில் காணப்படுகிறது. இடையர்கள் வாயை மடித்து சீழ்க்கையொலி செய்வதும் உண்டு. "பாசிலைத் தொடுத்த உவலைக் கண்ணி மாசுண் உடுக்கை மடிவாய் இடையன்" என்று புறநானூறு பாடுகின்றது. முல்லைக் காடுகள் தழையும் பூவும் நிறைந்துள்ளபோது, அந்நிலம் மிக இனிமையான காட்சியைத் தரும். அக்காடுகள் சில காலங்களில் தழையும், பூவும் உதிர்ந்து, வெறு நிலமாகத் தோன்று வதும் உண்டு. அவ்வெறு நிலத்தில் இயங்கும் மகளிர் காலில் செருப் பணிந்து இருப்பர்.

"பல்பூஞ்
செம்மற் காடுபயமாறி...............
ஒண்ணுதல் மகளிர் கழலோடு மறுகும்"

என்ற குறிப்பு பதிற்றுப்பத்தில் காணப்படுகிறது.

போரில்லாக் காலங்களில் வீரர்கள் முல்லைக் காடுகளில் மகளிரொடு உழுதொழில் செய்வர். தம்மோடு வீரர்கள் இயங்கினாலும் முல்லை மகளிர் தம் கற்பொழுக்கம் கெடாமல் விளங்கினர். இக்கருத்தை 'புறவே ஒள்ளிழை மகளிரொடு மள்ளர் மேன,' என்று பாடுகிறார் குமட்டூர்க் கண்ணனார்.

முல்லையும் குறிஞ்சியும் சார்ந்த இடம் புன்புல வைப்பு என்பதாகும். இவ்விடத்தில் கடைத்தெரு ஒன்று உண்டு. இங்கே பொன்னைக் கொடுத்து, வேண்டும் பொருள்களைப் பெறலாம். வேட்டுவர் தாம் வேட்டையாடிய விலங்கின் இறைச்சியையும், யானையின் வெண்கோட்டையும் இங்குக் கொண்டு வந்து கொடுத்து, அவற்றின் விலைக்கு ஈடாகக் கள்ளைப் பெறுவர். அவர்கள் உயிர்க் கொலை புரியும் தொழிலினர் ஆதலின் தாம் கொண்டு வந்த பொருட்கு விலையாகப் பொன்னைப் பெறாமல் கள்ளையே விரும்புவர்.

நெய்தல் நில மக்கள் பரதவர் எனப்படுவர். கடலிற் படகிற் சென்று மீன் பிடிப்பதும், கடல் நீரைப் புன்னிலங்களிற் பாய்ச்சி உப்பு விளைப்பதும் இவர் தொழில். கடற்கரை மணற்பரப்பில் தாழை, புன்னை முதலியவை நிறைந்த சோலைகள் உண்டு. இங்கே புன்னை மரத்தின் கீழ் வலம்புரிச் சங்கு ஈன்ற நன் முத்துக்களையே கழங்காகக் கொண்டு இளமகளிர் பாடிக் கொண்டே ஆடுவர். வேறு நாடுகளிலிருந்து கடல் வழியாக மரக்கலங்களில் பொன், மணி முதலியவைகள் கொண்டு

வரப்படும். அவைகளைத் தொகுத்து வைப்பதற்குரிய பண்டசாலைகள் கடற்கரைச் சோலையில் இருந்தன. இச்செய்தி,

" இன்னிசைப் புணரி யிரங்கும் பௌவத்து
நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர்க்
கமழும் தாழை கானலம் பெருந்துறை "

என்ற பதிற்றுப்பத்து அடிகளால் அறியலாம்.

நெய்தல் நிலத்திலே குளிர்ந்த கழிகள் உண்டு. இக்கழிகளின் கரைகளில் ஞாழல் பூக்கள் மலர்ந்திருக்கும். இம் மலர்களை இள மகளிர் விருப்பத்தோடு கொய்து அணிந்து கொண்டு நீர்த் துறையினிடத்து விளையாடுவார்கள். கடல் அலைகள் கடலிலிருந்து சங்குகளைக் கொண்டுவந்து கானற் சோலையிடத்தே எறியும். இங்ஙனம் எறியப்பட்ட சங்குப் பூச்சிகள் ஒலிக்கும். அவ்வொலி கேட்டு நெய்தல் நில மக்கள் ஓடிச்சென்று அவற்றின் முத்துக்களை எடுப்பர். அப்போது அச்சங்குகளோடு எறியப்பட்ட பவளத்தையும் அவர்கள் எடுத்துக்கொள்வர்.

" அல்குறு கானல் ஓங்குமணல் அடைகரை
தாழடும்பு மலைந்த புணரிவளை ஞரல்
இலங்குநீர் முத்தமொடு வார்துகிர் எடுக்கும்
தண்கடற் படப்பை............."

என்பன, பல்யானைச் செல்கெழுகுட்டுவன் என்ற சேர அரசனைப் பாடிய பாலைக் கௌதமனார் மொழிகளாகும்.

உழவர் மருத நிலத்து மக்களாவர். நிலத்தை ஏரால் உழுது, எருவிட்டு, நீர் பாய்ச்சி நெல் விதைக்கும் உழவுத்தொழில் இவர்களது தொழிலாகும். மருத

நிலத்தில் புதுப் புனல் மிகுந்து கரையை யுடைத்துப் பெருகி வரும்போது, உடைந்த மடையைக் கட்டுதற்குப் பண்டையோர் பறையை அறைந்து உழவரைத் தருவித்து உடைந்த மடையைக் கட்டுவிப்பர். நீர்ப் பெருக்கின் வேகத்தால் சில இடங்கள் ஆழமாக அறு படின், அவ்விடங்களில் வைக்கோற் புரிகளைக் கொண்டு மணற் கோட்டை அமைத்து அணையாக நிறுத்தி அப் பெருக்கத்தைத் தடுப்பர். இக் கோட்டையைக் கரிசை என்று கூறுவதும் உண்டு. புதுப் புனல் பெருக்கத்தைத் தடுத்த மகிழ்ச்சியில் அவர்கள் பேரூர்களில் நிகழும் திருவிழாவுக்குச் சென்று ஆரவாரத்தோடு திரும்புவர். இந்நில மக்கள் புதுப்புன லாடுவர். புதுப்புன லாடுவது இவர்களுக்குச் சிறந்த விழா வாகும். இந்நிலத்து இள மகளிர் நெற் கதிரைப் பிசைந்து பசிய நெல்லை எடுத்துக் குற்றி அவ லெடுப்பார்கள். விளையாடும் பருவமுடைய இளமகளிர்க்கு இஃது இயல்பு. நெல்வய லருகே வாழைகள் வளர்ந்திருக்கும். அவற்றைச் சார்ந்த இடத்தில் விளையாடும் மகளிர் அவலிடித்த உலக்கையை வாழை மரத்திற் சார்த்திவிட்டு வயலுக்குள் புகுந்து அங்கு மலர்ந்திருக்கும் வள்ளைப் பூவைப் பறிப்பார்கள் என்கிறார் பாலைக் கௌதமனார்.

"அவலெறிந்த உலக்கை வாழைச் சேர்த்தி
வளைக்கை மகளிர் வள்ளை கொய்யும்
முடந்தை நெல்லின் விளை வயல்"

என்பன அப்புலவரின் மொழிகளாகும்.

இங்ஙனம் பண்டைச் சேர நாட்டில் நானிலத்து மக்களும் அந்தந்த நிலப் பண்பிற்கேற்ப முறையாக வாழ்க்கை நடத்திவந்தனர். இனி நெறி தவறி, வழிப் போவாரைக் கொள்ளை யடித்து வாழ்ந்த மக்களும்

அக்காலத்து இருந்தனர். அவர்களை ஆறலை கள்வர் என்பர். இவர்தம் இல்லங்களைப்,

" புலவு வில் உழவன் புல்லான் வழங்கும்
புல்லிலை மூதில் வைப்பு "

என்று குமட்டூர்க் கண்ணனார் என்ற புலவர் விளக்குகிறார். புலால் நாறும் வில்லேந்தி உயிர்க்கொலை புரியும் ஆறலை கள்வர் வாழும் பனையோலை வேய்ந்த பாழ் வீடுகளே யுள்ள ஊர் என்பது இவ்வடிகளின் பொருள். பிறரைக் கொள்ளை யடித்து ஈட்டிய பொருள் நன்மை பயவாமையால், அவர்கள் இல்லங்கள் பாழ்பட்டிருந்தன என்பது 'புல்லிலை மூதில்' என்ற தொடரால் விளங்குவ தாகும்.

சேர நாட்டில் சிற்றூர்களே யன்றிப் பேரூர்களும் பல இருந்தன. கருவூர், முசிறி, தொண்டி முதலியன் பேரூர்களாம். இவைகளை மூதூர் என்பர். இவற்றுள் கருவூர் அல்லது வஞ்சி சேர நாட்டின் தலைநகரமாய்த் திகழ்ந்தது. பண்டைத் தமிழ் நூல்களிலிருந்து இத் தலைநகரின் பழைய அமைப்பினை ஒருவாறு அறியலாம். இம் மூதூரின் கோட்டையைச் சுற்றி ஆழ்ந்து அகன்ற அகழி இருந்தது. அகழியில் பலவகை முதலைகளும், பெருமீன்களும் நிறைந்திருந்தன. அவ்வூரில் ஓடும் கழுநீரெல்லாம் இறுதியில் அவ்வகழியினிடத்தே சென்று சேர்வ தாகும். இவ்வகழிக்கும், கோட்டைக்கும் இடையில் காவற்காடு ஒன்று உண்டு. கோட்டை மதிலினிடத்துப் பகைவரைக் கொல்லும் இயந்திரங்கள் பல இருந்தன; இக்கோட்டை வாயிலுக் கப்பால் அவ் வாயிற் காவலர் உறையும் வீதிகளும், மீன் விலைஞர், உப்பு வாணிகர், கள் விலைஞர், பிட்டு அப்பங்களை விற் போர். இறைச்சி விற்போர் வீதிகளும் அமைந்

திருந்தன. இவற்றை யடுத்துக் குயவர், பொற் கொல்லர், தச்சர், வெண்கலக் கன்னர், தையற் காரர், மாலைகட்டுவோர், சோதிடர், பாணர் முதலியோர் வீதிகள் இருந்தன. இவ்வீதிகளை யடுத்து, நாடகக் கணிகையர் தெருவும், தானியம் விற்போர் வீதியும் பொது மகளிர் தெருக்களும், அவற்றை யடுத்து, ஆடை விற்போர், பொன்வாணிகர் வீதிகளும், அந்த ணர் இருக்கையும், இராச வீதியும், அமைச்சர் வீதியும், அரசாங்க அதிகாரிகள் வாழும் தெருக்களும் முறையே அமைந் திருந்தன. இன்னும் அம்பலமும், அறச்சாலை களும், தவப்பள்ளிகளும் இருந்தன.

வஞ்சியின் நடுவிடத்தில் சேரரின் அரண்மனை இருந்தது. அதன் தோற்றம் சிறு மேருமலையைப் போல விளங்கியது என்பர் இளங்கோ வடிகள். திரு மாலின் கோவிலாகிய ஆடகமாடம் அரண்மனையின் ஒரு பகுதியாகவே இருந்ததென அறிஞர் கருதுகின்றனர். அக்காலங்களில் பொதுவாழ்வி லிருந்து நீங்கித் தவ நிலையிலோ, நூலாராய்ச்சியிலோ, வேறு தொழில்வகை முயற்சியிலோ ஈடுபடுபவர் பெரிய தலைநகரங்களின் கிழக்கு வாயிலை அடுத்துள்ள சோலைகளிலும், உவவனங் களிலும் தங்கியிருக்கும் வழக்கம் இருந்த தென்பது தெரி கிறது. அங்கே கடவுளர் கோயில்களும், சைனப் பள்ளி களும், பொதுவிடங்களும் பல இருந்தன. இவ்விடம் குணவாயில் என்று சிலப்பதிகாரத்தில் குறிக்கப்படுகிறது. வஞ்சிமா நகரின் குணவாயிலில் சேரன் செங்குட்டுவன் தம்பியும், சிலப்பதிகார ஆசிரியருமாகிய இளங்கோ வடிகள் துறவு பூண்டிருந்தார். இதனைக்,

> ‘ குணவாயிற் கோட்டத்து அரசுதுறந் திருந்த
> குடக்கோச் சேரல் இளங்கோ வடிகள்,’

என்னும் சிலப்பதிகாரப் பதிக அடிகளிலிருந்து நாம் அறிகிரேும்.

மூதூர்களில் இடையருது கடவுளர்க்குத் திருவிழாவும், மக்கட்குத் திருமண விழாவும் நிகழும். இன்னும் அவ்வூர்களிலே வெற்றியும் கொடையும் தெரிவிக்கும் முரசு முழங்கும். அவ்வூர்களின் கடைவீதிகளில் வெற்றி குறித்தும், விழாக் குறித்தும், கள், இறைச்சி முதலியன விற்பது குறித்தும் பல்வகைக் கொடிகள் எடுக்கப்பட்டன.

இவ்வுண்மையை,

> "விழவறுபு அறியா முழவிமிழ் மூதூர்க்
> கொடிநிழற் பட்ட பொன்னுடை நியமத்துச்
> சீர்பெறு கலிமகிழ் இயம்பு முரசு"

என்று குமட்டூர்க் கண்ணனுர், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பற்றிப் பாடும்போது குறிப்பிடுகின்ருர்.

பண்டைச் சேரமக்கள் சத்து நிறைந்ததும், சுவையுள்ளதுமான உணவை யுண்டனர். சோற்றினை இறைச்சியோடு கலந்து சமைப்பது அவர்தம் முறையாகும். ஆட்டுவணிகர் மனைமேல் வைத்துக் கொத்தித் தந்த இறைச்சியை மனையின்கண் வேகவைத்துத் தாளிதம் செய்வார்கள். இங்ஙனம் தாளிக்கும் போது, நறுமண முள்ள புகை எழும். இப்புகை அவ்வூரின் வேள்விப்புகையோடு கலந்து மேலெழும். இங்ஙனம் கலந்த இரண்டு புகையையும் வானுலகத்திலுள்ள கடவுளரும் விரும்புவர் என்பர் பாலைக் கௌதமனுர். இதனுல் அக்காலத்தின் உணவின் சிறப்பினை உணரலாம். இன்னும் அக்காலத்து மக்கள் கள்ளைப் பெரிதும் விரும்பிக் குடித்தனர். 'தெண்கள் வறிது கூட்டு அரியல்

இரவலர் தடுப்ப,' என்கிருர் காப்பியாற்றுக் காப்பியனுர் என்ற புலவர். 'அரியல்' என்பது வடித்த கள். அக்கள் இரவலர்களை வேறிடம் செல்லவிடாது தடுத்து நிற்கிறது என்பது இவ்வடியின் பொருள். கள்ளுண்பார் உண்டு களிக்குந்தோறும், மேன்மேலும் அதனை உண்பதற்கே விரும்புவார் அல்லரோ? ஆகையால் இரவலர் கள்ளின் பால் எழுந்த வேட்கையால், அக்கள்ளிருக்கும் இடத்தை நீங்காது உறைந்தனர். மலர் அரும்புகளைக் கொண்டு அக்காலத்தில் கள் உண்டாக்கினர். கள்ளினை மூங்கில் குழாய்களில் ஊற்றி முதிரவைப்ப துண்டு. இறைச்சியை யும், துவரையையும் கலந்து துவையல் அரைப்பது அக் காலத்து வழக்கம். இதை 'வெண்துவை' என்பர்.

சேரநாட்டு மக்கள் பருத்தியாலும், பட்டாலும் நெய்யப்பட்ட ஆடைகளை அணிந்தனர். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன்னிடம் வரும் இரவலர்க்கு, அவர்கள் அணிந்திருந்த அழுக்கேறிய கந்தை உடையை நீக்கிப், பட்டா லியன்ற ஆடை தந்தான் என்று அவனைப் பாடிய குமட்டூர்க் கண்ணனுர் கூறுகிருர். அவர் பட்டாடையை 'நூலாக் கலிங்கம்' என்கிருர். நூற்கப்படாத நூல் பட்டன்ருே? அக்காலத்து வீரர்கள் ஆடையை நிலந்தோய உடுத்தனர் என்பது, 'இருநிலந் தோயும் விரிநூல் அறுவையர்,' என்ற பதிற்றுப்பத் தடியால் விளங்குகிறது.

பழங்காலச் சேரர் தலைவரும், மக்களும் பொன்னு லும், மணியாலும் ஆன பலவகை அணிகளால் தம்மை அழகு படுத்திக் கொண்டனர். இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன் பகையரசர் எழுவரை வென்று, அவர் களுடைய முடிப் பொன்னுல், ஆரம் செய்து அணிந்து கொண்டான் என்று குமட்டூர்க் கண்ணனுர் கூறுகிருர். இன்னும் அக்காலத் தரசர் மணி இழைத்த பொன்

ஆபரணங்களும், வயிர மாலையும், பொன்றாற் செய்த மாலையும் அணிந்தனர் என்பது,

" இலங்குமணி மிடைந்த பொலங்கலம்,"
" வயங்கு கதிர் வயிரம்,"
" பொன்னங் கண்ணி,"

என்ற தொடர்களால் விளங்குகிறது. அக்காலத்து மகளிர் தலை ஆபரணமும், குழையும், வளையல்களும், கால்களில் கிண்கிணியும், சிலம்பும் அணிந்திருந்தனர் என்பது முன்னூல்களிலிருந்து அறியலாம். அவர்கள் தம் கூந்தலுக்கு நெய்யணிந்து அதைச் சீவிப் பின்புறத்தில் முடிப்பர். அங்ஙனம் முடித்த கூந்தல் செவியின் பின்னே ஒடுங்கிச் சுருண்டு அமைந்திருக்கும். இதனை 'ஒடுங்கீ ரோதி', என்கிறார் புலவர். மகளிர் தம் கூந்தலிடையே கவரிமானின் மயிரையும் வைத்து முடியிட்டுக் கொள்வது பண்டைய வழக்கமாக இருந்தது. இங்ஙனம் முடியிட்டுக் கொள்வதைக் "கவரி முச்சி" என்பர்.

சேரர் காலப் பெண்டிர் இங்ஙனம் தம்மை ஒப்பனை செய்து கொண்டு காட்டிடத்தே சென்று ஊசலாடி மகிழ்வதுண்டு. இளமகளிர் பலர் கூடித் துணங்கை என்னும் கூத்தாடுவது பண்டைய வழக்கமா யிருந்தது. அவர்கள் ஆற்றங் கரையில் மணலினாற் சிற்றில் கட்டி, அதன் கண் வண்டலம் பாவை செய்து வைத்து, அதற்கு மரக்கிளைகளி லிருந்து பூவைப் பறித்து அணிந்து, பிறகு தாம் ஆற்று நீரில் விளையாடி மகிழ்வர். இஃது,

" அரி மயிர்த் திரண்முன்கை
வாலிழை மடமங்கையர்
வரிமணற் புனைபாவைக்குக்
குலவுச்சினைப் பூக்கொய்து
தண் பொருநைப் புனல்பாயும்
விண்பொருபுகழ் விறல்வஞ்சி,"

என்ற புறநானூற்றுப் பாடலிலிருந்து விளங்குகிறது. இன்னும் மகளிர் ஆன்பொருநை ஆற்றங்கரையிலே திண்ணைபோல் உயர்ந்த மணல் மேட்டில் அமர்ந்து, கழங்காடுவர் என்றும் புறநானூறு கூறுகிறது.

பண்டை நாளில் புலவரும், பாணர், கூத்தர், விறலியர் முதலாயினோரும் அரசரையும் தலைவரையும் அடைந்து பரிசில் பெற்று வாழ்ந்தனர். இவர்கள் அனைவரையும் அரசர்களும், தலைவர்களும் ஆதரித்து இலக்கியம், இசை, கூத்து முதலிய பல்வகைக் கலைகளையும் வளர்த்தார்கள். அரசர்கள் பகைவர் நாடுகளை வென்று கவர்ந்து வந்த பொருள்களைப் பாணர், கூத்தர், விறலியர், இரவலர் முதலியோர்க்குக் கொடுத்து மகிழ்ந்தார்கள்.

"விரியுளை மாவும் களிறுந் தேரும்
வயிரியர் கண்ணுளர்க்கு ஓம்பாது வீசி"னன்

இமயவரம்பன் என்பர்.

அரசர்களும் ஏனைய வள்ளல்களும் தம்மைப் பாடிய புலவர்களுக்குப் பெரும் பொருளும், நிலமும், ஊரும் கொடுத் துதவினார்கள். இதற்குப் பதிற்றுப்பத்தி லுள்ள பதிகப் பாடல்கள் உரை தக்க சான்றாகும். எடுத்துக் காட்டாகச், செல்வக்கடுங்கோ ஆழியாதன் தன் மீது பத்துப் பாடல்கள் பாடிய கபிலர்க்கு நூறாயிரம் பொன் தந்ததோடு, நன்று என்னும் குன்றின் மீது ஏறி நின்று தன் கண்ணிற் பட்ட நாடுகளெல்லாம் அவர்க்குக் கொடுத்தான் என்று ஏழாம் பத்தின் பதிக உரையிலிருந்து நாம் அறிகிறோம். இதனால் இலக்கியங்கள் ஓங்கி வளரலாயின. அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து முதலிய சங்க நூல்களில் காணப்படும் சேரர் பற்றிய பாடல்களிலிருந்து அக்காலத்து இலக்கியப் பெருமையை உணரலாம்.

"தொடைபடு பேரியாழ் பாலை பண்ணிப்
பணியா மரபின் உழிஞை பாட,"
"பாண்டியல் விளக்குப் பருஉச்சுடர் அழல
நன்னுதல் விறலியர் ஆடும்,"

என்பன போன்ற பதிற்றுப்பத்து அடிகளிலிருந்து பண்டைச் சேர நாட்டில் இசையுங் கூத்தும் இயங்கிய தன்மையை அறியலாம்.

பண்டைச் சேரர் குடிமக்கள் விருந்தோம்பலில் தலை சிறந்தவர்களாக விளங்கினர். ஒருவன் தன் உணவினைப் பிறர்க்குப் பகுத்துக் கொடுத்து உண்ணுதல் சிறந்த அறமாகக் கருதப்பட்டது. களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் என்ற சேர அரசன் நுகர்தற்கு இனிய பல பொருள்களைப் பெறின், அவற்றைத் தானே நுகர வேண்டும் என்று எண்ணுமல், பிறர்க்கும் அப்பொருளைப் பகுத்துக் கொடுக்கும் ஆண்மையுடையவன் என்று காப்பியாற்றுக் காப்பியனார் என்ற புலவர் கூறுகிருர். சிறந்த பொருளைப் பெறும்போது, அதைத் தானே அநுபவிக்க வேண்டும் என்ற விருப்பம் யாவர்க்கும் எழும் அன்ருே? அவ்விருப்பத்தினை அடக்கி அச்சேர வேந்தன் பிறர்க்குப் பகுத்துக் கொடுத்தது ஆண்மைச் செயல் என்று புலவர் அவனைப் பாராட்டுகிருர்.

மகளிர் கற்பொழுக்கத்தைத் தமக் குயிராகப் போற்றி ஒழுகிஞர்கள். "காமர் கடவுளும் ஆளும் கற்பு"—கடவுளரையும் ஏவல் கொள்ளும் கற்பு என்று அக்காலப் பெண்டிருடைய கற்பு பாராட்டப் பெறுகிறது. காதலரைப் பிரிந்த மகளிர், அவர் பிரிந்த நாட்களைச் சுவரில் கோடிட்டுக் குறித்துக் கொள்வது மரபு. இயல்பாகவே சிவந்த அவர்தம் விரல் சுவரில் பல நாளும்

எழுதுவதால் இன்னும் சிவந்து தோன்றும் என்ற குறிப்பு பதிற்றுப்பத்தில் காணப்படுகிறது.

அக்கால வீரர்கள் அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள். பொருகளத்தில் அவர்களுக்கு எத்தகைய பேரிடர் நேரினும் புறமுதுகிட்டு ஓடாத கொள்கை யுடையவர். "ஓடாப் பூட்கையர்" என்று அவர்கள் கூறப்பெறு கின்றனர். அவர்கள் மார்பு வாளால் வெட்டுப் பட்டு மேடு பள்ளமுமாய் வரி போன்று இருக்கும். இறைச்சி விற்போர் இறைச்சியைத் துண்டிப்பதற்கு அடியிலே வைக்கும் மரக்கட்டை எங்ஙனம் வெட்டுக்கள் நிறைந்து தோன்றுமோ, அதைப் போன்று இருக்கும் வீரர் மார்பு என்று கபிலர் விளக்குகிறார். அவ்வீரர்கள் உள்ளத்தில் நிலையாமை பற்றிய எண்ணமே குடிகொண்டிருக்கும். ஆகையால் அவர்கள் இவ்வுலகத்தில் நிலைத்து நிற்ப தாகிய புகழொன்றையே நோக்கமாகக் கொண்டு தம் கடமையை ஆற்றுவார்கள். எனவே அவர்கள் 'காஞ்சி சான்ற வயவர்' என்று பாராட்டப் பெறுகிறார்கள்.

சேரர் காலத்தில் அரசர்களும் குடி மக்களும் அந்தணர்களுக்கு மிக்க பெருமை தந்து அவர்களைப் போற்றினார்கள். அக்காலத்தில் அந்தணர்களுக் குரிய தொழில் ஓதல், வேட்டல், ஓதுவித்தல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்று ஆறாகும். இவ் வாறு தொழிலையும் முறையாகச் செய் தொழுகும் அந்தணர் வழி அரசரும், ஏனையோரும் ஒழுகினார்கள். அறம் புரிந்து ஒழுகும் அந்தணர்களுக்குப் பணிய வேண்டும் என்பது பண்டை யோர் கொள்கை.

"பார்ப்பார்க்கு அல்லது பணிபறி யலையே"

'அந்தணர்களுக் கல்லாமல் வேறு யார்க்கும் பணியாதவனே' என்று செல்வக்கடுங்கோ ஆழி

யாதனைக் கபிலர் பாடுகிறார். சேர அரசர்களும் பிறரும் இவ்வந்தணர்களைக் கொண்டு பெருவேள்வி செய்து தமக்கு உறுதியை நாடினர்.

" கேள்வி கேட்டுப் படிவம் ஒடியாது
வேள்வி வேட்டனை உயர்ந்தோர் உவப்ப "

" அரிய மறைப் பொருளைக் கேட்டு விரதம் தவறாது உயர்ந்தவர்கள் மனமகிழும்படி வேள்விகளைச் செய்து முடித்தாய், " என்று அரிசில்கிழார் தகடூர் எறிந்த பெருஞ் சேரல் இரும்பொறையைப் பாடுகிறார்.

பண்டைச் சேரர் நாட்டில் முருகன், சிவன், திருமால் முதலிய கடவுளரை வழிபடுவோரும், ஆசீவகரும், சைனரும், பௌத்தரும் இருந்தனர். இவர்கள் தமக்குள் எவ்வகை வெறுப்புமின்றிக் கலந்து வாழ்ந்து வந்தனர். பிற்காலத்தில் ஏற்பட்ட சமயவெறி அக்காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. சேரன் செங்குட்டுவன் சிவனருளால் தோன்றியவன்.

" செஞ்சடை வானவன் அருளினில் விளங்க
வஞ்சித் தோன்றிய வானவ, "

என்று சிலப்பதிகாரம் அவ்வேந்தனைக் குறிக்கிறது. இவன் வஞ்சியினின்று வட நாட்டுக்குப் புறப்படுங் காலையில் சிவபிரான் பாதுகைகளை வாங்கித் தன் தலையிலே தரித்துக் கொண்டான். அப்போது ஆடக மாடமென்னுங் கோயிலிற் பள்ளி கொண்ட திருமால் சேடத்துடன் சிலர் வந்து இவனை வாழ்த்தி நின்றனர். இவன் அச்சேடத்தை வாங்கித் தன் தோள்மீது தாங்கிக் கொண்டான். இங்ஙனம் சிலப்பதிகாரத்தில் கூறப் படுகிறது. இதனால் இவன் சிவபெருமான்பால் பக்தி யுடையவனாயினும், வைணவத்தின்பால் வெறுப்

பில்லாதவனுய்த் திருமால் சேடத்தையும் கொண்டான் என்று தெரிகிறது.

இதுவரை கூறியவற்றுல் சேரர் காலத்து நானில மக்கள் வாழ்க்கை முறையும், பேரூர்களின் சிறப்பும், மக்கள் பண்பும், அக்காலத்துக் கலை, சமய நிலை முதலியவைகளைப் பற்றியும் ஒருவாறு தெளியலாம்.

# 5

# பாவையின் உயிர்ப்பு

இவ்வுலகம் காதலால் இயங்குகின்றது. அது நிலைத்து நிற்பதும் காதலாலேயாம். இவ்வுலகின் உயிரினங்கள் அனைத்தும் காதலுக்குக் கட்டுப்பட்டவை. புழு, பறவை, விலங்கு, மக்கள் ஆகிய அனைத்தையும் கூர்ந்து நோக்கின் அவை காதலால் வளர்கின்றன என்ற உண்மையை உணரலாம். சுருங்கக் கூறின் காத லின்றேல் இவ்வுலகம் இல்லை.

காதல் தெய்வ நீர்மை சான்றது. காதல் நிறைந்த இடத்தில் அமைதி நிலவும்; அழகு மிளிரும். அது குறைந்த இடத்தில் அமைதி குறையும்; கொடுமை நிறையும். போரும் பூசலும், பிணக்கும் பொருமையும், காழ்ப்பும் வெறுப்பும் எங்குத் தோன்றுகின்றனவோ அங்குக் காத லில்லை என்று கொள்ள வேண்டும்.

உயிர் வளர்ந்து பண்படுதற்கு உறுதுணையாய் அமைவது காதல். இவ்வுலகில் உறுதிப்பேறு எய்திய உத்தமர்களின் வரலாற்றினை ஆராய்ந்தால், அவர்கள் உய்வுக்குக் காரணமாய் இருந்தது காதல் என்பது புலனும். புத்தர், வள்ளுவர், ஏசு, தாயுமானவர், இராம லிங்க அடிகள், காந்தி—இவர்களுடைய வாழ்க்கை வரலாறுகளை நோக்குக! அவர்தம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் காதல் கரைபுரண்டது. காதற் பெருக்கே அவர்தம் வாழ்வு எனலாம். அவர்தம் கரையிலாக் காதல் வெள்ளத்தால் பெறலரும் பயன் எய்தி உய்ந்தவர் எத்துணைப் பேர்!

கணவர் மனைவியரிடையே நிகழ்கின்ற அன்பே காதலாகும் என்று சிலர் கருதுகின்றனர். இவர் அறியார். காமத்தைக் காதலாகக் கொள்வோரின் கருத்து இஃது எனலாம். காமம் வேறு; காதல் வேறு. காமம் உடலைப் பற்றியது; காதல் உயிரைப் பற்றியது. கணவன் மனைவியரிடையே காதல் தொடங்குகிறது. அவர்தம் இல்லறத்தின் தொடக்கத்தில் அஃது அரும்புகிறது. இங்ஙனம் அவர்களிடையே தொடங்கிய காதல் அங்கேயே சிறைபட்டுக் கிடப்பதில்லை. நாளடைவில் அது மக்கள், சுற்றம், நட்பினர், விருந்தினர் முதலியோரிடமும் விரிந்து பரவுகிறது.

காதல் ஒரு வரம்பிற்கு உட்படாது. அஃது எல்லை இகந்து பரவும். இஃது உண்மைக் காதலின் பெற்றி. இல்லறத் தொடக்கத்தில் அரும்பிய காதல் தூய்மையுடையதாயின் அது விரைவில் போதாகி மலரும்; பின்பு காயாகிக் கனியும். காதல் கனிந்த நிலைதான் அருள் நிலை; எல்லா உயிரினங்களிடத்தும் ஒரே தன்மைத்தான அன்பு செலுத்தும் நிலை; தன்னலம் மறந்து பிற உயிர்களின் நலனுக்காக முயலும் நிலை. சுருங்கக் கூறின்

அதுவே பற்றற்ற நிலையாம். இந் நிலையிலிருந்துதான் மேலே குறிப்பிட்ட அருட் செல்வர்கள் உயிர்கள் உய்ய அருள் புரிந்தார்கள். இவ்வுலகில் போர், பூசல் முதலியவைகள் அறவே ஒழிந்து எல்லா நாட்டவரும் இனிதே இன்பமுற வாழவேண்டுமாயின், இத்தகைய கனிந்த காதல் உலகெங்கணும் நிறைய வேண்டும்.

தலைவன் தலைவியரிடையே காதல் அரும்புகிறது என்றோம். இங்ஙனம் அரும்பிய காதலின் பெற்றியைத் தான் நெடுந்தொகை, குறுந்தொகை, நற்றிணை, கலித்தொகை முதலிய நூல்களின் அகப்பொருட் பாடல்கள் ஓதுகின்றன.

ஒரு நல்லிளங்காளை தற்செயலாய் ஒரு மெல்லியல் பாவையை எதிர்ப்பட்டான். காளை அழகும், ஆண்மையும், வீரமும், பண்பும் நிறைந்தவன். பாவையும் அழகே உருக் கொண்டாற்போல் ஒளிர்ந்தாள்; பெண்மையின் சிகரமாக விளங்கினாள். அவ்வணங்கின் திருவுருவம் அக்காளையின் உள்ளத்தில் குடிபுகுந்தது. அவன் உள்ளத்தில் காதல் பெருக் கெடுத்தது. காரிகையும் காளைபால் சிந்தையை இழந்தாள். இருவர் கண்களும் பேசின; உள்ளங்கள் ஒன்றின. இனி அவளைத் தான் பிரிய முடியாதென்றும், பிரிந்தால் தன்னால் உயிர்வாழ இயலாதென்றும் அக்காளை சூளுறவு செய்தான்.

காதலால் கட்டுண்ட அவ்விளஞ் செல்வர் இருவரும் பிறர் அறியா வண்ணம் பல நாட்கள் காதலொழுக்கம் நிகழ்த்தினர். ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்து கொண்டனர். அவனுக்கு அவள் இன்றியமையாதவள் ஆனாள். அவளுக்கு அவனும் இன்றியமையாதவனானான். பின்பு இருவரும் திருமணம் செய்துகொண்டு இல்லறத்தில் இறங்கினர். அவர்தம் இல்லறம் இனிதே நிகழ்ந்தது; வாழ்க்கை இனித்தது. "இல்லது என்

இல்லவள் மாண்பானல்?" எனவே அக்காளையின் வாழ்க்கை ஈறில்லாப் பேரின்பமாய் இலங்கியது.

இளங் காதலர்கள் ஓர் அருமை மகவுக்குப்பெற்ரோர் ஆனார்கள். "மயக்குறு மக்களை இல்லோர்க்குப், பயக் குறை இல்லை தாம் வாழும் நாளே" என்று புறம் பாடு கிறது. இது பேருண்மை. தம் குழந்தையின் மழலை மொழிகளிலும் குறும்புச் செயல்களிலும் மதியை இழக் காத பெற்ரோர் இம் மாநிலத்தில் யார்? ஆகலின் அன்புக் காதலர்களின் வாழ்க்கையில் மேலும் இன்பம் பெருக லாயிற்று.

இல்லறம் தொடர்ந்து இனிதே நிகழ்வதற்குப் பொருள் தேவை. பொருளில்லார்க்கு இவ்வுலகம் ஏது? ஆகையால் பொருள் தேடக் காதலன் எண்ணினன். பொருள் ஈட்ட அவன் அயலூர்க்குச் செல்லவேண்டும்; தன் காதலியைப் பிரியவேண்டும். பெண்களோடு அய லூர்க்குச் சென்று பொருள் ஈட்டும் வழக்கம் பண்டைத் தமிழகத்தில் இல்லை. ஆகலின் அவன் காதலியைப் பிரிந்துதான் செல்லவேண்டும்; பொருள் பொருட்டுத் தான் பிரியப்போவதாகக் காதலியிடம் அவன் சொன்னல் அவள் அதைக் கேட்டதும் துடிப்பாள்; பதைப்பாள். அச் சொல்லைக் கேட்டவுடனே அவளுயிர் அவள் உடலை விட்டு நீங்கிப் போகவும் கூடும். அவன்பால் அவளுக்கு அத்துணை அன்பு! அவனே அவளுக்கு உயிர் அல்லனே?

> "செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்று நின்
> வல்வரவு வாழ்வார்க் குரை"

என்று தலையாய காதலின் பெற்றியைத் திருவள்ளுவர் உணர்த்துவதைக் காண்க.

எனவே, தன்னுடைய பிரிவைப் பற்றி அவளிடம் சொல்ல அவனுக்கு நா எழவில்லை. தன்னுடைய பிரி

UNIVERSITY EXTENSION LIBRA

வுணர்ச்சி அவனுக்கு அவள்பால் மேலும் அன்பை மிகு வித்தது. அவள்மீது அவன் அன்பு மொழிகளைப் பொழிந் தான்; அவளுடைய அணிகலன்களைத் தானே அவளுக் குத் திருத்தி அணிவித்தான்; அவளுடைய நலங்களை எல்லாம் உளங்கனிந்து பாராட்டினான். சுருங்கக் கூறின் அதற்குமுன் அவன் அத்துணை அன்பும் பரிவும் அவள் பால் செலுத்திய தில்லை எனலாம். இஃது அவளுக்கு ஐயத்தை விளைவித்தது. தன்னைப் பிரியும்பொருட்டே அவன் தன்பால் அளவுமீறி அன்பைப் பொழிவதாக அவள் உணர்ந்தாள். அவள் உள்ளத்தில் துன்பம் நிறைந்தது. தன் ஆருயிர்த் துணைவன் தன்னைப் பிரிந் தால் தான் தனித் திருக்க வேண்டு மல்லவா? இத் தனிமை உணர்ச்சி அவளுக்கு வருத்தத்தை இன்னும் மிகுவித்தது. அவளைப் பல அன்பு மொழிகளால் காதலன் அழைத்தான். அவ் இன்மொழிகளுள் ஒன்றும் அவள் செவியில் விழ வில்லை. அவள் உள்ள முழுதும் அப் போது பிரிவு உணர்ச்சியால் ஏற்பட்ட துன்பமே குடிகொண் டிருந்தது. எனவே வேறொன்றுக்கும் அங்கு இடமில்லை. தன் அருமைக் குழந்தையை அவள் ஆர்வத் தோடு எடுத்துத் தன் மார்பில் அணைத்துக்கொண்டு காதலனை மெல்ல அணுகினாள். துன்ப மிகுதியால் அவள் முகம் தரையை நோக்கி இருந்தது. தன் அழகு மிக்க பாதத்தின் கட்டை விரலால் அவள் தரையைக் கீறிக் கொண்டே மெல்ல மெல்லத் தன் காதலனைக் குறுகினாள். துன்பம் மிகுந்த ஓர் இளம்பெண் தரை யைக் கட்டை விரலால் கீறுவது இயல்பே. இங்ஙனம் காதலனை அணுகிய காரிகை துன்பம் நிறைந்த முகத் தோடு அவன்முன் நிற்க வில்லை. காதலன் பொருள் ஈட்டும் நற்செயலுக்காகப் பிரியும் போது காதலி வாடிய முகத்தோடு விடைதருவது பண்புடைமை யாகாது. ஆத

லால் காதலி தன் கூரிய பற்கள் அழகுடன் விளங்கும் படியாகப் புன்முறுவல் பூத்து அவன் முன் நின்றுள். ஆனுல் அப் புன்முறுவல் உண்மையான தன்று; அவள் வலிந்து வரவழைத்தது.

இக்காட்சியினைப் பாலை பாடிய பெருங் கடுங்கோ என்ற புலவர் பெருந்தகை மிக அழகாகச் சித்திரித் துள்ளார்:

“ அளிநிலை பொருஅ(து) அமரிய முகத்தள்
விளிநிலை கேளாள் தமியள் மென்மெல
நலமிகு சேவடி நிலம்வடுக் கொளாஅக்
குறுக வந்துதன் கூரெயிறு தோன்ற
வறிதகத் தெழுந்த வாயல் முறுவலள்......”

என்பன அப்புலவர் பெருமானின் சுவைபொருந்திய செம் மொழிகளாம்.

காதலியின் வருத்தத்திற்குக் காரணம் தன் காதலன் தன்னைப் பிரியின் தான் தனித்திருக்க வேண்டுமே என் பது மட்டுமன்று. அவன் தன்னைப் பிரிந்து பாலை நிலத்து வழியே செல்லும்போது அவனுக்குப் பல துன்பங்கள் நேரக்கூடு மன்ருே? தனக்கு எவ்வளவு துன்பங்கள் நேரினும் காதலி அவற்றைப் பொறுத்துக் கொள்வாள். ஆனுல் தன் அருமைக் காதலன் ஒரு சிறு துன்பம் எய்தினும் அதை அவள் பொறுக்க மாட்டாள். இஃது அரிய கற்பின் திறம். இப்போது தன் இன்னுயிர்த் துணைவன் தன்னைப் பிரிந்து பாலை நிலத்துச் செல்வுழி அவனுக்கு ஏற்படக்கூடிய பல ஏதங்களைத் தலைவி நினைந்து நொந்தனள். தலைவன் நடத்தற் குரிய பாலை நிலம் உயர்ந்த ஓமை மரங்கள் நிறைந்த ஒரு காடு. அக் காட்டில் பல நெல்லி மரங்கள் உண்டு. அம் மரங்களி

லுள்ள பளிங்கு போன்ற நெல்லிக் காய்கள் பல உயர்ந்த பாறைகள் மீது உதிர்ந் திருக்கும். இங்ஙனம் உதிர்ந் திருக்கும் நெல்லிக் காய்கள் சிறுவர்கள் விளையாடுதற் காக ஈட்டி வைத்திருக்கும் வட்டுக் காய்களைப்போல் காட்சி யளிக்கும். கடும் வெயிலினால் வழியிலுள்ள பாறைகள் யாவும் சூடேறி அனல் காந்தும். இத்தகைய வழியில் சிறு சிறு பரல் கற்கள் நிறைந்திருக்கும். அக் கற்களின் நுனிகள் தீட்டப்பட்டவை போல் கூர்மை யுடையவையாய் வழிச் செல்வோர் கால் விரல்களைச் சிதைக்கும். இத்துணை ஏதம் நிறைந்த வழியினைத் தன் தலைவன் கடந்து செல்லவேண்டுமே என்று தலைவி நினைத்ததும் அவள் மனம் சொல்லொணு வேதனை யுற்றது. அவன் பொருள் ஈட்டுதலாகிய நற்செயலின் பொருட்டுப் பிரியினும் அப் பிரிவுக்கு அவள் மனம் உடன்பட வில்லை. இவ்வேதனை உள்ளத்தோடு அவள் அவன் முன் நின்ருள். அப்போது அவளுக்கு அவன் தன்னை முதன் முதலில் சந்தித்தபோது கூறிய சூளுறவு நினைவுக்கு வந்தது. "என் இன்னுயிரே! யான் இனி உன்னைப் பிரியேன். பிரிந்தால் உயிர் தரியேன்," என்பது அவன் சூளுரை அன்ருே ? இங்ஙனம் சூளுறவு செய்தவன் இப்போது பிரிவது அறமாகாது என்று அவள் கருதினுள். ஆனுல் அவனிடம் அதை அவள் கூற வில்லை. தன் காதலன் செய்யும் தவற்றைக் காதலி வெளிப்படையாகக் கூறி அவனுக்கு உணர்த்துவது நாகரிக மாகாது. பண்புடைய ஒரு பெண் அதைக் குறிப்பாகவே உணர்த்த விரும்புவாள். எனவே, தலைவன் தன்னை இப்போது பிரிவது அறமாகாது என்ற கருத்து அவள் முகத்தில் தேங்கிக் கிடந்தது. தலைவன் அதனை உணர்ந்தான் ; இக் கருத்தினைப் பின் வரும் அடிகளால் புலவர் பெருங்கடுங்கோ திறம்படத் தீட்டியுள்ளார் :

" கண்ணிய(து) உணரா அளவை யொண்ணுதல்
வினைதலைப் படுதல் செல்லா நினைவுடன்
முளிந்த ஓமை முதையலங் காட்டுப்
பளிங்கத் தன்ன பல்காய் நெல்லி
மோட்டிரும் பாறை ஈட்டுவட் டேய்ப்ப
உதிர்வன படூஉம் கதிர்தெறு கவாஅன்
மாய்த்த போல மழுகுநுனை தோற்றிப்
பாத்தி யன்ன குடுமிக் கூர்ங்கல்
விரல்நுதி சிதைக்கும் நிரைநிலை அதர
பரன்முரம் பாகிய பயமில் கானம்
இறப்ப எண்ணுதி ராயின் அறத்தாறு
அன்றென மொழிந்த தொன்றுபடு கிளவி
அன்ன வாக என்னுநள் போல
முன்னம் காட்டி முகத்தின் உரையா......"

இங்ஙனம் வேதனை நிறைந்தவளாய்த் தன் தலைவன் முன் அசையாமல் நின்ருள் தலைவி. அவள் அங்ஙனம் அசையாமல் நின்றிருந்த காட்சி, கிழியில் தீட்டப்பெற்ற ஓர் அழகிய பாவையின் ஓவியம் போன்று விளங்கியது. தலைவன் தன்னைப் பிரிதலாகிய ஒரே எண்ணமே அவள் உள்ளத்தில் அப்போது குடிகொண் டிருந்தது. அப் பிரிவெண்ணம் அவள் வருத்தத்தை மேலும் மேலும் மிகுவித்தது. அவள் கண்களில் நீர் பெருகிற்று. ஆனல் அந்நீரைக் கண்களினின்று வெளிப்படுத்தாமல் அடக்கிக் கொண்டாள். தன் அருமைத் தலைவன் பிரியும்போது தான் கண்ணீரும் கம்பலையுமாய் அவனுக்குக் காட்சி யளிப்பது கூடா தன்றே? ஆனல் துன்பத்தைத் தாங்க இயலாது அவள் பெருமூச் செறிந்தாள். துன்ப மிகுதி யால் அப்பெரு மூச்சு மிகவும் வெப்பமாக இருந்தது. தன் அருமைக் குழந்தையைத் தன் மார்பின்கண் அவள் அணைத் திருந்தாள் அல்லளோ? அக்குழந்தை முடி

யின்கண் செங்கழுநீர் மலர்மாலை அணியப்பட் டிருந்தது. தலைவியின் பெருமூச்சு அம் மலர் மாலையில் பட்டது. உடனே அம் மூச்சின் வெப்பத்தால் அம்மாலை நிற மிழந்து கரிந்து போயிற்று. இதைக் காதலன் கண்டான்; தலைவியின் அளக்கலாகா அருந்துயரை உணர்ந்தான். தான் அவள் பக்கலில் இருக்கும்போதே இத்துணை வருத்த மெய்தும் தலைவி, தான் பிரியின் அவள் பிழைத் தல் அரிது என்று தலைவன் எண்ணினான்; எண்ணித் தான் பிரிவ தில்லை என்று உறுதிகொண்டான். இதை,

“ ஓவச் செய்தியின் ஒன்றுநினைந் தேற்றிப்
பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொடு
ஆகத் தொடுக்கிய புதல்வன் புன்தலைத்
தூநீர் பயந்த துணையமை பிணையல்
மோயினள் உயிர்த்த காலை மாமலர்
மணியுரு இழந்த அணியழி தோற்றம்
கண்டே கடிந்தனம் செலவே ஒண்தொடி
உழையம் ஆகவும் இனைவோள்
பிழையலள் மாதோ பிரிதும்நாம் எனினே”

—அகநானூறு-5.

என்று சுவை நிரம்பப் பாடுகிறார் புலவர் பெருங்கடுங்கோ. தலைவியின் பெருமூச்சு தலைவன் பொருள் பொருட்டுப் பிரியும் பிரிவைத் தடுக்க வல்லதாயின் உண்மைக் காதலின் பெற்றியை என்னென்று போற்றுவது? உலகம் வாழ இத்தகைய தூய காதல் யாண்டும் நிலைத்து நிலவுவதாக!

6

# தெரிந்துவினையாடல்

ஒரு நாட்டின் உயர்வுக்கு நல்லாட்சி வேண்டும். ஆட்சிமுறை சிறந்தால் நாட்டில் உணவும், நீரும், இன்னும் மற்ற வளங்களும் நிறைந்து, உயிர்கள் யாவும் இன்புற்று வாழும். உயிர்கள் வாழ்விற்கு உணவும் நீரும் இன்றியமையாதவை என்று கூறவேண்டுவ தில்லை; அவ்வுணவும் நீரும் நல்லாட்சி நிலைத்த நாட்டில்தான் பெருகும். இதனால்தான், "நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே, மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்," என்று மோசிகீரனார் என்ற புலவர் உண்மை தெளிந்து பாடுகின்றார். 'தசரதன் தன் நாட்டு உயிர்கள் அனைத்தையும் தன்னுயிர்போல ஓம்பினான்; ஆகையால் அவன் அவ்வுயிர்களுக் கெல்லாம் உடம்பு போல் ஆயினான்,' என்று கூறுவர் கம்பர். இதனால்தான் தசரதனது தலை

நகரமாகிய அயோத்திமா நகரம் ‘போகங் கனியொன்று பழுத்தது போல்’ இன்பமெலாம் நிறைந்து விளங்கியது.

இத்தகைய நல்லாட்சி உலகமெலாம் பரவ வேண்டும் என்பது திருவள்ளுவரது விருப்பம். திருவள்ளுவர் ஒரு பழுத்த அறிஞர்; உலக அனுபவம் முதிர்ந்தவர். அவர் நல்லாட்சிக் குரிய நெறிகளைத் தம் ஒப்பற்ற நூலாகிய திருக்குறளில், அரசியல் என்ற பகுதியில் திறம்பட விளக்கி யுள்ளார். அவற்றுள் ‘தெரிந்துவினையாடல்’ என்பது ஒன்று.

ஓர் ஆட்சியில் பல்வேறு செயல்கள் நடைபெற வேண்டும். அச்செயல்களைத் திறமையாகச் செய்து முடிக்க வல்லோரை அரசனோ, அல்லது ஆட்சி செலுத்தும் தலைவனோ முதலில் ஆராய்ந்து தெளிய வேண்டும். செயலைச் செய்து முடித்தற் குரியவர்கள் நற்குடிப் பிறப்பும், குற்றமே இல்லாத வாழ்வும், பழிக்கு அஞ்சும் பண்பும், சிறந்த அறிவும் உடையவர்களாக விளங்கவேண்டும். இத்தகைய நல்லியல்பு இல்லாதவர்களைப் பதவியில் இருத்தினால், செயல்கள் சிதைவுற்று முடிவில் ஆட்சி சீர்குலையும் என்பது திருவள்ளுவர் கருத்து. இங்ஙனம் செயல்களைச் செய்து முடிக்க வல்லவர்களை ஆராய்ந்து தேர்ந் தெடுத்த அரசன் அவர்கள் செய்தற் குரிய செயல்களையும் நன்கு ஆராய்ந்து அவற்றை அவர்களைக் கொண்டே செய்விக்க வேண்டும். இதைத்தான் ‘தெரிந்து வினையாடல்’ என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் விளக்கிக் கூறுகின்றார். இவ்வதிகாரத்தில் கூறப்பட்டுள்ளவை அரசியல் துறைக்கு மட்டுமன்றிப் பொதுவாக ஏனைய தொழில் துறைகளுக்கும் பொருந்துவன வாகும்.

முதலில் வினைசெய்வானது இலக்கணம் கூறப்படுகின்றது. வினைசெய்பவன் தான் செய்தற் குரிய செயலைச் சிறிதும் ஆராயாமல் நிறைவேற்றி விடக்கூடாது.

"அரசன் ஆணை. அவன் ஆணைப்படி செயலை நிறைவேற்றுவது என் கடமை," என்று உடனே செயலைச் செய்து முடிப்பவன் வினை செய்வதற்குத் தகுதியற்றவனே ஆவன். தான் செய்தற்குரிய செயலால் விளையும் நன்மைகளையும் தீமைகளையும் அவன் ஆராய்ந்து, நன்மையே விளையும் வண்ணம் அவன் செயலாற்ற வேண்டும். இக்கருத்தை,

> "நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
> தன்மையான் ஆளப் படும்"

என்ற குறளில் திருவள்ளுவர் அமைத்துப் பாடுகின்றார். இன்னும் வினை செய்பவன் பொருள் வரும் வழிகளை மேலும் மேலும் பெருக்கும் இயல்புடையவனாக அமைய வேண்டும். அமைச்சர்கள் அரசாங்கத்திற்கு வரி மூலமாகப் பொருள் ஈட்டுகின்றார்கள். வரி, பொருள் வரும் வழிகளில் ஒன்றே அன்றி அதுவே சிறந்த வழி ஆகாது. முக்கியமாக ஆறு, குளம், கால்வாய்கள், அணை முதலியவைகளைப் பெருக்குவதே பொருள் வரும் வழிகளைப் பெருக்குவ தாகும். இவை பெருகினால் நாடு நீர்வளம் பெருகிச் செழிப்புறும். நாடு செழித்தால் மக்கள் தாமே மனமுவந்து அரசாங்கத்திற்கு வரிப்பொருள் முதலியவைகளை ஈவார்கள். இங்ஙனம் பொருள் வரும் வழிகளைப் பெருக்கி அவைகள் மூலமாகச் செல்வங்களை வளர்க்கும் ஆற்றலுடையவனே வினை செய்தற்குத் தகுதியுடையவனாவான். மேலும் அவன் பொருள் வரும் வழிகளுக்கும், பொருட்கும் நேரும் இடையூறுகளை நாள்தோறும் ஆராய்ந்து, அவற்றை நீக்கவல்லவனாகவும் இருக்க வேண்டும்.

> "வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
> ஆராய்வான் செய்க வினை"

என்பது குறள்.

மற்றும் வினை செய்பவனுக்கு இன்றியமையாது வேண்டப்படுவனவாகிய பண்புகள் நான்கு. அவன் தன் அரசனிடத்தும் தலைவனிடத்தும் அன்புடையவனாகவும், சிறந்த அறிவு நிறைந்தவனாகவும், தான் ஆற்றும் செயலின்கண் கலக்க மில்லாதவனாகவும், பொருள் கைக்கு வந்தபோது அதன்மேல் அவா அற்றவனாகவும் அவன் விளங்க வேண்டும். இவ்வரிய பண்புகள் நிறைந்தவனே வினை செய்தற்குத் தகுதியுடையவன் என்பர் திருவள்ளுவர்.

இங்ஙனம் அரசன் வினை செய்பவனின் பண்புகளை நன்கு ஆராய்ந்து தெளிந்த பின்பு அவன்கண் அவன் செய்தற்குரிய செயலை ஒப்படைக்கிறான் என்று கொள்வோம். ஆனால் வினை செய்பவன் அதை மேற்கொண்டு ஆற்றுங்கால், அவன் தன் உள்ளத்தை ஆசைக்குப் பறி கொடுத்து விடுவதும் உண்டு. அவன் செயலாற்ற மேற் கொண்ட பதவி அவனை இங்ஙனம் மாற்றி விடுகின்றது. இத்தகைய மாந்தர் இவ்வுலகில் பலருண்டு என்பர் திருவள்ளுவர்.

சச்சந்தன் என்பவன் ஏமாங்கத நாட்டு அரசன். அவன் தன் மாமன் மகளாகிய விசையை என்பாளை மணந்து, அவள்பால் எல்லையில்லாக் காதல் பூண்டொழுகினான். அவள் பேரழகில் தன் சிந்தை முழுதும் பறி கொடுத்து அவளை ஒரு கணமும் அவன் பிரிந்திருக்க மனமில்லாதவனானான். எனவே அவன் மதிப்பிற் குரிய அமைச்சனான கட்டியங்காரன் என்பவனை அழைத்துத் தன் அரசியலை ஏற்று நடத்தும்படியாக அவனுக்கு ஆணையிட்டான். கட்டியங்காரன் மனமகிழ்வோடு அரசன் ஆணையை யேற்று அகன்ற பின்னர், சச்சந்தனின் மற்றோர் அமைச்சனாகிய நிமித்திகன் என்பான் அரசனிடம் சென்று அவன் கட்டியங்காரனிடம் அரசியலை

ஒப்படைத்தது தவறென்று எடுத்துக் கூறினன். அதைக் கேட்ட சச்சந்தன், '*எனக்குயிர் என்னப் பட்டான் என்ன லால் பிறரை யில்லான், முனைத்திறம் முருக்கி முன்னே மொய்யமர் பலவும் வென்றான், தனக்கு யான் செய்வசெய் தேன் தான்செய்வ செய்க!*' என்றான். 'கட்டியங்காரன் எனக்கு உயிர்போன்றவன்; நெடுங்காலம் உண்மையாக உழைத்தவன். அவன் எனக்காகப் போர்முனையில் பகைவர்களை முறியடித்துப் பல போர்களை வென்றவன். அவனுக்கு நன்மை செய்வதற்கு என்னை யன்றி வேறு யார் இருக்கிறார்கள். அவனுக்கு நான் செய்யவேண்டிய நன்மையைச் செய்தேன். அவன் எனக்குச் செய்வன செய்க!' என்று கட்டியங்காரனைப் புகழ்ந்து பாராட்டினன்.

கட்டியங்காரன் தன் விருப்பப்படி ஆட்சி செய்து வந்தான். அரசனோ அந்தப்புரத்தில் போக வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்தான். நாளடைவில் கட்டியங்காரனுக்கு அரசியலைத் தான் கைப்பற்றிக் கொள்ள வேண்டுமென்ற அவா மூண்டெழுந்தது. அவன் அரசனைக் கொன்று விடுவதென முடிவு செய்தான். ஒரு நாள் அவன் திடீரெனச் சேனையோடு வந்து அந்தப்புரத்தை வளைத்துக் கொண்டான். சச்சந்தன் தன் அருமைத் துணைவியை ஒரு மயில் பொறியில் ஏற்றி அனுப்பிவிட்டுக் கட்டியங்காரனோடு போரிட்டு மடிந்தான்.

தன் அரசியலை ஏற்று நடத்துதற்குத் தகுதியுடையவன் கட்டியங்காரனே என்று நன்கு ஆராய்ந்து தெளிந்த பின்னரே சச்சந்தன் அவனிடம் அரசியலை ஒப்படைத்தான். 'எனக்குயிர் என்னப் பட்டான் என்னலால் பிறரை யில்லான், முனைத்திறம் முறுக்கி முன்னே மொய்யமர் பலவும் வென்றான்'

என்று சச்சந்தன் கூறுவதிலிருந்து இது தெளிவாகிறது. ஆனால் கட்டியங்காரன் பேராசையால் அரசனைக் கொன்று அரசியலைக் கைப்பற்றினன். இதனால்தான் திருவள்ளுவர்,

'எனைவகையால் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேருகும் மாந்தர் பலர்'

என்று உலகத்தார்க்கு எச்சரிக்கை செய்கிருர்.

இதனால் அரசனே அல்லது தலைவனே, ஒருவனிடம் தொடக்கத்தில் பெரியதொரு செயலை ஒப்பித்துப் பெருந் துன்பத்திற் குள்ளாகக் கூடாது என்பது தெளிவாகிறது.

வினை செய்பவன் தான் மேற்கொண்ட செயலை இனிதே முடித்தற்கேற்ற உபாயங்களை அறிய வல்லவனுக இருக்கவேண்டும். அவன் அவ் வுபாயங்களை அறிந்து செயலாற்றும்போது அவனுக்குப் பல இடையூறுகள் நேரக்கூடும். மேலும், 'இவன் கைக்கூலி வாங்கினன்; பழிப்புக்குரிய காரியங்களைச் செய்தான்,' என்று அவனுக்கு அடாப் பழியும் வந்து சேரலாம். ஆனல் அவன் உண்மையொன்றையே குறிக்கோளாகக் கொண்டு, அவனுக்கு நேரும் இடையூறுகளையும், பழிகளையும் பொறுத்துக் கொண்டு செயலாற்றுபவனுக வேண்டும். உண்மையாக உழைப்பவனுக்கு அடாத பழி நேர்ந்தால் அதற்காக அவன் மனம் எவ்வளவு பாடு படும் என்பதைக் கூறவேண்டுவ தில்லை. எனினும் அவன் உறுதியை இழக்காமல், தான் மேற்கொண்ட செயலை இனிதே செய்து முடிக்கவேண்டும். 'இத்தகைய பண்புடையவனிடமே வினை அன்புடையதாக அமையும். அது பிறனெருவனை ஏவும் இயல்புடைய தாகாது' என்கிருர் திருவள்ளுவர்.

"அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று."

என்பது குறள்.

அரசன் செய்பவன் இயல்பையும் அவன் செய்ய வேண்டிய வினையின் தன்மையையும் மட்டும் ஆராய்ந்தால் போதாது. அவற்றோடு எந்தக் காலத்தில், எந்த வினையைச் செய்தால், அஃது இனிதே முடியும் என்பதையும் அவன் ஆராய்ந்து உணர்ந்து அச் செயலை அக்காலத்தில் செய்விக்க வேண்டும்.

"செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்"

என்கிறார் திருவள்ளுவர்.

எழுபது வெள்ளம் வானரப்படையோடு இராமன் இலங்கைமா நகரை முற்றுகையிட்டு இராவணன் வரவை எதிர்பார்த்து நின்றான். ஆனால் இராவணன் வரவில்லை. இராமன் சீதையைப் பெற இறுதியாக மற்றொரு தூது அனுப்ப முடிவு செய்தான். எத்தனை முறை தூதனுப்பினாலும், இராவணன் சீதையைக் கொடுக்க மாட்டான் என்பது இராமனுக்குத் தெரியும். ஆனால் போர் நெறிப்படி அவன் மற்றொரு முறை தூதனுப்பத் தீர்மானித்தான். யார் தூது செல்லத் தகுதியுடையவர் என்று ஆராயப்பட்டது.

"...........அங்கதன் அமையும் ஒன்றோ
வீரமே விளைப்ப ரேனும் தீதின்றி மீள வல்லான்"

என்றான் இராமன். பகைவர்களாகிய அரக்கர்கள் தம் வீரமெலாம் காட்டினாலும், ஓர் இடுக்கண் இன்றி மீண்டுவர வல்லமையுள்ளவன் அங்கதன் என்று இராமன் உணர்ந்து, அவனை இராவணனிடம் தூதனுப்

பினான். இராவணன் அங்கதனைக் கண்டதும் கண்களிலிருந்து தீப்பொறி பறக்க நிமிர்ந்து பார்த்து, 'நீ யார்? வந்த காரியம் யாது?' என்று செருக்குடன் வினவினான். அதைக்கேட்டு அங்கதன் சிரித்து,

> " இந்திரன் செம்மல் பண்டோர் இராவணன் என்கின் றானைச்
> சுந்தரத் தோள்க ளோடும் வாலிடைத் தூங்கச் சுற்றிச்
> சிந்துரக் கிரிகள் தாவித் திரிந்தனன் தேவர் உண்ண
> மந்தரப் பொருப்பால் வேலை கலக்கினான் மைந்தன் என்றான்."

'இராவணன் என்பவனைத் தன் வாலினால் சுற்றிக்கட்டி மலைகள் தோறும் பாய்ந்து திரிந்தவனும், தேவர்களுக்காகத் திருப்பாற் கடலைக் கடைந்தவனுமாகிய வாலியினுடைய மைந்தன் நான்' என்று அங்கதன் இராவணன் சீற்றத்தைச் சற்றும் பொருட்படுத்தாது கூறினான். அங்கதன் வாலியினுடைய மைந்தன் என்று அறிந்ததும், இராவணன் உள்ளம் திகைப் பெய்தியது. அவன் செருக்கு அழிந்தது ; அங்கதனை எப்படியும் தன் வயப்படுத்த முயன்றான்; முடியவில்லை. பின்பு அங்கதன் தூதுமொழி புகன்றான். இராவணன் அதை ஏற்காமல், அங்கதனைப் பிடித்துத் தரையின்மீது மோதும்படியாகத் தன் வீரர்கள் நால்வருக்குக் கட்டளை யிட்டான். தன்னைப் பிடிக்க வந்த நான்கு வீரர்களையும் அங்கதன் தூக்கிக் கொண்டு உயரப் பாய்ந்து அவர்களைக் கோபுர வாயிலில் எறிந்து தன் காலால் மிதித்துச் சிதைத்து இராமனிடம் மீண்டான். அங்கதன் தூது வெற்றியுறாவிட்டாலும், அவன் அரக்கர் நெஞ்சத்தில் அச்சத்தை விளைவித்துத் திரும்பினான்.

> " இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
> அதனை அவன்கண் விடல்"

என்ற குறளுக்குத் தக்க சான்றாய் விளங்கினான் அங்கதன். இச்செயலை இக்கருவியாலே இவன் செய்து முடிக்க வல்லவன் என்று ஆராய்ந்து பின்பு அச்செயலை அவனிடம் விடவேண்டும் என்பது இக்குறளின் பொருள். இராவணனிடம் தூது செல்வதாகிய செயலை அங்கதன் தன் அறிவாலும் ஆற்றலாலும் செய்து முடிக்க வல்லவன் என்று இராமன் ஆராய்ந்து, அதனை அவன் மேற்கொள்ளுமாறு செய்தான். அங்கதனும் தூது சென்று இராமன் எதிர்பார்த்தபடி அரக்கரிடம் தன் வீரப் பெருமையை விளக்கி மீண்டான்.

ஒரு செயலைச் செய்தற்கு ஒருவனை ஆராய்ந்து தெளிந்த பின்பு, அச்செயலுக்கு அவனை உரியவனாக அரசன் செய்துவிட வேண்டும். அஃதாவது அவனே தனக்குகந்த வழியில் அச்செயலை நிறைவேற்றும்படியாகச் செய்யவேண்டும். அவன் அச்செயலைத் தொடங்கி நிகழ்த்துங்கால் அரசன் அதில் குறுக்கிடுதல் தவறு. அதனால் அச் செயல் கேடுறுவ தாகும். இதனால்தான் திருவள்ளுவர்,

> ''வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
> அதற்குரிய னாகச் செயல்''

என்று வலியுறுத்திக் கூறுகிறார். மேலும்,

> ''வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
> நினைப்பானை நீங்கும் திரு''

என்று அச்சுறுத்துகிறார்.

அதாவது, வினை செய்பவன் உண்மையோடும் ஊக்கத்தோடும் தன் செயலைச் செய்து வருகிறான் என்று கொள்வோம். அச் செயலின் உரிமையால் அவன் அரசனிடம் மிக்க நட்புப் பூண்டு ஒழுகுகிறான். ஆனால் அவன் மீது சிலர் பொறாமைகொண்டு அரசனிடம் அவனைப்

பழித்துரைக்கிருர்கள். அரசனும் அவர்கள் பேச்சைக் கேட்டு வினை செய்பவன்பால் ஐயங் கொள்கிருன். இங்ஙனம் உண்மையாகச் செயலாற்றும் ஒருவன்மீது அரசன் பிறர் சொல்லைக் கேட்டு ஐயங்கொள்வாஞனல், அவன் அரச செல்வம் அவனை விட்டு நீங்கிவிடும் என்று திருவள்ளுவர் நம்புகிருர்.

வினைசெய்பவன் நெறி பிறழாமல் செயலாற்றுவாஞயின் ஆட்சி செம்மையுறும்; உலகமும் நன்னெறியில் நிற்கும். அவன் நெறி தவறிஞல், அரசு குலைந்து, உலகமும் கேடுறும். ஆகையால் வினை செய்பவர்களை நெறி தவருதவர்களாகச் செய்ய வேண்டியது அரசன் கடமையாகும். இதற்காக அரசன் நாள்தோறும் அவர்கள் செயலை ஆராய்ந்து வரவேண்டும்; தான் ஆராய்வது அவர்களுக்குத் தெரியக்கூடாது. அவர்கள் அதைத் தெரிந்து கொள்வார்களாஞல் அவர்களுக்குத் தம் செயலின்கண் ஊக்கமும் உற்சாகமும் குறைந்துவிடும். எனவே, அவர்களுக்குத் தெரியாமல் அவர்தம் செயலை மறைவிலிருந்து அரசன் ஆராயவேண்டுவது இன்றியமையாத தாகும்.

வெள்ளைக்குடி நாகஞர் என்பவர் பண்டைத் தமிழ்ப் புலவர்களில் ஒருவர். அவர் உழுதுண்டு உயிர் வாழ்ந்து வந்தார். தம் நிலத்தில் விளைவின்மையால், அவரால் தம் நிலத்திற்கு வரி செலுத்த இயல வில்லை. வரி வசூலிக்க வந்த அதிகாரிகளிடம் அவர் தம் குறையைச் சொன்ஞர். ஆஞல் அவர்கள் புலவர் மொழிகளைச் செவியேற்காமல், வரியைச் செலுத்தும்படியாக வற்புறுத்தினர். நிலத்தில் விளைவில்லாதபோது வரி செலுத்தும்படியாக வற்புறுத்துவது நீதியாகாது என்று உணர்ந்தார் புலவர்; வரி வசூலிக்கும் அதிகாரிகள் நெறிதவறி நடப்பதைக் குறித்து மனம் நொந்தார். அரசன் நல்லவன்; நெறிமுறை

பிறழாதவன். ஆனால் அவன் வினையாளர்கள் நெறி தவறினார்கள். இதையுணர்ந்து புலவர் அரசனிடம் நேரில் சென்று தம் குறையைக் கூறி, நெறியை உணர்த்தி, வரியை நீக்கிக் கொண்டார். அரசனுடைய வினையாளர்கள் நெறி பிறழ்ந்ததற்குக் காரணம் அரசன் அவர்கள் செயலை நாள்தோறும் ஆராயாமையே ஆகும். இவ்வுண்மை,

> "நாள்தோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
> கோடாமை கோடா துலகு"

என்ற குறளில் அறிவிக்கப்படுகிறது.

இதுவரை ஆராய்ந்தவற்றைச் சுருங்கக் கூறின், வினை செய்பவன் நன்மையையே செய்யும் இயல்பினனாகவும், பொருள் வரும் வழிகளைப் பெருக்கி வளம்படுத்துபவனாகவும், அன்பு, அறிவு, துணிவு, அவாவின்மை ஆகிய இந்நான்கு பண்புகளும் நிறைந்தவனாகவும் இருக்கவேண்டும்; அவன் செயலாற்றுங்கால் அவன் தன்மை மாறிவிடுதலும் கூடும்; ஆகையால் தலைவன் முதலில் அவன்கண் பெருஞ்செயலை ஒப்புவிக்கக் கூடாது; வினை செய்பவன் செயலுக் குரிய உபாயங்களை அறிந்து, பல இடுக்கண்களையும் பொறுத்துக் கொண்டு, செயலைச் செய்து முடிக்கவேண்டும்; தலைவன் வினைசெய்பவனையும். அவன் செயலையும் ஆராய்ந்து காலத்தோடு பொருந்த உணர்ந்து அவனை அச்செயலின்கண் ஏவவேண்டும்; 'இந்தச் செயலை இதனால் இவன் முடிப்பன்,' என்பதை ஆராய்ந்து அச் செயலை அவனிடமே ஒப்புவிக்க வேண்டும்; அங்ஙனம் ஒப்புவித்த பிறகு, அச்செயலை அவனுக்கே உரிமையாக்க வேண்டும்; உண்மையாக உழைப்பவனைத் தலைவன் தவறாக எண்ணுவானானால், செல்வம் அத் தலைவனை விட்டு நீங்கும். வினை செய்

பவனை நெறி பிறழாமல் இருக்கச் செய்தற்பொருட்டு அவன் செயலைத் தலைவன் நாள்தோறும் மறைவாக ஆராய வேண்டும். இவை தெரிந்துவினையாடல் என்ற அதிகாரத்தில் உணர்த்தப்பெறும் கருத்துக்களாம். திருவள்ளுவர் தம் அனுபவ முதிர்ச்சியால் அறிவுறுத்தும் இந்நெறிகளை உலகம் மேற்கொள்ளுமானால் எங்கும் ஆட்சி முறை சிறந்து உலகம் உயர்வடையும் என்பதில் ஐயமில்லை.

7

# வீரமும் ஈரமும்

மேகம் திரண்டு மழை பொழிந்து, பின் குளிர்காலம் வருகிறது. எங்கும் நீர்த்துளிகளைச் சிதறித் தண்ணென வாடைக் காற்று வீசுகிறது. குளிர் மிகவும் கடுமையாய் இருக்கிறது. அதனுடைய கடுமை இத்தன்மையது என்று சொல்ல முடியாது. அக் கடுங் குளிரால் மக்களும், விலங்குகளும், பறவைகளும் படுந் துன்பம் எவ்வளவு! இடையர்கள் வழக்கம் போல் மாடு மேய்க்கும் இடங்க ளெங்கும் தண்ணீர் தேங்கி நிற்கிறபடியால், அவர்கள் தம் மாடுகளை மேய்ப்பதற்காக மேட்டு நிலங்களைத் தேடிச் செல்கிறார்கள். குளிர் அவர்களை மிகவும் வருத்துகிறது. பாவம்! அவ்விடையர்கள் மிக்க ஏழையர் போலும்! போர்த்திக் கொள்வதற்கு அவர்களிடம் ஆடையில்லை. குளிரைத் தாங்க முடியாமல் அவர்களுடைய பற்கள் ஒன்றோடொன்று மோதிப் பறை கொட்டுகின்றன.

அவர்கள் தம் கைகளை நெருப்பிலே காய்ச்சி, அவற்றைத் தம் கன்னங்களிலே வைத்துக் குளிரைத் தாங்க முடியாமல் படுகின்ற பாடு மிகப் பெரிது.

இனி, மாடுகள் குளிரைப் பொறுக்க முடியாமல் மிகவும் நடுங்கிப் புல்லை மேய்வதையும் மறந்து ஒடுங்குகின்றன. மரங்களிலே தங்கி யிருக்கின்ற பறவைகள் விரைந்து வீசும் காற்றுக்கு ஆற்ருது கீழே விழுகின்றன. கன்று தன் தாய்ப் பசுவை அன்போடு அணுகுகின்றது. கன்றுக்குத் தன் நெஞ்சமெலாம் கசிந்துருகும் பண்புடைய தல்லவா பசு? ஆனல், குளிரால் பெரிதும் வாடுகின்ற பசு தன்னை ஆர்வத்தோடு அணுகும் அருமைக் கன்றினைத் தன் அன்பெலாம் மறந்து சற்றும் இரக்க மின்றிக் காலால் உதைத்துத் தள்ளுகிறது. என்னே அக்குளிரின் கொடுமை!

இனி, மாளிகைகள் உயர்ந்த வீதியில் ஒரு சில மக்கள் திரிகிருர்கள். இவர்கள் சிறிதும் குளிரைப் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. ஏன்? அவர்கள் முழுவலிமை வாய்ந்தவர்கள். உடல் வலிமை இருந்தால் ஒருவாறு குளிரைத் தாங்கிக்கொள்ளலாம் அல்லவா? ஆனல், அவர்கள் குளிரைப் பொறுத்துக்கொள்வதற்கு உடல் வலிமை மட்டும் துணை செய்யவில்லை. அவர்கள் நிறைபடக் கள்ளுண்டு நெஞ்சம் செருக்கிக் கவலை யற்று வீதியில் திரிந்துகொண் டிருக்கின்றனர். கடுங் குளிருக்குக் கைகண்ட மருந்து கள்ளைவிட வேறு எது?

வானம் இருண்டு கிடப்பதால் பகலென்றும் இரவென்றும் தெரியவில்லை; ஆனல், மகளிர் பகல் கழித்து இரவு தொடங்குகின்றதென்பதை உணர்ந்து கொள்கிருர்கள். பித்திகை என்ற பூ மாலைக் காலத்தில் மலரும் தன்மை யுடையது. இப்பூக்களின் அரும்புகளை மகளிர் பூந் தட்டில் இட்டு வைத்திருக்கின்றனர். இவ்

வரும்புகள் மலர்ந்து மணங் கமழும்போது, மாலைக் காலம் வந்துவிட்ட தென்பதைப் பாவைமார்கள் தெரிந்து கொள்கிறார்கள். ஆனால், அம் மனைகளிடத்தே வாழும் புறாவிற்கு இரவென்றும் பகலென்றும் தெரியவில்லை. இதனால் அது தன் இன்பப் பேடையோடு இரை தேடி உண்ணாமல், தான் தங்கும் இடத்திலேயே செயலற்று நின்றுகொண் டிருக்கின்றது. பாவம்! எத்தனை நேரம் நிற்பது? அதனுடைய கால்கள் நோகின்றன. ஆதலால் நோகின்ற கால் ஆறும்படி அது மாறி மாறி நிற்கின்றது.

வானை யளாவிய உயர்நிலை மாடங்களில் வசிக்கும் நாகரிக மகளிர் தம் கூந்தலுக்கு மாலை சூட்டி அணி செய்ய விரும்புகிறார்கள். ஆனால் குளிர்ச்சியான மாலை யிட்டுக் கூந்தலை முடிந்தால் குளிர் இன்னும் அதிக மாகும் என்றஞ்சி, மாலை அகற்றி மங்கல மாகச் சில மலர்களைமட்டும் கூந்தலுக்கு இடுகிறார்கள். குளிரின் காரணமாக அவர்கள் வழக்கம் போல் சந்தனம் பூசிக் கொள்ள வில்லை. வாடைக் காற்று குளிரை மிகுவிக் கின்றது. எனவே, அவர்கள் இட்ட நெருப்பை அணுகிக் குளிர்காய்ந்து தம் குளிரின் வருத்தத்தைத் தணித்துக் கொள்கிறார்கள். பிறகு அம் மெல்லிய மகளிர் ஆடல் காண விரும்புகின்றனர். ஆடலுக்குப் பாடலும், பாடலுக்கு யாழிசையும் வேண்டு மல்லவா? ஆனால், இசை எழுப்பும் யாழின் நரம்புகள் குளிர்ச்சியாலே நிலை திரிந் திருக்கின்றன. அவைகளுக்கு வெப்ப மூட்டினா லன்றி அவை திருத்தம் பெறா. ஆகவே, அம்மங்கையர் யாழ் நரம்புகளைத் தம் மார்பில் தடவி அவற்றிற்குச் சூடேற்றி யாழை வாசிக்கிறார்கள்.

இங்ஙனம் பலரையும் வருத்தும் குளிர் காலம் காதலரைப் பிரிந்த மாதரை மிகுதியும் வருத்துகிறது.

இம் மாதர் குளிரால் வருந்தவில்லை. குளிர் அவர்களை அணுகாது. தம் ஆருயிர்க் காதலரைப் பிரிந்த துன்பத்தால் அவர்கள் வருந்துகின்றனர். பிரிவுத் துன்பம் மிகக் கொடியது.

வாடைக் காற்று எங்கும் வீசி நடுக்குறுத்தும் குளிர் காலத்தில், அரசி பாண்டிமாதேவி தன் பள்ளியறையில் தனித்திருக்கிருள். தூமடி விரித்த பஞ்சணைமீது தன் நாயகன் நெடுஞ்செழியன் பிரிவினுலே நீடு நினைந்து அவள் அமர்ந்திருக்கின்ருள். அவள் காதில் மகரக் குழைகளும் கையில் பொன் வளையல்களும் இல்லை. அவை எல்லாவற்றையும் களைந்தாள். அவள் மார்பிடத்தே மங்கல நாண் ஒன்றே தொங்குகிறது. அவள் கூந்தல் அணி செய்யப்படாமல் நெற்றியின்மேல் விரிந்து கிடக்கின்றது. அவள் எப்போதும் பட்டாடையோ பூந்துகிலோ அணிவதுதான் வழக்கம். ஆனுல், இப்பொழுது அம்மெல்லிய ஆடைகளை நீக்கி வெறும் பருத்தி நூலாடையையே அணிந் திருக்கிருள். அவ் வாடையாவது தூய்மையாக இருக்கக்கூடாதா? மிகுதியும் அழுக்கேறிய ஆடையையே அவ்வரசி அணிந் திருக்கிருள். அவள் அமர்ந்திருக்கும் பஞ்சணையோ தூய்மையானது. ஆனுல், உடுத்திருக்கும் ஆடையோ அழுக்கேறியது. இது துன்பத்தின் கோலம். அவள் ஆருயிர் நாயகன் இல்லாதபோது அவளுக்கு அணிகலன்களும் ஒப்பனையும் அழகும் எதற்கு? இங்ஙனம் துன்பத்தால் அவள் உடை மறந்து, ஊண் மறந்து, பொலிவற்றுப் 'புனையா ஓவியம் போல' இருக்கின்ருள். அந்தத் துன்ப நிலையைக் கண்டு பொறுக்காத சேடிமார்கள் அவளை அணுகி, அவள் துன்பம் தணிந்து துயில்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தால், அவளுடைய மெல்லிய பாதங்களைத் தடவுகிருர்கள். அவளுடைய செவிலித்

தாயர் திரண்டு வந்து அவளுடைய துன்பத்தைப் போக்க முயற்சி செய்கின்றனர். ‘உன்னுடைய இன்னுயிர்க் காதலர் இப்பொழுதே வருவார். துயர் ஒழிவாயாக!’ என்று அவளுடைய மனத்துக் கினிய மொழிகள் பல பேசியும் அவள் துயர் தணிந்தபாடில்லே. மேலும் மேலும் அவள் மனங் கலங்கிக் கண்ணீர் விடுகின்ருள். இந் நிலேயில், அவள் இருந்த படுக்கையின் மேலே அமைந்த படம் ஒன்று அவள் கண்ணில் படுகின்றது. அது சந்திரன் தன் காதலியாகிய உரோகிணியைப் பிரியாது இருக்கின்ற படம். அப்படத்திலுள்ள சந்திரனேயும் உரோகிணியையும் பற்றி நெடிது நினேக்கின்ருள். ‘இந்த உரோகிணியைப் போல நானும் என் கணவரைப் பிரியாமல் இருக்கப் பெறவில்லேயே !’ என்று எண்ணி அப்படத்தைப் பார்த்துப் பெருமூச்செறிகின்ருள் ; தன் மலர் போன்ற கண்ணிடத்தே மிகவும் தேங்கியிருக்கின்ற நீரைத் தன் விரலால் தெறிக்கின்ருள். கணவன் பிரிவால் எத்துணேத் துன்பம் !

இங்ஙனம் தன் இன்னுயிர்த் துணேவி அரண்மனேயின்கண் துன்பத்துள் ஆழ்ந்திருக்க, பாண்டியன் தன் பகையரசர் எழுவரைப் பொருதல் குறித்துப் பாசறையில் தங்கி யிருக்கின்ருன். முதலில் நிகழ்ந்த போரில் அரசன் வெற்றி பெறவில்லே. அப்போரில் அவன் படைவீரர்கள் மிக்க ஆண்மையுடன் போரிட்டுத் தம் மார்பிலும் முகத்திலும் புண்பட் டிருக்கிருர்கள். நடு இரவு. அரசன் துயில் கொள்ள வில்லே. அவன் எண்ணமெலாம் விழுப் புண் பட்ட வீரர்களேயே நாடுகின்றது ; அவர்களேக் காண்பதற்கு அந்நடு இரவில் புறப்படுகின்ருன். குளிர்ந்த வாடைக் காற்று வீசுகின்றது. எங்கும் பனித் துளிகள் துளிக்கின்றன. காற்று அடிக்குந்தோறும் எரிகின்ற விளக்கின் சுடர் அசைந்து, தெற்கு நோக்கித் தலேயைச்

சாய்த்து எரிகின்றது. இது ' நின் இன்னுயிர்க் காதலி தென்திசையில் தனித்தவளாய்த் துன்பத்துள் ஆழ்ந்து பெருந் துயருறுகின்ருள் ' என்று அரசனுக்கு உணர்த்துவதுபோ லிருக்கிறது. ஆனல், அரசன் மனம் அரசியை நாடவில்லை. ஏன்? அவனுக்கு அவள்பால் காதல் இல்லையா? அரசன் தன் துணைவிபால் கனிந்த காதல் உடையவனே. அக்கனிந்த காதலின் விளைவு தான் அமரிடைப் பொருது புண்பட்ட வீரர்களை அந்நடு இரவில் அவன் காணச் செல்வது. தன் தலைவியிடத்துக் கொண்டிருந்த தலையாய காதல் நாளடைவில் முற்றிப் பழுத்துக் கனிந்து, இப்பொழுது அவளையும் கடந்து, எளியோர்பால் அன்பாகவும் அருளாகவும் மாறிச் செல்கின்றது.

பாசறை வீதி வழியே அந்நடு இரவில் அரசன் நடந்து செல்கிருன். அவன்முன் சேனைத்தலைவன் கையிலே வேப்பமாலை யணிந்த வேலினைத் தாங்கிச் செல்கின்ருன். பின்னல் அரசன்மீது மழைத்துளி விழாதபடி மற்ருெரு வீரன் குடை பிடித்துச் செல்கின்ருன். அரசன் செல்லும் வீதி முழுதும் சேருக இருக்கிறது. வாடைக் காற்றுச் சில்லென்று வீச, அச்சேற்றிலே வேந்தன் அந்நடு இரவில் இங்ஙனம் நடந்து செல்கின்ருன்! அவனைப் பின்தொடர்ந்து சேணம் களையாத குதிரைகளும், யானைகளும் தாமாகவே செல்கின்றன. இங்ஙனம் செல்லும் அவ்விலங்குகள் அரசன்மீது சேற்று நீரைச் சிதறுகின்றன. ஆனல் அதை அரசன் பொருட்படுத்தாமலே செல்கின்ருன். அவனுடன் செல்லும் வீரர்களும் அவற்றைத் துரத்தவில்லை. ஏன் கரியும் பரியும் அரசனை இப்படிப் பின்தொடர்கின்றன? அவைகள் அரசனிடத்தில் அளவற்ற அன்புடையவை. அவன் எங்கெங்குச் செல்கின்ருனே

அங்கெல்லாம் தாமும் அவனை விட்டுப் பிரிய மன மில்லாமல் தொடர்ந்து செல்கின்றன! ஆகவே அன்போடு பின்தொடரும் அவ்விலங்குகள் தன்பால் சேற்று நீரைச் சிதறினாலும் அதனை அன்பின் செயலா கக்கொண்டு அரசன் அமைதியாகச் செல்கின்றான்.

சேனைத் தலைவன் முறையே புண்பட்ட வீரர்களைக் காட்டுகின்றான். அவர்களைக் கண்ணுறும் அரசனுடைய தோளின் மீது உடுத்திருந்த ஆடையானது நழுவு கிறது. நழுவுகின்ற ஆடையைத் தன் இடப்பக்கத்தே சேர்த்துப் பிடித்துக்கொண்டு வலக்கையைத் தன் அருகே இருக்கும் ஒரு வீரனின் வாள் கோத்த தோளின்மீது இருத்தித் தன்னுடைய முகத்தில் அன்பும், இரக்கமும் நிரம்ப அமைதியோடு புண்பட்ட வீரரைக் கண்ணுறுகின்றான் அப்பேரரசன்.

திறலரசர் எழுவரை எதிர்த்துப் போர் செய்யும் மனத்திண்மை படைத்த மன்னவன் எளியோர்க்கு மிக இரங்கி அவர்கள் தோளைத் தழுவித் தோழமை கொண் டாடுகின்றான்! என்னே அவனுடைய மனப் பண்பு! போர்க்களத்தில் பகைவர்களை மேன்மேலும் கொன்று குவிக்கும் அரசனுடைய மனம் கல்லாக அல்லவோ இருக்கவேண்டும்? அம்மனத்தில் இரக்கத்திற்கு இட மேது? *உண்மை வீரன் எத்துணைப் பகைவர்களைப் பிணமாக்கினாலும், அவனுடைய நெஞ்சம் கன்னெஞ்ச மாவ தில்லை. அதற்கு மாறாக அவன் மனத்தில் ஈரமே மிகும். இஃது உண்மை வீரனுடைய பண்பு. ஒரு வீரன் உலகம் நல்வழிப்படுதற்கான உண்மை

---

* By objects, which might force the soul to abate
Her feeling, rendered more compassionate.

WORDSWORTH.

நெறிக்காகவோ அல்லது நாட்டு நன்மைக்காகவோ தன்னைத் தியாகம் செய்கிருன். அதற்காகப் போர் இன்றியமையாத தாயின் அதனை மேற்கொள்கிருன். பிற நாட்டை அடக்கியாளவோ அல்லது தன் படை வலிமையைப் பிறர்க்குப் புலப்படுத்தவோ போர் தொடுப்பது உண்மை வீர மாகாது; தீரமும் ஆகாது. அது மிகப் பெரிய கோரமே யாம். எனவே, வீரத்திற்கு அடிப்படையாக அமைவது அன்பே யாம். அன்பு முற்ற முற்ற, வீரமும் வளர்கிறது. அன்புள்ளம் எப்பொழுதும் நல்லுள்ள மாகவே விளங்கு மன்றிக் கல்லுள்ளம் ஆகாது. அவ்வுள்ளத்திற்கு அணிகலமாக இரக்கம் நிறைந்து தோன்றும். இத்தகைய இயல்பு வாய்ந்தவன் பாண்டியன் நெடுஞ்செழியன். வீரத்திஞல் காதலைக் கடந்து பாசறையில் தங்கிய அவ்வரசன், அங்கு வீரத் தையும் கடந்து ஈரத்தில் திளைக்கின்ருன். அவன் தன் படைவீரர்கள்பால் பேரிரக்கம் கொண்டு நடு யாமத்திலும் துயிலாமல் திரிதலைக் கண்டோம். தன்னுடைய படை வீரர்கள்பால் பரிவுகூரும் பாண்டியன் தன் பகைவ ரிடத்து அவ்விரக்கம் கொள்வாஞ? பகைவனுக் கிரங்கும் பண்பு மிகச் சீரிய தொன்று. இப் பெருமிதப் பண்பினைக் கம்பர் தம் காவியத்தில் போற்றுகின்ருர். முதல் நாள் போரிலே இராவணன் இராமஞேடு பொருது, தன் படை முழுதும் அழிந்து தமியஞக நின்ருன். தன் ஆருயிர்க் காதலி சானகியை வஞ்சித்துக் கவர்ந்து வந்து சிறை வைத்த கொடிய அரக்கன், தன்னெதிரே ஒரு துணையு மின்றித் தமியஞக நிற்பதைக் கண்ட இராமன் ஓர் அம்பிஞலே அவன் உயிரைப் போக்கி யிருக்கலாம். ஆஞல், அவன் அங்ஙனம் செய்யவில்லை. பகைவனே ஆயினும் படையின்றி நிற்கின்ருன் என்று அவன்பால் பரிவு கொண்டான் அப் பெருந்தகை.

'ஆளை யாவுனக் கமைந்தன மாருத மறைந்த
பூளை யாயின கண்டனை யின்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கின னிகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்'

'அரக்கரை ஆள்கின்ற ஐயனே, உனக்குத் துணையாக அமைந்த சேனைக ளெல்லாம் காற்றினுல் மோதப்பட்ட பூளைப்பூக்கள் போலச் சிதறுண்டன. ஆகையால் இன்று போய் நாளைக்கு உன் படையோடு போர்க்கு வா,' என்று கூறி இராவணனைக் கருணையோடு விடுத்தான் வள்ளலாகிய இராமன் என்ருல், அவன் பகைவர்க்கு இரங்கும் பெற்றி பெரிதும் உடையவன் என்று தெளிவாகிற தன்ருே ?

நம்முடைய நெறிக்கோ, முறைக்கோ, நாட்டுக்கோ கேடு விளைவிப்பவனைப் பகைவன் என்று கருதுகிருேம். அவனைப் படையால் வெற்றிகொள்வோமாஞல், அவன் தன்னுடைய தோல்வியையே இடையருது நினைந்து மேன்மேலும் பகைமை மூண்டு நம்மை அழித் தொழிக்கும் வாய்ப்பினை எதிர் பார்த்துக்கொண்டிருப் பான். இதனுல் உலகில் பகைமை அதிகரித்து அமைதி குலைகிறது. இங்ஙனம் படையால் பகைவரை அடக்கு வது, நன்கு ஆராய்ந்து பார்த்தால், அநாகரிகமாகவே தோன்றுகிறது. ஆனுல், நம் பகைவரை அன்பினுலும் இரக்கத்தினுலும் வெல்வோமாஞல், அவர்தம் பகைமை நீங்கி அவர்களும் அன்புடையவர்களாக மாறிவிடுகிருர் கள். இந்நிலை எங்கும் பரவுமாயின் உலகில் வெறுப்பும், காழ்ப்பும், பகையும் வேரொடுங் களைந்து, அன்பு நிலைத்து உலகெலாம் ஒரு நாடாக விளங்கும். இதுவே, நாகரிகத்தின் உச்ச நிலை.

இந்த உயர்ந்த நிலையைத் தற்கால உலகம் விரைந்து எய்த முடியும். இதற்கேற்ற புறச் சாதனங்கள்

உலகில் பல்கி வருகின்றன. வானொலி (Radio), தொலைக் காட்சி (Television) முதலிய சாதனங்களால் ஒரு நாடு மற்றொரு நாட்டோடு நெருங்கித் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இன்னும் இந்த உலக முழுமையும் ஒரு சில மணி நேரத்தில் சுற்றி வருதற்கேற்ற 'இராக்கெட்டு' விமானம் 'ஜெட்டு' விமானம் போன்றவைகளை உலகிற்குத் தருதற்கு விஞ்ஞானிகள் அரிய முயற்சி செய்து வருகிறார்கள். இது மட்டோ! சந்திர மண்டலத்தை அடைதற்கும், இதை யடுத்துச் செவ்வாய் மண்டலத்தை (Mars) எய்துதற்கும் விஞ்ஞானியர் அரிய ஆராய்ச்சிகள் நிகழ்த்தி வருகிறார்கள். இன்னும் பத்தாண்டுகளுக்குள் இம்முயற்சி வெற்றி பெறும் என்று அவ் வறிவியல் அறிஞர்கள் நம்புகிறார்கள். இங்ஙனம் மிகப் பரந்துபட்ட இம்மாநிலம் விஞ்ஞானத்திற்கு மிகக் குறுகித் தோன்றுகிறது. இதனால் மக்கள் உலகில் எம்மருங்கும் நேரிற் சென்று நெருங்கிய உறவு கொள்ளலாகும். தற்கால உலக நிலையைக் கவனிக்கும்போது எந்த நாடும் மற்ற நாடுகளின் தொடர்பின்றித் தனித்து வளர முடியாது என்பது தெளிவாகும். எனவே, உலகம் ஒன்றுபடுதற் கேற்ற மிகச் சிறந்த புறச் சாதனங்கள் அமைந்திருக்கும் இந்நாளில், உண்மையில் உலகம் ஒன்றுபட வேண்டின் அதற்குரிய அகச் சாதனம் வளர வேண்டும். அன்பையும் இரக்கத்தையும் அகச் சாதனம் எனலாம். ஒவ்வொரு நாடும் இந்த அகச் சாதனத்தை வளர்த்தால், பல நாடுகள் ஒன்றி ஒரு நாடாகி, ஒரே அன்புலகமாக விளங்கும் என்று கூறவும் வேண்டுமோ? இவ் வகச் சாதனம் இன்றி, வெறும் புறச் சாதனம் மட்டும் வளர்ந்து கொண்டே செல்லுமாயின், எவ்வளவு விரைவில் அவை வளர்கின்றனவோ, அவ்வளவு விரைவில் உலகம் அழிந்து நீறாய்ப் போவது திண்ணம்.

இந்நிலை ஒழிந்து எங்கும் அன்பு நிலவி ஒன்று படும் நாகரிக முதிர்ச்சியை இவ்வுலகம் எய்த வேண்டும் என்று சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கவிஞர்பிரான் நக்கீரர் நினைத்தார் போலும்! 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது நம் பண்டைப் பெருமக்களின் பெருநோக்கம் அல்லவா? பாண்டியன் நெடுஞ் செழியனுடைய பாசறையைப் பற்றிப் பாடிய அவர்,

" விறல்தந்து
இன்னே முடிகதில் லம்ம
... ... ... ...
சிலரொடு திரிதரு வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே "

என்று முடிக்கின்றார்.

'பலரொடு முரணிய பாசறைத் தொழில்' என்பதற்குச் 'சேரன் செம்பியன் முதலிய எழுவரோடே மாறுபட்டுப் பொருகின்ற பாசறை யிடத்துப் போர்த் தொழில்' என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறுகின்றார். எனினும் 'பாசறைத் தொழில்' என்பதற்குப் 'பாண்டியன் புண்பட்ட தன் படைவீரரைப் பாசறைக் கண் கண்டிரங்கும் அன்புத் தொழில்' என்றும் பொருள் கொள்ளலாம். அவன் அன்பாலும் இரக்கத்தாலும் ஒரு சிலராகிய தன் படைவீரர் உள்ளத்தை வெற்றி கொண்டு திரிகின்றான். மிகப் பலராகிய பகைவரிடமும் அவன் அன்பும் இரக்கமும் செல்லவேண்டும். ஆனால் அவர்களுடன் அவன் அன்புத் தொழில் முரண்பட்டு நிற்கின்றது. அவர்களையும் அவன் அன்பினால் வெற்றி கொண்டு அவன் பாசறைத் தொழில் இனிய முடிவைப் பெறுவதாக என்ற பொருளையும் மேற்கண்ட அடிகள் உணர்த்துவனவாகக் கொள்ளலாம்.

இத்தகைய பண்பு, முற்றிய நாகரிகத்திற்கு அடிப் படையாம். இப்பண்பு எங்கும் பரவி உலகம் உய்ய வேண்டும் என்று நம் பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே கருதினர். இதற்காகப் புத்தர் பெருமானும், ஏசு பெருமானும், இந்திய வரலாற்றிலேயே பேரரசனாக விளங்கிய அசோகனும் அரும்பாடு பட்டனர். அண்மையில் நம்மிடையே வாழ்ந்த காந்தியடிகள் இப்பண்பின் வளர்ச்சிக்காகப் பட்ட பாட்டினைக் கூறவும் வேண்டுமோ ? இப்பெரியார்கள் எல்லாரும் வீரத்திற்கு அடிப்படையான ஈரத்தின் உருவ மாகவே திகழ்ந்த தியாகிகள் அல்லரோ ? இவர்கள் வகுத்த அன்பு நெறியினை உலகம் பின்பற்றினால், அது தற்கால இடர்ப்பாட்டினின்றும் நீங்கி உய்வு பெறுவ தாகும்.

# 8

# விலைமகளா, கலைமகளா ?

மக்களினம் ஒன்றே யாயினும் அவருள்ளும் காணப் பெறும் வகுப்புக்கள் எண்ணி லடங்குமோ? தொடக்கத்தில் தொழிலால் தோன்றிய ஒரு சில சாதிகள் நாளடைவில் பிறப்பை யொட்டிக் கிளைத்துப் பல்கிவிட்டன. இதனால் மக்களுள் உயர்வு தாழ்வு தோன்றி ஒற்றுமை குலைந்து வேற்றுமை வேரூன்றி விட்டது. இவ்வகுப்பு வேற்றுமையால் நம் நாடு அடைந்து வரும் இன்னல்கள் பன்னரும் தன்மைத் தன்றோ? பிறப்பால் உயர்வு தாழ்வு கருதுவதைப் பழங்காலந் தொட்டுப் பல அறிஞர்கள் கடிந்திருக்கின்றனர்.

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்''

என்று திருவள்ளுவரும்,

" சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்–மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி "

என்று அவ்வைப் பெருமாட்டியாரும் தம் நாட்டினர்க்கு இடித்துரைக்கும் பெற்றியை ஓர்க. மக்களிடையே வேற்றுமையைக் களைந்து ஒற்றுமையை நிலைநாட்டத் தம் வாழ்நாள் முழுதும் காந்தியடிகள் முயன்றனரல்லரோ? அன்று தொட்டு இன்றுவரை பல அறிஞர்கள் முயன்றும் வகுப்பு வேற்றுமை அழிந்த பாடில்லை. அவ்வேற்றுமையால் நாட்டிற்குத் தீமையே விளைகின்றதென்று நம்மனோர் நன்குணர்ந்தும் இது நம் நாட்டிடை நிலைத்திருப்பது வியப்பே யாகும்.

இங்ஙனம் நிலைத்து நிற்கும் வகுப்புக்களில் கணிகையர் குலமும் ஒன்று. ஆதியில் நெறி தவறிய மகளிரின் சந்ததி வாழையடி வாழையாக வந்து ஒரு குலமாக நிலைத்து விட்டது. இக்குலத்தில் தோன்றியோர் எல்லோரும் இழுக்குடைய செயலுடையவர்கள் என்று கருதப்படுகிறார்கள். இக்குலத்து மகளிர் அனைவரையும் கற்பென்னுந் திண்மை யற்றவர்கள் என்று இவ்வுலகம் பழிக்கிறது. இங்ஙனம் இக்குலத்தினரை நினைப்பது பேதைமை என்பதை இளங்கோவடிகள் தெளிவாகத் தம் நூலில் எடுத்துக் காட்டுகின்றார்.

சித்திராபதி என்னுங் கணிகைக்கு மகளாய்த் தோன்றியவள் மாதவி. இவள் எழில் நலம் வாய்ந்த மெல்லியளாய்த் திகழ்ந்து, தனது பன்னிரண்டாவது ஆண்டில் அரசவை யேறி ஆடல் புரிந்து பெறலரும் பரிசில் பெற்றாள்; கலையில் தலைசிறந்து ஆடலிலும் பாடலிலும் இணையற்று விளங்கினாள். கலையினை நன்கு

தேர்ந்த இவள் கலை யுருவாகவே திகழ்ந்தாள் என்று கூறுவது மிகையாகாது.

இங்ஙனம் அழகும் அறிவும் படைத்த மாதவிபால் கோவலன் என்பான் காதல் கொண்டான். கோவலன் ஒழுக்கத்தில் தலைசிறந்தவன். ஒப்பற்ற அழகும் மாசற்ற குணமும் வாய்ந்த கண்ணகி என்னும் நல்லாளை வாழ்க்கைத் துணைவியாக அடையும் பேறு பெற்றவன்.

'மண்டேய்ந்த புகழினன் மதிமுக மடவார்தம்
பண்டேய்த்த மொழியினு ராயத்துப் பாராட்டிக்
கண்டேத்துஞ் செவ்வேளென் றிசைபோக்கிக் காதலாற்
கொண்டேத்துங் கிழமையான் கோவலனென் பான்மன்னோ'

என்று இளங்கோவடிகள் அவனுடைய நலங்களைப் பாராட்டுகின்றார்.

ஒழுக்கத்தில் தலைசிறந்த கோவலன் தன் மாசற்ற மனையாளை நீத்துப் பரத்தையாகிய மாதவியை யடைந்து வாழ்வது நீதியாமோ? கோவலன் கலைபால் ஆராக் காதலுடையவன். அவனுடைய கலையார்வம் அவன் மனையாளையும் கடந்து நின்றது. கலையுருவாகத் திகழ்ந்த மாதவியைக் கோவலன் கண்ணுற்றதும், அவன் மனம் விரைந்து சென்று அவளைப் பற்றியது. எனவே, மாதவிபால் கோவலனை ஈர்த்தது கலையே யாம்.

மக்கள் உள்ளத்தைப் பண்படுத்த வல்லது கலையன்றி வேறென்னை? கலையழிவால் மக்களறிவு பக்குவமெய்தி உயிரானது சிறப்புறுகிறது.

கோவலன் மாதவியோடு பல காலம் ஒன்றிவாழ்ந்து பின்பு அவள்பால் தவறான எண்ணங் கொண்டு வெறுப்புற்றுப் பிரிந்தான். மாதவியோ கோவலன்பால் அசைவற்ற அன்பு கொண்டவள். அவனையே தெய்வமாகத்

தொழுதெழும் கற்புக்கடம் பூண்டவள். கோவலன் பிரிவை ஆற்ருத இந்நங்கை அவனுக்கு அழகியதொரு திருமுகம் எழுதித் தன் தோழியாகிய வசந்தமாலையிடம் கொடுத்து, 'இவ்வோலையில் எழுதிய பொருளை எல்லாம் கோவலற்கு ஏற்பச் சொல்லி அவனை உடனே கண்டு அழைத்து வருவாயாக!' என்று சொல்லி விடுத்தாள்.

வசந்தமாலையும் சென்று அவ்வோலையைக் கோவலற்குக் கொடுத்தாள். 'நாடக மகளாகிய மாதவி பல வாருக ,நடிப்பது இயல்பேயாம்' எனறு கோவலன் கூறி மறுத்தான். இதனைக் கேட்ட தோழி மாசற்ற மாதவியின் நிலை யுன்னி மனங்குழைந்து அவள்பால் சென்று கோவலன் மாற்றத்தை யுரைத்தாள். மாதவி கோவலன் கடுமொழிக்கு மனந் தளராமல் அவன் சினம் ஆறியபின் எப்படியும் வருவான் என்று தேர்ந்து, 'மாலை வாரா ராயினும் மாணிழை—காலை காண்குவம்?' என்று தன் உயிர்த் தோழிக்குக் கூறினள். அன்றிரவு முழுதும் அவள் செயலற்ற நெஞ்சமோடு தன் பூமலர் அமளி மிசை பொருந்தாது இருந்தாள். தான் எதிர்பார்த்த வண்ணம் தன் காதலன் வராமையைக் கண்டு காரிகை நெஞ்சம் பதைத்துக் கோவலற்கு மற்ெருரு திருமுகம் எழுதினுள். இத்திருமுகத்தைக் கோசிகன் என்ற வேதி யன்பால் கொடுத்து, 'இதனை என் கண்மணி யனையாற் குக் காட்டுக' என்று கூறினுள். கோசிகனும் கோவ லனைப் பல இடங்களிலும் தேடி இறுதியில் அவன் மதுரைக் கேகும் வழியில் கண்டான்; கண்டு மாதவியின் ஓலையைக் கோவலனிடம் கொடுத்தான். இவ்வோலையின் வாசகம் கோவலன் நெஞ்சத்தை நெகிழ்த்தது. மாதவி தீதற்றவள் என்பதை அவன் அப்பொழுதுதான் நன் குணர்ந்தான்.

'அவள் எழுதிய இசைமொழி யுணர்ந்து
தன்தீ திலன்எனத தளர்ச்சி நீங்கி
யென்தீ தென்றே யெய்திய துணர்ந்து '

என்பது சிலப்பதிகாரம்.

பின்பு கோவலன் கொலையுண்ட செய்தியைக் கேட்டாள் மாதவி. காதலன் இறந்த பிறகு இவ்வுலக வாழ்வு எற்றுக்கு என்று எண்ணினாள். உலக வாழ்வின் மேல் அவளுக்கு வெறுப்புத் தோன்றியது; உடனே துறவு பூண்டாள்.

'காதலன் றன்வீவுங் காதலிநீ பட்டதூஉம்
ஏதிலார் தாங்கூறு மேச்சுரையுங் கேட்டேங்கிப்
போதியின்கீழ் மாதவர்முன் புண்ணியதா னம்புரிந்த
மாதவி தன்துறவுங் கேட்டாயோ தோழி'

என்று கண்ணகியை நோக்கி அவள் தோழி அரற்றிய மொழிகளினின்றும் மாதவி துறவறம் மேற்கொண்ட வகையை அறியலாம்.

இழிகுலம் என்று கருதப்பெறும் கணிகையர் குலத்தில் தோன்றிய மாதவி மாதவத்தை மேற்கொண்டது வியப்பே யன்றோ! மாதவி இழிகுலத்தைச் சேர்ந்தவள் என்ற காரணத்தினால் தாழ்ந்தவள் என்று கொள்ள இயலுமோ? இதனால், பிறப்பால் கொள்ளும் குலத்தால் உயர்வு தாழ்வு இல்லை என்றும் ஒருவனின் செயலை யொட்டியே அவை உண்டாகின்றன என்றும் போதரும்.

மாதவியின் உள்ளம் பலகாலம் கலையில் தோய்ந்து பண்பட்டிருந்தது. உள்ளத்தைப் பண்படுத்தி அறிவைப் பக்குவப் படுத்தும் ஆற்றல் கலைக்கு உண்டன்றோ? ஆகவே, கலையால் கனிந்த அறிவு படைத்திருந்த இக் காரிகையின் உள்ளம் காதலன் இறந்தமை கேட்டதும் தவத்தைப் பற்றியது. மாதவி துறவறம் மேற்கொள்ளுதற்கு அவள் காதலன் வீவு முக்கிய காரணமாய் அமைந்ததே யாயினும், அதற்கு அடிப்படையானது கலையே யாம்.

# 9

## நந்திவர்மன்

தமிழ் நாட்டில் பல்லவர் பேரரசு கி. பி. மூன்றும் நூற்றாண்டு இடையிலிருந்து எட்டாம் நூற்றாண்டு இறுதிவரை நிலவியது. கி. பி. மூன்றும் நூற்றாண்டிற்கு முன்பு பல்லவர்கள் ஆந்திரர் பேரரசில் மாகாணத் தலைவர்களாக இருந்தார்கள் என்றும், பிறகு நாளடைவில் சோழர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றிக் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரியலாயினர் என்றும் வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். பல்லவர் பாரசீக நாட்டினின்றும் வந்தவொரு கூட்டத்தார் என்றும் ஒரு சாரார் உரைப்பர். பல்லவர் ஆட்சி கி பி. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து எட்டாம் நூற்றாண்டு வரை மிகவும் ஓங்கி இருந்தது எனலாம். ஆற்றலுடைய பல்லவ அரசர்

பலர் ஆட்சி புரிந்த காலம் இதுவே யாகும். அப் பேர ரசர்களுள் ஒருவன் மூன்ரும் நந்திவர்மன் என்பவன். இவன் தந்திவர்மன் மகன் என்றும், கி. பி. 825-ஆம் ஆண்டிலிருந்து 850-ஆம் ஆண்டுவரை ஆட்சி புரிந்த வன் என்றும் அறிஞர்கள் முடிவுகட்டி யுள்ளனர். இவன் பெருமையை நந்திக் கலம்பகம் என்னும் நூல் மிகவும் சிறப்பித்துப் பாடுகின்றது.

கலம்பகம் என்பது தமிழ் நூல் வகைகளுள் ஒன்று. பலவகையான பாவும் பாவினமும் கொண்டதாய், அகப் பொருள் கருத்தும் புறப்பொருள் கருத்தும் இயைந்து, அந்தாதித்தொடை பொருந்தி, நூறு பாட்டுள் முடிந்து நிகழ்வது கலம்பக மாகும். நந்திக் கலம்பகம் என்ற நூல் நந்திவர்மனைப் பாட்டுடைத் தலைவனுகக் கொண்டு, அவனுடைய ஆண்மை, அழகு, அருள், புகழ், ஆட்சி ஆகியவற்றை நயம்பட உரைக்கின்றது. இந்நூலில் சொற்சுவையும், பொருட்சுவையும் சிறந்து விளங்குகின்றன.

இச் சீரிய நூலை இயற்றிய ஆசிரியர் யார் என அறிய இயல வில்லை. ஆனல், அவரைப் பற்றி ஒரு கதை வழங்குகிறது- அதாவது, நந்திவர்மனின் மாற் ருந்தாய்க்கு ஆண்மக்கள் நால்வர் இருந்தனர். நந்தி வர்மன் அரசை ஏற்றதும் அந் நால்வரையும் தன் நாட்டைவிட்டுத் துரத்தி விட்டனன். பிறகு அந் நால்வரும் ஒன்றுகூடிப் பிறர் துணைகொண்டு நந்தி வர்மனை எதிர்த்துப் போரிட்டனர். ஆனல், அவர்கள் நந்திவர்மனுல் முறியடிக்கப் பட்டனர். அவர்களுள் ஒரு வர் நந்தியைக் கொல்ல வேண்டும் என்ற கருத்தோடு இடை இடையே இருபொருள்பட வசை வைத்து நந்திக் கலம்பகத்தைப் பாடினர். வசை அமைத்துப் பாடுவதை அறம் வைத்துப் பாடுவது என்றும் கூறுவர்.

இந்நூலைப் பாடிய பிறகு அவர் துறவு பூண்டு வீடுகள் தோறும் பிச்சை எடுத்துக் காலங் கழித்து வந்தார்; ஒரு சமயம் நந்திவர்மனின் தலைநகரமாகிய காஞ்சிக்குச் சென்று, பிச்சை ஏற்கும் பொருட்டு, அவ்வூரிலுள்ள கணிகை வீட்டை அடைந்தார். வீட்டு முற்றத்திலே நின்று அவர் நந்திக் கலம்பகப் பாடல்களிலே இரண்டு மூன்று பாடினார். இன்சுவை நிரம்பிய அப் பாடல்களைக் கேட்ட கணிகை ஓடிவந்து மீண்டும் அப் பாடல்களைப் பாடும்படி வேண்டினாள். ஆசிரியர் பாடினார். கணிகை அப் பாடல்களை எழுதிக்கொண்டாள். பின்பு அவள் நாள் தோறும் இரவு நேரத்தில் தன் மாளிகையின் மேன் மாடத்தில் அமர்ந்து யாழ் மீட்டி அப் பாடல்களைப் பாடி வந்தாள். ஒரு நாள் ஊர்க் காவலர்கள் சுற்றி வரும் போது அப் பாடல்களைக் கேட்டனர். அவள் பாடிய பாட்டொன்றில் மன்னன் மாண்டுவிட்டதாகப் பொருள் அமைந்து இருந்தது. அதைக் கேட்டு ஊர்க்காவலர்கள் திடுக்கிட்டனர். அவர்கள் அரசனிடம் சென்று அதைத் தெரிவித்தனர். அரசன் கணிகையைக் கொணருமாறு கட்டளை யிட்டான். அவள் பாடிய பாடல்களை இயற்றியவர் ஒரு முனிவர் என்பதை அவள் மூலமாக அரசன் அறிந்தான். அம் முனிவரை அழைத்து வருமாறு கணிகைக்குக் கட்டளை யிட்டான். கணிகையால் முனிவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை. முடிவில் ஒருநாள் முனிவர் தாமாகவே அரசனிடம் வந்தார். தான் அவன்மீது ஒரு கலம்பகம் பாடியிருப்பதாக அவர் அரசனுக்கு அறிவித்தார். அரசன் அக் கலம்பகப் பாடல்களைப் பாடும்படி கட்டளை யிட்டான். "அப்பாடல்களைக் கேட்டால் நீ மாண்டு போவாய்," என்று முனிவர் மன்னனுக்கு எச்சரிக்கை செய்தார். அரசன் அதற்கு அஞ்சவில்லை. உயிர் கொடுத்தேனும் தன் புகழமைந்த செந்தமிழ்ப்

பாடல்களைச் செவிமாந்த அவாவினுன் அரசன். எனவே, பாடல்களைப் பாடுமாறு முனிவரை வற்புறுத்தினுன். முனிவர் கலம்பகப் பாடல்களைப் பாடினுர். மன்னன் பாடல்கள் முழுமையும் கேட்டு முடிவில் அப்பாடல்களின் சக்தியால் தீப்பற்றி மாண்டான். இக் கதைக்குச் சரித்திரச் சான்று இருப்பதாகத் தெரியவில்லை. ஆனுல், நந்திக் கலம்பகத்தில் ஓரிரு அகச் சான்றுகள் இக்கதைக்குப் பொருத்தமாக அமைவதுபோல் தோன்றுகின்றன.

"தம்பியர் எண்ணமெலாம் பழுதாக வென்ற
தலைமான வீரதுவசன்"

என்ற அடியில் தம்பிமார்கள் நந்திவர்மனேடு போரிட்டுத் தோற்ற செய்தியைக் காணலாம். இக் கலம்பக ஆசிரியர் அறம் வைத்துப் பாடியதற்குச் சான்ருக இரு பொருள் கொண்ட பாடல்கள் பல இந்நூலுள் காணப்படுகின்றன. உதாரணமாக, இந்நூலில் ஏழாம் பாடலில்,

"முதல்வனுக்குப் பழுது கண்டாய்......."

என்ற தொடர் உள்ளது. இதற்குத் "தலைவன் தகுதிக்குக் குற்றமாகும்" என்ற நேர் பொருளும், "தலைவனுக்குக் கேடு கண்டாய்" என்ற வசை பொருளும் கொள்ளலாம். 72-ஆம் பாடலில்,

"அவனிதனில் எங்கும் அவனுடைய"

என்பதற்கு, 'இம் மண்ணுலகில் எல்லா இடங்களிலும் அவனுடைய அரசாட்சி நிலைக்க' என்ற பொருளும், 'இம் மண்ணுலகில் எந்த இடத்திலும் அவன் தோற்றுப் போக' என்ற வசையும் அமைந்துள்ளன. எனினும் இவைகளைக் கொண்டு மேற் குறித்த கதை உண்மையெனக் கொள்வதற்கில்லை. நந்திக் கலம்பகத்தை

ஊன்றிப் படிப்பவர்கள், நந்தியை ஆசிரியர் மனமாரப் போற்றிப் புகழ்வதை உணரலாம். ஒவ்வொரு பாடலும் நந்தியைச் சுவைபடச் சிறப்பிக்கின்றது. ஆசிரியர் மெய்ம் மறந்து நந்தியின் புகழிலே ஈடுபடுகின்ருர். சுவை மலிந்த இப் பாடல்களைப் பாடிய ஆசிரியர் நந்தி வர்மன்பால் நீங்காத அன்பும் மதிப்பும் கொண்டவர் என்று கொள்வதே பொருத்த முடையதாகும். நந்தி வர்மனைப் பற்றிய செய்திகள் பலவற்றை இக் கலம்பக நூலிலிருந்து அறியலாம்.

நந்திவர்மன் சந்திர குலத்தைச் சேர்ந்தவன். "சந் திரகுலப் பிரகாசன்" என்று அவன் பாராட்டப் படுகிருன். அவன் காஞ்சிபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தான். மாமல்லபுரமும், மயிலையும் அவனுக் குரிய ஊர்களாக இந்நூலில் பல இடங்களில் சிறப்பிக்கப் பட்டுள்ளன. இவ்விரண்டு ஊர்களும் கடலைச் சார்ந்த ஊர்களாகையால் அங்கு அமைந்திருந்த துறைமுகங்கள் வாயிலாக நந்திவர்மன் காலத்தே கடல் வாணிபம் நிகழ்ந்த தெனக் கொள்ளலாம்.

"மல்லை வேந்தன் மயிலை காவலன்
பல்லவர் தோன்றல் பைந்தார் நந்தி"

என்று நந்திக் கலம்பகம் பாடுகின்றது.

தமிழ் நாட்டு முப்பெரு வேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் நந்திவர்மன் ஆணைக் கடங்கி ஆட்சி புரிந்தனர் என்ற செய்தி இந்நூலில் பல இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது. மேலும் அவன் கொங்கு நாட்டை உடையவன் என்றும், அங்க நாட்டை ஆண்டவன் என்றும், வட பாலுள்ள வேங்கட மலையைச் சார்ந்த நாடுகளைத் தனக்கு உரிமையாக ஆட்சி கொண் டவன் என்றும் பாடப்பட்டுள்ளான்.

"குடக்குடை வேந்தன், தென்னுடை மன்னன். குணக்கினெடு
வடக்குடை யான்நந்தி மாஞே தயனிந்த வையம் எல்லாம்
படக்குடை ஏந்திய பல்லவன்"

"நாமவேல் மன்னர்க் கெல்லாம் தங்கள்கோன் **அங்க நாடன்**"

"கோனுமைக் கொரு குறையுண்டோ உரை
**கொங்கா** நின்னது செங்கோலே!"

இவ்வடிகளி லிருந்து, நந்திவர்மன் பல பெரு மன்னர்களேயும் வென்று பேரரசு செலுத்தினன் என்பது தெளிவாகிறது.

அவன் நிகழ்த்திய போர்கள் மிகப் பல. குருக்கோட்டை, வெள்ளாறு, இருங்கடும்பூர், வெறியலூர், தெள்ளாறு முதலிய இடங்களில் அவன் ஆற்றிய போர்களே மிகச் சிறப்பாகக் கலம்பகம் பாடுகிறது. குருக்கோட்டையில் அவன் இரட்ட அரசனே எதிர்த்து வென்ருன் என்று வரலாற்று ஆசிரியர் கூறுவர். வெறியலூர், வெள்ளாறு, பழையாறு, இருங்கடும்பூர், தெள்ளாறு முதலிய இடங்களில் சேர, சோழ, பாண்டியரை முறியடித்தான் என்று தெரிகிறது. இவற்றுள் அவன் தெள்ளாற்றில் நிகழ்த்திய போரே கலம்பகத்தில் பல பாடல்களில் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

"தன் மீறு தெள்ளாற்று நள்ளார்
முனேயும் அன்று ஏக முனிந்த பிரான்"

"... ... இகல்வேல் மன்னர்
சினக்கரியும் பாய் மாவும் தெள்ளாற்றில்
சிந்துவித்த செங்கோல் நந்தி"

இங்ஙனம் பல பாடல்கள் தெள்ளாற்றுப் போரை விளக்குகின்றன. இதனின்றும் வீரப் பெருமையை மிகுதியாக நிலேநாட்டிய போர் தெள்ளாற்றுப் போரே என்பது புலனுகிறது. நந்திவர்மன் வடநாட்டுப் போரில்

ஈடுபட்டிருந்தபோது பாண்டிய மன்னனுகிய சீமாரன், சேரரையும் சோழரையும் துணையாகக் கொண்டு பெருஞ் சேனையோடு வட பெண்ணையாற்றைத் தாண்டிப் பல்லவர் நாட்டிற்குள் நுழைந்தான். அதற்குள் வடவரை வென்ற நந்திவர்மன் இதை அறிந்து, தன் பெருஞ் சேனையோடு மீண்டு, பகைவரைத் தாக்கிப் பெரும் போர் புரிந்து அவர்களை முறியடித்தான். இது வரலாற்று ஆசிரியர்கள் கூறும் செய்தி. இப் போர் ஏறக்குறைய கி. பி. 832-இல் நிகழ்ந்த தென்பர். நந்திக் கலம்பகத்தில் காணும் தெள்ளாற்றுப் போரைப் பற்றிய குறிப்புக்கள் வரலாற்று ஆசிரியர்கள் கூற்றுக்குப் பொருத்தமாகவே அமைந்துள்ளன. இப் போரில் நந்திவர்மனின் ஒப்பற்ற வீரம் விளங்கியதால் அவன் "தெள்ளாறு எறிந்த நந்தி" என்று கலம்பகத்தில் சிறப்பிக்கப் படுகிருன்.

நந்திவர்மன் பல நாடுகளை வென்றதால் அவன் மண்ணுசை பிடித்தவனே என்று நாம் ஐயுறலாம். அவன் மண்ணுசை பிடித்தவன் அல்லன் என்று நந்திக் கலம்பகம் தெளிவுறுத்துகின்றது. எங்கெங்கே செங் கோன்மை நீங்கிக் கொடுங் கோன்மை நிலவியதோ, அங்கங்கே அவன் படை யெடுத்துச் சென்று அந்நாட்டரசர்களை வென்று நீதியை நிலை நிறுத்தினுன். வேற்று நாட்டுக் குடிமக்களாயினும் அவர்களும் குறைவற வாழ வேண்டும் என்ற உயரிய நோக்கங் கொண்டவனுக நந்திவர்மன் கலம்பகத்தில் விளங்குகிருன்.

> "தங்கோல் வளைத்த திகழ்சேரர் சோழர்
> தமிழ் மன்னர் நின்ற நிலமேல்
> வெங்கோல் நிமிர்த்து அவரையும் சிவந்த
> விறல் நந்தி........"

சேர, சோழ, பாண்டியர்க ளாகிய தமிழ் மன்னர் மூவரின் ஆட்சிக் குட்பட்ட நாடுகளில் முறை திறம்பிய மன்னர் களின் ஆட்சியை நேர்மை யாக்கி அம் மன்னர்களேயும் சீறிய நந்திவர்மன் என்பது இவ்வடிகளின் கருத்தாம். இன்னும் நந்திவர்மனின் நீண்ட கண்கள் சினத்தால் சிவக்குமாளுல், பகை மன்னர்கள் நகரங்கள் எரிந்து கரி யாகிவிடும் என்றும், அவனுடைய புருவங்கள் சீற்றத் தால் துடித்தால், தமக்கு நேரும் ஆபத்தின் அறிகுறி யாகப் பகை மன்னர்களின் இடப் பக்கத்துத் தோளும் கண்ணும் துடிக்கும் என்றும், அவனுடைய வெற்றி முரசைப் போலச் சங்கு முழங்குமாளுல் பகைவர்களின் மனம் கலக்கமுறும் என்றும், அவனுடைய மதயானே அழகுபடுத்தப் பெறுமாளுல் அவனே எதிர்க்கும் மன்னர் உடல் சிதைந்து குருதி பெருகி ஓடும் என்றும் அவ னுடைய வீரம் பாராட்டப் பெறுகின்றது.

"திருவரு நெடுங்கண் சிவக்கும் ஆகின்
செருநர் சேரும் பதிசிவக் கும்மே
நிறங்கிளர் புருவம் துடிக்கின் நின்கழல்
இறைஞ்சா மன்னர்க் கிடந்துடிக் கும்மே
..................................
கடுவாய் போல்வனே அதிர நின்னேடு
மருவா மன்னர் மனம்துடிக் கும்மே
மாமத யானே பண்ணின்
உதிரம் மன்னுநின் எதிர்மலேந் தோர்க்கே"

இவ்வடிகளில் நந்திவர்மனின் ஈடிலா வீரம், ஆசிரியரின் உள்ளத்தை எவ்வளவு கவர்ந்துள்ளது என்பதை உணரலாம்.

நந்திவர்மன் தன் பகை மன்னர்களே வென்று திறையாகப் பெற்ற செல்வங்களேத் தனக்குப் பயன் படுத்திக் கொள்ளவில்லே. இல்லே என்று இரந்தவர்க்

கெல்லாம் அச் செல்வங்களை அவன் வரையாது வழங்கினான். இதனைச்,

" சேர சோழரும் தென்னரும் வடபுலத்
தரசரும் திறை தந்த
வீர மாமத கரியிவை பரியிவை
இரவலர் கவர் வாரே "

என்று ஆசிரியர் பாடுகிறார்.

அவனுடைய கொடைத் திறத்தினைக் கவிஞர் நயம் படப் பல பாடல்களில் பாராட்டுகிறார். அவன் வறியர்களுக்கு வேண்டிய அளவு பொருளை வழங்கினான். மண்ணுல கெல்லாம் வாழ, அவன் மழை போல் பொருள் வழங்கி, உயிர்கள் இன்ப முற வாழச் செய்தான்.

" செய்ய கமலத் திருவுக்கு முன்பிறந்த
தையல் உறவு தவிர்ந்தோமே—வையம்
மணக்கும் பெரும்புகழான் மானபரன் நந்தி
இணக்கம் பிறந்தநாள் இன்று "

இப்பாடலில் நந்திவர்மனின் கொடைச் சிறப்பு மிகச் சுவைபட உணர்த்தப் பெறுகின்றது. நந்தி மன்னனிடம் பெரும் பொருள் பெற்ற இரவலர் இருவர் தமக்குள் பேசிக்கொள்வது போல இப்பாட்டு அமைந்துள்ளது. அவ் விரவலர் இருவரும் பல காலம் இரந்துண்டு உயிர் வாழ்ந்து வந்தனர். ஒருகால் அவர்கள் நந்திவர்மனை அடைந்து தம் குறை கூறி இரந்து நின்றனர். அவன் அவர்கள் இன்னலைக் கேட்டு மனமுருகி அவர்களுக்கு வேண்டிய பொன்னும் பொருளும் மணியும் நிலமும் வழங்கினான். அவற்றைப் பெற்ற அவ்விரவலர், " உலகமெலாம் நிறைந்த புகழ் படைத்தவனும் மதிப்பில் சிறந்தவனுமான நந்தியின்

நட்பைப் பெற்ற இந்நாளில், நாம் செந்தாமரையில் வாழும் திருமகளுக்கு மூத்தவளாகிய மூதேவியின் நட்பை நீங்குகிறோம்," என்று கூறி மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தனர். செல்வத்தைத் திருமகளாகவும், வறுமையை மூதேவியாகவும் கூறுவது கவிமரபு.

உலகத்தில் ஒருவன் பல வழிகளில் புகழ் ஈட்டலாம். அவற்றுள் ஈதலால் வரும் புகழே சாலவும் சிறந்த புகழாகும்.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு"

என்று திருவள்ளுவர் அறிவுறுத்துவதைக் காண்க. ஈதலால் புகழ் படைத்த பெருமக்களையே நம் புலவர்கள் தம் பாடல்களில் சிறப்பித்துப் பாடினர். பண்டை வேந்தர்களும் வள்ளல்களும் தாம் பெரும் புலவரால் பாடப் பெற வேண்டும் என்று பெரிதும் விரும்பினர்.

"புலவர்பாடும் புகழுடையோர்
வலவன் ஏவா வான ஊர்தி எய்துவர்"

என்று புறநானூறு கூறுகின்றது. நந்திவர்மன் தன் இணையற்ற ஈகையாலும் வீரத்தாலும் புலவர் பாடும் புகழுடையோனாய் விளங்கினான்.

நந்திவர்மன் பேரழகு வாய்ந்தவன். அவன் மன்மதனை யொத்த அழகுடையவன். "மாரவேள்" என்று ஆசிரியர் அவனைப் பாராட்டுகின்றார். அவனைக் கண்ணுறும் இளங்காரிகையர் பலர் அவன்பால் கருத்திழந்து வாடிய திறம் பல பாடல்களிலே விளக்கப் பட்டுள்ளது. நந்திவர்மன் மீது காதல் கொண்ட நங்கை யொருத்தி தன் தோழியை நோக்கி,

"எனதே கலை, வளையும் என்னதே மன்னர்
சினவேறு செந்தனிக்கோல் நந்தி—இனவேழம்
கோமறுகில் சீறிக் குருக்கோட்டை வென்றுடும்
பூமறுகில் போகாப் பொழுது"

என்று கூறுகிருள்.

"பகைவர்களைச் சினந்து தாக்கிக் குருக்கோட்டையில் வெற்றி பெற்ற நந்தி அழகிய வீதிகளில் உலாவ வராதபோது நான் உடுத்திருக்கும் ஆடை என்னுடையதாகவே நிலைபெற்றிருக்கும். நான் அணிந்துள்ள வளையல்களும் என் கைகளிலேயே நிலைத்து நிற்கும். ஆனல் அவன் யானைக் கூட்டங்கள் சூழ உலாவ வந்தால் நான் உடுத்திருக்கும் ஆடையும், அணிந்திருக்கும் வளையல்களும் நழுவிக் கீழே சோர்ந்து விழுந்துவிடும். நான் என் செய்வேன்" என்று தலைவி தான் நந்திபால் கொண்டிருக்கும் தணியாக் காதலைத் தெரிவிக்கிருள். இதனல் நந்திவர்மனின் பேரழகு பல பாவைமார்கள் நெஞ்சத்தைக் கொள்ளை கொண்டது என்பது புலனுகிற தன்றோ ?

மன்னராய் மாநிலத்தை ஆட்சி புரிகின்றவர்கள் கல்வி நலம் சிறந்தவராய் விளங்குதல் வேண்டும். உலகியலையும் அரசியல் நுட்பங்களையும் நன்குணர்ந்து நல்லாட்சி புரிய அரசர்க்குக் கல்வி இன்றி யமையாததாகும். பல்துறைக் கல்வி மன்னர்க்குப் பெரிதும் இன்றியமையாதது என்பதை உணர்த்தவே திருவள்ளுவர் தம் திருக்குறளில் அரசியல் பகுதியில் கல்வி என்ற அதிகாரத்தை வைத்துள்ளார். நாற்றிசை நாடுகளையும் தன் ஆணைக்கீழ் அடிப்படுத்தி ஆண்ட நந்திவர்மன், கல்வி நலம் மிகவுடையன் என்று கலம்பக ஆசிரியர் உணர்த்துகின்ருர்.

"தொல்லை நூல்வரம்பு முழுது கண்டான் நந்தி"
"நூற் கடற் புலவன்"
"பைந்தமிழை ஆய்கின்ற கோன் நந்தி"

என்றெல்லாம் நந்தியின் கல்விச் சிறப்பை ஆசிரியர் போற்றிப் புகழ்கின்றார்.

நந்திவர்மன் "விடேல் விடுகு" என்று நூலில் பல இடங்களில் சிறப்பிக்கப் பெறுகின்றான். இஃது அவனுடைய பட்டப் பெயர்களில் ஒன்றாகும். அவனுடைய இலச்சினை எருதின் உருவத்தைக்கொண்டதாகும். அவன் வெற்றியோடு உயர்த்திய கொடியும் எருதின் சின்னம் பொறித்ததாகும். ஆதொண்டை அவனுடைய வெற்றி மாலை. பல்லுயிரையும் பரிவோடு அளிக்கும் கடவுள் திருமால் என்பர். நந்திவர்மனும் திருமாலுக் கொப்பத் தன் நாடுகளை அருளோடு பாது காத்தான். இதனால் அவன் "அவனி நாரணன்" என்று நூலின்கண் போற்றப்படுகின்றான். இவன் சிவனையும் திருமாலையும் வழிபட்டவன் என்பது,

"பிறைதவழ் செஞ்சடைப் பிறங்கல் நாரணன்
அறைகழல் முடித்தவன் அவனி நாரணன்"

என்ற அடிகளால் விளங்குகிறது.

இங்ஙனம் ஒப்பற்ற முறையில் செங்கோலோச்சி வாழ்ந்த நந்திவர்மன் முடிவில் இறந்ததைக் குறித்து நெஞ்சுருகிப் பாடுகிறார் ஆசிரியர்; அவனுடைய அழகு, புகழ், வீரம், கொடை, செல்வச் சிறப்பு ஆகிய இவைகளை ஒன்றன்பின் ஒன்றாக நினைந்து நினைந்து வருந்துகிறார்.

"வானுறு மதியை அடைந்த(து) உன் வதனம்,
மறி கடல் புகுந்த(து) உன் கீர்த்தி
கானுறு புலியை அடைந்த(து) உன்வீரம்
கற்பகம் அடைந்த(து) உன்கரங்கள்

தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள்
செந்தழல் அடைந்த(து) உன் தேகம்
நானும் என் கலியும் எவ்விடம் புகுவேம்
நந்தியே நந்தயாபரனே "

சிறந்த ஒருவன் முகத்துக்கு நிலவையும், வீரத் தன்மைக்குப் புலியையும், வள்ளன்மைக்குக் கற்பகத் தருவையும், அவன் தன் செல்வச் சிறப்புக்குத் திருமகளேயும் ஒப்பாகக் கூறுவது கவி மரபு. நந்தி வர்மன் இறந்ததும் அவனுடைய முகப்பொலிவு நிலவில் போய்ச் சேர்ந்தது என்றும், வீரம் புலியிடத்துப் பொருந்தியது என்றும், அவன் கொடை கற்பகத் தருவைப் போய் அடைந்தது என்றும், திருமகள் திருமாலிடம் குடிபுகுந்து விட்டாள் என்றும், அவனுடைய உடல் செந்தீயைச் சேர்ந்துவிட்ட தென்றும் கூறி, முடிவில், " நந்தியே! நானும் என் வறுமையும் இனி யாரை அடைக்கலம் புகுவோம், " என்று கதறி அழுகின்ருர் ஆசிரியர். இதனின்றும் இக்கலம்பக ஆசிரியர் நந்திவர்மன்பால் கொண்டிருந்த அன்பின் திறத்தையும், பெரு மதிப்பையும் உணரலாகும்.

அவர் ஆக்கிய " நந்திக்கலம்பகம் " என்ற ஒப்பற்ற நூல் என்றும் இந் நானிலத்தில் நிலேத்து நின்று நந்திவர்மன் புகழை வளர்ப்பதாகும்.

# 10

## கம்பருடன் ஒரு நாள்

மாலை நேரம். பொழுதுபோக்கிற்காகச் சிறிது நேரம் உலாவிவர வெளியே சென்றேன். வழியில் இருந்த ஒரு பூங்கா என் கருத்தைக் கவர்ந்தது. என்னை அறியாமலே நான் அதனுள் நுழைந்தேன். அங்கு ஒரு மரத்தடியில் தனித்து ஒருவர் அமர்ந் திருந்தது என் கண்ணில் பட்டது. அவ்விடம் அடர்ந்த பசும்புல்லால் போர்க்கப்பட்டுக் கண்ணுக்குக் குளிர்ச்சியைத் தந்து விளங்கியதால், அங்குச் சிறிது நேரம் இருக்க எண்ணி அவ்விடத்தை நோக்கிச் சென்றேன். அங்கே நெருங் கியதும் அங்கு அமர்ந் திருந்தவர் தோற்றம் என்னை அவர்பால் இழுத்தது. மலர்ந்த மார்பு! திரண்டு உயர்ந்த தோள்கள்! நீண்ட கைகள்! புலமை ஒளி வீசும் பரந்த முகம்! பெருமிதத் தோற்றம்! மெல்ல அவர்

அருகே சென்று அமர்ந்தேன். சற்று நேரம் கழித்து, அவர் என்னை நோக்கி, 'அப்பா, நீ இந்த ஊரைச் சேர்ந்தவன்தானு?' என்று கேட்டார். 'ஆமாம். தங்களுடைய ஊர் எது?' என்றேன்.

'நான் இருப்பது மேலூர். இந்த ஊரைப் பார்த்துப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. மீண்டும் இதைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையால் இங்கு வந்தேன். ஆனுல், இப் பூங்காவின் அழகு என்னை இறுகப் பிணித்து இந்த மரத்தடியிலே இருத்தி விட்டது.' என்று அவர் சொல்லி முடிப்பதற்குள் அப் பூஞ்சோலை இருண்டு விட்டது. அவ்விருள் பகலவன் மறைந்ததால் வந்த தன்று. கதிரவன் இன்னும் மறையவில்லை. சற்றுமுன் வானத்திலே வெண்மையாகத் தவழ்ந்த மேகங்கள் இப்போது கறுத்துத் தோன்றின. பெருங் காற்று வீசத் தொடங்கியது. இதைக் கண்டதும் எனக்குக் கம்பரின் ஒரு பாடல் நினைவுக்கு வந்தது. அதை மனத்திலே எண்ணிக் கொண்டே 'கம்பரைப்போல் இயற்கையை வருணிக்க வேறு யாரால் முடியும்? ஆகா, எவ்வளவு ஆழ்ந்த கருத்துக்களடங்கிய வருணனை!' என்றேன். 'என்ன, திடீரென்று கம்பனை இங்கு இழுத்து வந்துவிட்டாய் அப்பா?' என்று அவர் முகத்தில் புன்னகை பொலியக் கேட்டார். 'கம்பர் புலமையைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். சிறிது நேரத்திற்கு முன் விண்ணில் விளங்கிய வெண்மேகத்தை அவர் சிவபெருமானுகக் காண்கிருர்; இப்போது காட்சி அளிக்கும் கருமேகத்தைத் திருமாலாகக் கண்டு களிக்கிருர். வெண்மேகமானது, உடம்பெலாம் நீறுபூசி வெண்ணிறமாகத் தோற்றமளிக்கும் சிவபெருமான்போ லிருக்கிறதாம். கருமேகம் கறுத்த மேனி வாய்ந்த திருமால்போல் விளங்குகிறதாம். இன்னும் சிவபெருமானுடைய தொழில் அழித்தல்

அல்லவா ? அவரைப் போலவே வெண்மேகமானது உலகுக்கு மழை பொழியாது பஞ்சத்தைப் பெருக்கி அழிக்கிறது. திருமாலுக்குக் காத்தல் தொழில். கருமேகமும் உலகுக்கு மழை பெய்து திருமால்போல அளி செய்கின்றது என்ற கருத்துக்களைப் பொதிய வைத்து,

'நீறணிந்த கடவுள் நிறத்த வான்
ஆறணிந்து சென்றுஆர்கலி மேய்ந்து
.......................திரு மங்கைதன்
வீறணிந்தவன் மேனியின் மீண்டவே'

என்று கம்பர் பாடிய இப் பாடலின் நயத்தை நினைக்குந்தோறும் இன்பம் ஊற்றெடுக்கின்றது,' என்றேன். இதைக் கேட்ட அவர், 'நீ கம்ப ராமாயணத்தை நுணுகி ஆராய்ந்து படித்திருக்கிறாய் போலும்,' என்றார்.

'இல்லை, இல்லை ; இங்கும் அங்கும் ஒரு சில பாடல்கள்தான் எனக்குத் தெரியும்......மழை வரும்போல் தோன்றுகிறதே. என் வீடு அருகில்தான் இருக்கிறது. வாருங்கள். அங்குச் சென்று பேசலாம்,' என்று அன்புடன் அவரை அழைத்தேன்.

"மழை வராது அப்பா. இதோ பார், காற்று கருமேகத்தை எல்லாம் அடித்துக்கொண்டு செல்வதை! வானமும் வெளுக்கத் தொடங்கிவிட்டது. இங்கேயே இருந்து இன்னும் சிறிது நேரம் பேசலாம்," என்றார் அப் பெருந்தகை.

நானும் அதற்கு இசைந்தேன். 'கம்பருடைய பாடல்கள் தனிச்சுவையும் அழகும் பொருந்தியவை. அவற்றிற்கு ஈடும் எடுப்பும் இல்லை என்றே கூறலாம். எனினும் கம்பரிடத்தில் சில குறைபாடுகளும் இருக்கின்றன,' என்று மீண்டும் பேச்சைத் தொடங்கினேன். 'குறைபாடுகளா ? அவை என்ன ?' என்று அவர்

விரைந்து கேட்டார். அவருடைய மலர்ந்த முகம் இப்போது சற்றுச் சுருங்கித் தோன்றியது.

'கம்பர் இயற்றிய காவியத்திற்கு முதல் நூல் வால்மீகி இராமாயணம். வால்மீகி வடமொழியில் எழுதியதை அப்படியே கம்பர் சிறிதும் மாருமல் தமிழில் எழுதி இருக்கலாம். ஆனால் கம்பர் அங்ஙனம் செய்யவில்லை. தாம் விரும்பியவண்ணம் ஆங்காங்கே கதையைச் சுருக்கியும், பெருக்கியும், மாற்றியும் அமைத்திருக்கிருர். அவர் இங்ஙனம் செய்தற்கு நியாயமும் உண்டென்பர் அறிஞர். வால்மீகி இராமாயணம் வட நாட்டுப் பண்பை விளக்குகின்றது. கம்பர் அதை மாற்றித் தமிழ்ப் பண்புக்கேற்பத் தம் காவியத்தை இயற்றினர் என்பது அறிஞர் கூறும் நியாயம். இஃது உண்மையே. வடநாட்டு இராமனைத் தமிழ் இராமனாகவும், சீதையைத் தமிழ்ச் சீதையாகவும், கங்கையைக் காவிரியாகவும், கோசல நாட்டைச் சோழ நாடாகவும், இவ்வாறே பலரையும் பலவற்றையும் தமிழாகவே கம்பர் காண்கிருர். ஆனால், சில இடங்களில் தமிழ்ப் பண்புக்கு முற்றிலும் முரணான வகையில் கதையைக் கூறுகிருர். இதை நினைக்கும்போதுதான் என் நெஞ்சம் வருந்துகிறது,' என்றேன்.

'எங்கே கம்பன் தவறுகிருன்? ஒன்றிரண்டு குறிப்பிடுவாயாக!' என்று கேட்டார் அப்பெருந்தகை.

'ஏன், தங்களுக்குத் தெரியாதா? கள்ளக் கணவனைக் காதலித்து ஒழுகிய காரிகை அகலிகையைக் கற்புடையவள் என்று கம்பர் புகழ்வது நியாயமா?' என்றேன்.

'ஏன் அப்பா நியாய மாகாது?' என்று சிரித்துக்கொண்டே கேட்டார் அவர்.

'என்ன நீங்களும் இப்படிப் பேசுகிறீர்கள்? அகலிகை அழகே உருவெடுத்த பாவை. அவளுடைய கணவரோ எப்போதும் தவத்திலே ஆழ்ந்து கிடப்பவர். இந்திரன்

அகலிகையின் அழகைப் பருக வேண்டும் என்ற பேராசை பிடித்தவனாய்க் கௌதமர் இல்லாத சமயம் பார்த்து அவர் வேடத்தோடு அகலிகையிடம் சென்றான். அகலிகை முதலில் அவனைத் தன் கணவன் என்றே கருதினாள். சிறிது நேரத்தில் அவன் தன் கணவன் அல்லன் என்பதை அவள் உணர்ந்தாள்; எனினும் அவனை விட்டுப் பிரிய அவளால் இயலவில்லை. அச் சமயத்தில் கௌதமர் வந்துவிட்டார்; சீற்றங் கொண்டெழுந்தார்; தம் அருமைப் பத்தினியைக் கருங்கல்லாகச் சபித்தார். இதனைப்

'புக்கவ ளோடும் காமப் புதுமண மதுவின்தேறல்
ஒக்கவுண் டிருத்த லோடும் உணர்ந்தனள் உணர்ந்த பின்னும்
தக்கதன் றென்ன ஓராள் தாழ்ந்தனள் இருப்பத்தாழா
முக்கணான் அனைய ஆற்றல் முனிவனும் முடுகிவந்தான்.

........................................

'மெல்லிய லாளை நோக்கி விலைமகள் அனைய நீயும்
கல்லிய லாதி யென்றான் கருங்கலாய் மருங்கு வீழ்வாள்.'

என்ற கம்பர் மொழிகளே உணர்த்துகின்றன.

'இவ்வாறு தன்னைக் கூடியவன் இந்திரன் என்பதை அறிந்தும் அவனோடு இன்பத்தை நுகர்ந்த அகலிகையைக் கம்பர் 'நெஞ்சினால் பிழைப்பிலாள்' என்றும், 'மாசறு கற்பின் மிக்க அணங்கு' என்றும் போற்றுகிறாரே. இது சிறிதேனும் பொருந்துமா?' என்றேன்.

அதற்கு அவர், 'இப்படி அகலிகையைக் கம்பன் எப்போது போற்றுகிறான்?' என்று மெள்ளக் கேட்டார்.

'கல்லுருவாய்க் கிடந்த அவள், இராமன் பாதத் துகளினால் மீண்டும் பெண்ணுருவாகிய பின்பு' என்றேன்.

'கல்லாகிப் பெண்ணாகிய அகலிகை தூய ஒரு புதுப் பிறவியை எடுத்ததற்கு ஒப்பாகும். அவள் செய்த குற்ற முழுதும் அக்கல்லோடேயே மறைந்துவிட்டது. அதனால் தான் கம்பன் அவளை, 'மாசறு கற்பின்மிக்க அணங்கு,' என்று பாராட்டுகிறான் என எனக்குத் தோன்றுகிறது அப்பா!' என்றார் அப்பெரியார்.

இதைக் கேட்டதும் எனக்கு உணர்ச்சி பொங்கியது. 'எப்படி அவள் குற்றமற்றவள் ஆகமுடியும்? கல்லாகிப் பெண் ஆனாலும் அல்லது கடலாகிக் காரிகையானாலும்— இவ்வாறு ஒரு பிறவி அன்று, இரு பிறவி அல்ல, ஏழு பிறவியும் அல்ல, ஏழாயிரம் பிறவிகள் எடுத்தாலும் உலகம் அவள் குற்றத்தை எப்படி மறக்க முடியும்? அகலிகை என்ற பெயர் இந்த உலகில் வழங்கும்வரை அப் பெயரோடு அவள் செய்த குற்றம் இரண்டறக் கலந்தே நிற்கும்' என்று சிறிது உள்ளத் துடிப்புடன் பேசினேன்.

'அப்பா, ஆத்திரப்படாதே! ஏன் இப்படிப் பதைக்கிறாய்? அமைதியாகப் பேசலாமே. அகலிகை யிடத்தில் ஏன் உனக்கு இவ்வளவு சீற்றம்?' என்று அவர் பெருந் தகைமை பொலியக் கூறினார்.

'தாங்கள் என்னைத் தவறாக நினைத்து விட்டீர்கள்' பெண்களிடத்தில் எனக்கு எப்போதும் பேரிரக்கம் உண்டு. மேலும் அகலிகை போன்ற பெண்களிடத்தில் நான் கொள்ளும் இரக்கம் எவ்வளவு என்று கூறமுடி யாது. பாவம் அவளும் மனிதப் பிறவிதானே! தவறுவது மனித இயற்கை. அவள்பால் சீற்றமோ வெறுப்போ எனக்கு ஒரு சிறிதும் இல்லை. கம்பர் அவளை வெறும் புகழ்ச்சி செய்து, நாமெல்லாம் அவளைப் பற்றி இப்படி வாதாட நேருகின்றதே என்றுதான் வருந்துகிறேன்.'

'அப்பா, கம்பன் அகலிகையை எந்தச் சமயத்தில் மாசற்றவள் என்று புகழ்ந்திருக்கிருன் என்பதை நன்கு சிந்திக்க வேண்டும். அவள் செய்த தவறுக்காக அவள் கணவர் கௌதமர் ஆருச்சினம் கொண்டிருக்கிருர். அகலிகை கல்லுருவம் மாறி பெண்ணுருவாக ஆகியதும் இராமன், இலட்சுமணன், விசுவாமித்திரர் ஆகிய மூவரும் அவளைக் கௌதமரிடம் அழைத்துச் செல்கின்றனர். கௌதமர் அவளை எப்படியாவது ஏற்று முன்போலவே ஆதரிக்க வேண்டும் என்பதுதான் அம்மூவருடைய விருப்பமும். இல்லையேல் அவள் கதி என்னுவது? மேலும் அகலிகையின் குற்றத்தைப் பெருந்தகைமை வாய்ந்த அம்மூவரும் பெரிதாகப் பொருட்படுத்த வில்லை. எப்படி அவளைக் கௌதமர் ஏற்கும்படியாகச் செய்வது? அவள் குற்றமுடையவள் என்ற எண்ணம் கௌதமர் நெஞ்சை எப்போதும் உறுத்திக்கொண் டிருக்குமே! இராமன் பாதத் தூசினுல் கல்லினின்றும் பெண்ணுக மாறிய தம் பத்தினியின் உடல் குற்றமற்ற தாகிவிட்டது என்று கௌதமர் நினைத்து ஒருவாறு தேறுதல் அடைய லாம். ஆனுல், அவள் நெஞ்சு மாசுடையதாயிற்றே! இதற்காக, 'நெஞ்சினுல் பிழைப்பிலாளை நீ யழைத்திடுக,' என்று கௌதமரிடம் விசுவாமித்திரர் கூறும்படியாகச் செய்து விட்டான் கம்பன். தம்மை யொத்த முனிவராகிய விசுவாமித்திரரே அகலிகை நெஞ்சினுல் குற்றமற்றவள் என்று கூறும்போது கௌதமர் மனம் எவ்வளவு ஆறுதல் பெறும்! மேலும், இராமன் அகலிகையைக் கௌதமர் கையில் கொடுப்பதை, 'மாசறு கற்பின் மிக்க அணங்கினை அவன்கை யீந்தான்,' என்று கம்பன் கூறுகிருன். இத னுல் கௌதமர் உள்ளம் அகலிகை மாசற்றவள் என்று கொள்ள வேண்டும் என்பதே கம்பன் கருத்தாகத் தெரிய வில்லையா?' என்று மிகவும் விளக்கமாக அவ்வறிஞர் உரைத்தார்.

'ஓகோ, கௌதமரை ஏமாற்ற இச் சூழ்ச்சியா?' என்று சிரித்தேன். பிறகு, இராமன் வாலியை மறைந்து நின்று அம்பெய்திக் கொன்ருனே, இது என்ன நியாயம்!' என்றேன்.

'என்ன திடீரென்று வாலிமீது பாய்ந்தாய் அப்பா?' என்று கேட்டார் அவர்.

'நான் பாய்வது வாலிமீது அன்று; கம்பர்மீதுதான். வாலியை நினைக்கும்போது கம்பர்மீது பாயாமல் எப்படி இருக்க முடியும்?' என்றேன்.

' ஏன், இராமன் வாலியைக் கொன்றது நியாயமாகத் தானே தோன்றுகிறது? அளவிலா அன்புகொண்டு ஒழுகிய தன் தம்பி சுக்கிரீவனுக்கு வாலி செய்த கொடுமை கொஞ்சமா? பாவம், சுக்கிரீவன் எவ்வளவு உயர்ந்த உள்ளம் படைத்தவன்? மாயாவி என்ற அசுரனைத் துரத்திக்கொண்டு பிலத்திற்குள்ளே சென்ற தன் தமையன் வாலி நெடுநாளாகியும் திரும்பாமையால் அவன் அசுரன் கையில் மாண்டுவிட்டான் என்று எண்ணி வருந்தி, " என் தமையனைக் கொன்ற அந்த மாயாவியை எதிர்த்துக் கொன்று நானும் மாள்வேன்," என்று கூறிப் பிலத்திற்குள் செல்லப் புறப்பட்டான். ஆனல் அவனேடு இருந்த பெரியோர்கள் அவனை விட்டார்களா? " சுக்கிரீவா, உன் தமையனே மாண்டு விட்டான். நீயும் மாயாவியை எதிர்த்து இறந்து விடுவாயானல் நம் அரசு என்னுவது? நீ எப்படியும் அரசாட்சியை ஏற்றுத்தான் ஆகவேண்டும்," என்று அவனை வற்புறுத்தி அரச பட்டத்தை அவன்மீது அவர்களே சுமத்தினர்கள். பிறகு மாயாவியைக் கொன்று மீண்ட வாலியைச் சுக்கிரீவன் கண்டதும் என்ன செய்தான்? " ஐயோ, வாலி வந்துவிட்டானே! என் அரசு போய் விடுமே," என்றெண்ணி வாலியைப் பகைத்தான? அவனை வெறுத்தான? தன் அன்பு மிக்க தமையனைக் கண்டதும் சுக்கிரீவன் அள

விலா மகிழ்ச்சி அடைந்து அரசை அவனிடம் கொடுக்கச் சென்ருன். மாண்டான் என்று கருதப்பட்ட தன் தமையன் மீண்டதைக் கண்டதும் உண்மையில் சுக்கிரீவனுக்கு எவ்வளவு மகிழ்ச்சி பொங்கியிருக்கும்? ஆனல் வாலி அவனது கள்ளமற்ற உள்ளத்தை உணராது தனக்கெதிராகச் சூழ்ச்சி செய்தே சுக்கிரீவன் அரசைக் கைப்பற்றிக்கொண்டான் என்று கருதி அவனைக் கொல்லத் துணிந்தான். அது மட்டுமா? அவன் மனைவி ருமையையும் கவர்ந்து கொண்டான். இராமன் எதையும் பொறுத்துக் கொள்வான். ஆனல், ஒருவன் மனைவியை மற்ருெருவன் அபகரித்துக் கொள்வதை அவன் சிறிதும் பொறுக்கமாட்டான். தன் மனைவியை மற்ருெருவனிடம் ஏமாந்து இழந்துவிட்டு வரும் இராமன், சுக்கிரீவன் மனைவியை வாலி கவர்ந்து கொண்டான் என்பதைக் கேட்டதும் வாலியைக் கொன்றுவிட வேண்டும் என்று முடிவு செய்து விட்டான்,' என்று சுக்கிரீவன் சார்பாக எவ்வளவு நியாயங் காட்ட முடியுமோ அவ்வளவும் அவர் விளக்கிக் கூறினர்.

'இதற்காக வாலியைக் கொல்வதா? நீங்கள் கூறுவது மிக நன்ருயிருக்கிறது! இராமன், வாலி சுக்கிரீவரது குடும்பச் சண்டையிலே தலையிட்டதே பெருந் தவறு. அப்படித் தலையிட்ட இராமன் அவர்கள் இருவரையும் ஒன்று படுத்தவாவது முயன்ருனு? அதுவுமில்லை. வாலியோ இராமனிடத்தில் அளவற்ற பக்தியுடையவன்; அவனைத் தரும உருவாகவே மதித்துப் போற்றுபவன். வாலி சுக்கிரீவனோடு போர் செய்யப் புறப்பட்டபோது, அவனுடைய மனைவி தாரை, "சுக்கிரீவனுக்கு இராமன் உதவியாக வந்திருக்கிருன். ஆகையால் போருக்குச் செல்லவேண்டாம்," என்று கூறி வாலியைத் தடுத்தாள் அல்லவா? அப்போது அவளை நோக்கி வாலி கூறிய

மொழிகளை நாம் கவனித்தால் அவன் இராமன்பால் கொண்டிருந்த பக்திப் பெருக்குப் புலனாகும்,

"உலகத்து உயிர்களுக்கெல்லாம் தரும வழியைச் செய்து காட்டி விளங்கும் இராமனே அறம் தவறிச் சுக்கிரீவனுக்கு உதவியாக வருவான்? நீ சொல்லத் தகாத சொற்களைச் சொல்லி உன் பெண் தன்மையால் பிழை செய்தாயே! பாவி!" என்று தன் மனைவியை அப்போது வாலி கடிந் துரைத்தான். இதனால் அவனுக்கு இராமனிடத்தில் எவ்வளவு அன்பும் மதிப்பும் உண்டு என்பது தெளிவாகிற தன்றோ? இங்ஙனம் வாலியின் பெருமதிப் பிற்குரிய இராமன் வாலியை நோக்கி, "நீ உன் தம்பியைத் துன்புறுத்துவது தவறு. அவன் மனைவியைக் கவர்ந்தது பெரும் பாவம். நீங்கள் இருவரும் பகைமை நீங்கி ஒற்றுமையுடன் பெருமிதமாக வாழ்வீர்களாக!" என்று ஆணையிட்டிருந்தால் அதனை வாலி தலைமேற் றாங்கி மிக்க மகிழ்ச்சியுடன் நிறைவேற்றி யிருப்பானே! அதனால் இருவரையும் ஒன்றுபடுத்திய பெருமை இராமனைச் சார்ந்து அவனுக்கு இன்னும் உயர்வைத் தந்திருக்கும் அன்றோ? அவ்விருவரின் துணையால்—வாலி ஒருவனே போதும்—இராவணனிட மிருந்து தன் மனைவியை மிக எளிதில் மீட்டும் இருக்கலாம். வாலியை நேரில் சந்தித்துச் சமாதானப் பேச்சு நிகழ்த்த இராமனுக்கு விருப்ப மில்லாம லிருந்தால் தூதாவது அனுப்பி யிருக்கலாம். தன் ஆருயிர்க் காதலியைக் கவர்ந்து சென்ற இராவணனுக்கு முதலில் அனுமனையும், பின்பு அங்கதனையும் இராமன் தூது அனுப்பினனே! தனக்கு ஒரு தீங்கும் செய்யாத வாலிக்கு ஒரு தூதுகூட அனுப்ப வில்லையே! பெரியோர்கள் என்ன குற்றம் செய்தாலும் அது குற்றமாகாது போலும்!' என்று கூறிச் சிறிது என் பேச்சை நிறுத்தினேன்.

'ஏனப்பா உன் தாக்குதலை நிறுத்திவிட்டாய்? இன்னும் என்ன கூறப் போகிருய்?' என்று அவர் கேட்டார்.

'இராமன் வாலிக்குச் செய்த தீங்கைக் குறித்து எவ்வளவோ பேசலாம். உண்மையில் இராமன் வாலியைக் கொன்றதை நினைக்கும்போது என் நெஞ்சம் துடிக்கிறது. அவனை நேரிலாவது எதிர்த்துப் போர் செய்திருக்கக் கூடாதா? உலகிலேயே ஒப்பற்ற வீரன் என்று தன் பெயரை விளங்கச் செய்த இராமன் வாலியை மறைந்து நின்று கொன்ருனே! இதுவோ வீரம்! இதைச் சொல்லவும் என் வாய் கூசுகிறது. இதற்கு இராமன் வெட்கித் தலை குனிய வேண்டாமா?' என்றேன்.

'இதற்குத்தான் இலட்சுமணனைக் காரணம் கூறும்படியாகக் கம்பன் செய்துவிட்டானே! சுக்கிரீவன் இராமனை அடைக்கலம் அடைந்ததும் இராமன் வாலியைக் கொல்வதாக அவனுக்கு உறுதி கூறிவிட்டான். எனவே, இராமன் வாலியை நேரில் சென்று எதிர்த்தால் வாலியும் தன் உயிர்க்கு அஞ்சி இராமனை அடைக்கலம் அடைவான். அடைக்கலம் அடைந்தவரைக் காப்பது பெரியோரின் கடமை அன்ருே? வாலி அடைக்கலம் அடைந்துவிட்டால், இராமன் சுக்கிரீவனுக்குக் கொடுத்த உறுதிமொழி தவறிவிடும். ஆகையால்தான் இராமன் மறைந்து நின்று அம்பெய்ததாக இலட்சுமணன் வாலிக்குக் கூறுகிருனே,' என்று அவர் சிறிது உற்சாகத்துடனேயே பதிலுரைத்தார்.

நான் நகைத்துக்கொண்டே, 'ஆகா! என்ன அழகான காரணம்!' என்று கூறி, மேலும் 'வாலியும் அடைக்கலம் அடைந்துவிட்டால் நன்மைதானே! அவர்கள் இருவருக்கும் அறிவு புகட்டி இருவரையும் வாழவைத் திருக்கலாமே! வாலி உண்மையில் உயர்ந்தவன். "யார்க்கும் சிந்தையால், செய்கையால் ஓர் தீவினை

செய்திலாதாய்,'' என்று அங்கதன் தன் தந்தை வாலியை நோக்கிப் புலம்புகிருன். இத்தகைய வாலியை வீரமிக்க இராமன் மறைந்து நின்று கொன்ருன். என்னே அவன் வீரம்! இராமன் செய்தது இந்த உலகம் என்றும் மறக்க முடியாத ஒரு பெரிய குற்றமே,' என்று வலியுறுத்திப் பேசினேன்.

'அப்பா நீ கூறுவது உண்மையே. கம்பனும் இதனை நன்ருக உணர்ந்துதான் இருக்க வேண்டும். இல்லையேல் வாலி இராமனைப் பழிப்பதாகக் கம்பன் பாடி யிருப் பாஞ? அப்பப்பா! வாலி இராமனை எவ்வளவு கடுமை யாகப் பழித்துப் பேசுகிருன்!

'வாய்மையும் மரபுங் காத்து
மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்தனே நீ
பரதன்முன் தோன்றினுயே'

என்கிருன். பிறகு,

'ஆவியைச் சனகன் பெற்ற
அன்னத்தை யமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத்
திகைத்தனை போலுஞ் செய்கை'

என்று ஏசுகிருன். இன்னும்,

'அரக்கர் ஓரழிவுசெய்து
கழிவரேல் அதற்கு வேருேர்
குரக்கினத் தரசைக் கொல்ல
மனுநெறி கூறிற்றுண்டோ?'

என்று ஏளனம் செய்கிருன். மேலும்,

'வலியவர் மெலிவு செய்தால்
புகழன்றி வசையுமுண்டோ?'

என்றும்,

'நாட்டொரு கருமஞ் செய்தாய்
யெம்பிக்கிவ் வரசை நல்கிக்
காட்டொரு கருமஞ் செய்தாய்
கருமந்தான் இதன்மேல் உண்டோ ?'

என்றும் பழிக்கிருன். மற்றும்,

"வாலியைப் படுத்தாயலே மன்னற
வேலியைப் படுத்தாய் விறல் வீரனே,'

என்றும் தூற்றுகிருன்.

'இவை அனைத்தும் வாலி சொன்னுலும் கம்பன் கூறுவனவே அல்லவா? கம்பன் தன் கோபம் முழுமையும் இராமன்மேல் செலுத்தி விடுகிருனே. இதனுல் இராமன் வாலியைக் கொன்றது பெருந்தவறு என்பதைக் கம்பனும் உணர்கிருன் என்று தெளிவாகிறதல்லவா ?' என்று கூறினுர்.

உடனே நான், அப்படியாயின் அப்பகுதியைக் கம்பர் தமிழ்ப் பண்பிற்கேற்ப மிக்க நாகரிகமாக மாற்றி அமைத்திருக்கலாமே,' என்றேன்.

'ஆமாம் அப்படியே செய்திருக்கலாம். இந்த இடத்தில் கம்பன் வால்மீகியைத் தவருது பின்பற்றிவிட்டான்,' என்று கூறிப் புறப்படத் தொடங்கினுர்.

"என்ன புறப்பட்டு விட்டீர்கள்? கம்பர்மீது இன்னெரு பெரிய குற்றம் இருக்கிறது. இராமன் சூர்ப்பநகையை மானபங்கப் படுத்தியது... ..........."

'ஓகோ, சூர்ப்பநகைப் படலமா ? அது பெரிய கதை. இப்பொழுது வேண்டாம். நேரமாயிற்று. மற்றெரு நாளைக்கு வருகிறேன். அப்போது பேசலாம் அப்பா. நீ எனக்குக் கம்ப ராமாயணத்தில் பல பாடல்களை நினைவு படுத்தினுய். நான் நெஞ்சார உன்னை வாழ்த்துகிறேன். இவ்வளவு நேரம் உன்னுல் பழிக்கப்பட்ட கம்பன்

நானே. போய் வருகிறேன்!' என்று கூறி விரைந்து சென்றார்.

'கம்பரா? கவியரசர் கம்பரா? ஆகா! நான் என்ன பேறு பெற்றேன்! புலவர் பெருமானே! நில்லுங்கள்!'... ............

கண் விழித்தேன். ஐயோ, எல்லாம் கனவு! இன்பக் கனவு! மீண்டும் கம்பர் வருவாரா!

# 11

## குடிமை

இவ்வுலகில் நல்லவர்களும் உண்டு; தீயவர்களும் உண்டு. நல்லவர்கள் உயர்ந்த குணங்கள் யாவும் ஒருங்கே அமைந்தவராய்ப் பலர்க்கும் பயன்படுவர். தீயவர்கள் தம் நலமே குறிக்கோளாய்ப் பிறரைத் துன்புறுத்தி வாழ்வர். நல்லவர்களால் உலகம் தழைத் துயரும். தீயவர்களால் அது வாடிச் சிதையும். இங்ஙனம் மக்களுக்குள் ஒரு சிலர் நல்லவர்களாகவும் வேறுசிலர் தீயவர்களாவும் இருப்பதற்குக் காரணம் என்ன? சிறப்பாக இதற்கு இரண்டு காரணங்கள் கூறலாம். ஒன்று பிறந்த குடி; மற்றொன்று சூழ்நிலை. ஒரு குடியில் பிறந்த ஒருவன் இயல்பாகவே அக்குடிக்குரிய பண்புகளைப் பெற்றுவிடுகிறான். பிறகு அவன் வளர்கின்ற இடமும், சேர்கின்ற மக்களுமாகிய சூழ்நிலை அதன் தன்மைக்கேற்ப அவன் பண்புகளைப் பாதிக்கிறது

எனினும் பிறப்பால் ஒருவன் இயல்பாக அடையும் குணங்கள் மிக எளிதில் மாறுவ தில்லை. எனவே, ஒருவனுடைய பண்பு அமைப்புக்குச் சூழ்நிலையைவிட அவன் பிறந்த குடியே சிறந்த காரணமாகிறது.

தொன்றுதொட்டு வழிவழியாக நல்ல பண்புகள் பொருந்தியதாய் விளங்கும் குடியை, ‘உயர்ந்த குடி’ என்பர். இந்த உயர்ந்த குடியிலே பிறந்தவர்கள் இயல் பாகவே இனிய பண்புகள் வாய்ந்தவர்க ளாவர். இவர் களுடைய உயர்ந்த இயல்புகளைத்தான் ‘குடிமை’ என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் உணர்த்துகின்றார்.

இந்த உயர்ந்த குடிப்பிறப்பு எல்லாச் சாதியார்க்கும் பொது. உயர்ந்த சாதியிலே பிறந்தவர்கள் இயல்பாக இழிந்த குணங்களுடையவர்களாய் இருப்பார்களானால் அவர்கள் உயர்குடிப் பிறப்பினர் ஆகார். தாழ்ந்த சாதியில் தோன்றியவர்களா யிருந்தாலும், இயற்கை யாகவே அவர்களிடம் நற்பண்புகள் அமைந்திருக்கு மானால், அவர்கள் உயர்குடிப் பிறப்பினர் என்று உறுதி யாகக் கொள்ளலாம். திருநாளைப்போவார், திருப் பாணாழ்வார் ஆகியோர் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவர் களே. எனினும் அவர்கள் உயர்குடிப் பிறப்பினர் என்பதை யார் மறுக்க முடியும் ? அவர்களிடம் இயற்கை யாக அமைந்திருந்த அருங்குணங்களை அளவிட முடியுமோ ?

உயர்ந்த குடியில் பிறந்தவர்களிடம் இயல்பாக அமைந்திருக்கும் குணங்களில் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கன இரண்டு. அவை செப்பம், நாண் என்பன. செப்பம் என்ற சொல்லுக்குச் செம்மை என்பது பொருள். அஃதாவது, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாமை. நல்ல பண்புடையவர்கள்

நினைத்ததைச் சொல்லுவார்கள்; சொன்னதைச் செய்வார்கள். இதனைத்தான் செப்பம் என்று கூறுகிறார் திருவள்ளுவர். "சொற்கோட்டம் இல்லது செப்பம்," என்பது திருக்குறள். உள்ளத்திலே ஒன்றை நினைத்து வெளியிலே வேறொன்றைப் பேசுவது மிகவும் இழிந்த தன்மையாகும். இந்தத் தன்மையுடையவர்களைக் கண்டு அஞ்சி, அவர்கள் உறவே தமக்குக் கூடாது என்று இராமலிங்க அடிகள் இறைவனை வேண்டுகிறார். "உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்," என்பது அடிகளின் முறையீடு. இதனின்றும் செப்ப மில்லாமை ஒருவனை எவ்வளவு இழிந்தவனாக ஆக்கிவிடுகின்றது என்பதை உணரலாம். செப்பமுடையவர்களோ மிக உயர்ந்தவராக விளங்குகிறார்கள்.

நாணமாவது, பாவங்களுக்கு அஞ்சுதல். உயர்குடி மக்கள் செய்யத் தகாத செயல்களை மனத்தால் நினைக்கவும் கூசுவார்கள். இப்பண்பும் அவர்களுக்குச் செப்பமுடைமையைப் போல இயல்பாக அமைவதாகும். இவை யிரண்டும் ஒருங்கே எல்லோரிடத்திலும் அமையா. உயர்ந்த குடியில் தோன்றும் பெருமக்களிடந்தான் இவ்வரிய பண்புகள் இயற்கையாகப் பொருந்தி யிருக்கும். வேறு சிலரிடத்திலும் இப்பண்புகளைக் காணலாம். ஆனால், அவர்கள் அவைகளை இயல்பாகப் பெற்றவர்கள் அல்லர்; தம் கல்வி யறிவினால் பெற்றவர்களே ஆவர். கல்வி யறிவினால் பெறும் பண்புகள் என்றும் நிலைத்திருக்கும் என்று கூற முடியாது. ஆனால் உயர்குடிப் பிறப்பினர் பெறும் பண்புகள் வழிவழியாக நிலைத்து வருபவை. ஆகையால் அவைகள் அக்குடியினரிடத்து என்றும் அழிவ தில்லை. இவ்வுண்மையைத் திருவள்ளுவர்,

" இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு."

என்ற குறளில் நமக்குத் தெளிவு படுத்துகின்றனர்,

உயர்குடிப் பிறந்தார் தமக்குரிய ஒழுக்கங்களைத் தம்முயிரினும் போற்றி ஒழுகுவார்கள். அவர்கள் எக் காரணத்தைக் கொண்டும் தம்மொழுக்கத்தி லிருந்து சிறிதும் தயங்காமல் உயிரைக் கொடுத்து ஒழுக்கத்தை நிலைநாட்டுவர். இங்ஙனமே வாய்மையிலும் அவர்கள் சிறிதளவும் பிறழ்வது கிடையாது. வாய்மையாவது பிற உயிர்களுக்குத் தீங்கு பயக்கும் சொற்களைச் சொல் லாமை.

" வாய்மை எனப்படுவ(து) யாதெனில் யாதொன்றும்
தீமை யிலாத சொலல், "

என்று திருவள்ளுவர் வாய்மைக்கு விளக்கம் கூறுகிறார். எந்த வகையிலும் பிறர் மனம் நோகும்படியோ, அல்லது அவர்களுக்குத் தீங்கு நேரும்படியோ உயர்குடி மக்கள் பேசவே மாட்டார்கள். ஒழுக்கம், வாய்மை, பழி பாவங்களுக்கு அஞ்சுதலாகிய நாண் ஆகிய இம் மூன்று பண்புகளிலிருந்தும் தவறுவது உயர்குடி மக்களிடத்து என்றுங் கிடையாது. இதனை,

" ஒழுக்கமும் வாய்மையும் நாணுமிம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார், "

என்ற குறளில் வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

உயர்குடியிலே பிறந்த பண்புடைய மக்கள் என்றும் எளியோர்க்கு இரங்கும் பான்மை உடையவர் ஆவர். "இல்லாரை எல்லாரும் எள்ளுவர்," என்ற உரை அவர்களிடத்திலே செல்லாது. வறியர்களைக் காணின்

அவர்கள் முகம் மலரும். வறுமையால் பரதவிக்கும் ஏழைகளுக்கு உதவுதலாகிய அரிய பேறு தமக்குக் கிடைத்ததே என்று அப்பெருமக்கள் மனம் களிப்பர். அக்களிப்பை அவர் தம் முகமலர்ச்சி நன்கு காட்டும். இங்ஙனம் வறியர்களை முக மலர்ந்து வரவேற்று அவர் களுக்குத் தம்மிடமுள்ள சிறந்த பொருளை வழங்கு வர். பொருளை வழங்கும்போது அவர்களைத் தம் இனிய சொற்களால் மகிழ்விப்பர். பொருளைக் கொடுப்பவர்கள் கடிய முகத்தோடு வெறுப்புடன் கொடுத்தால் ஏற்றுக்கொள்ளும் வறியரின் உள்ளம் மிகவும் வருந்தும். 'நாம் ஏன் பொருள்விரும்பி இவர் களிடத்தில் வந்தோம்?' என்று தம்மையே நொந்து கொள்வர். இவ்வாறு வறியர்களின் உள்ளம் எவ்வகை யிலும் நோகாமல் உயர்குடி மக்கள் அவர்களிடத்தில் மிக்க நாகரிகமாக நடந்து கொள்வர். வறியர்களை அன் போடும் ஆர்வத்தோடும் ஓம்புவது உயர்குடிப் பிறந் தார்க்கே உரிய தனிப் பண்பாகும். ஏனையோர்க்கு இப் பண்பு இயல்பாக அமைவ தில்லை.

"நகை ஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு,"

என்பது குறள்.

இதுவரை, செப்பம், நாண், ஒழுக்கம், வாய்மை, வறியரை ஓம்புதல் ஆகிய இப்பண்புகள் உயர்குடி மக்களிடத்தில் இயற்கையாகவே அமைந்தவை என்பதைக் கண்டோம். இதற்கு அடுத்தபடியாக உயர்குடி மக்களது முக்கியமான மற்றொரு பண்பையும் திருவள்ளு வர் குறிப்பிடுகிறார். அஃதாவது, அவர்கள் கோடிக் கணக்கான பொருளைப் பெறுவதா யிருந்தாலும், அதற் காகத் தம் குடிப் பண்புக்கு மாறான செயல்களைச் செய்ய மாட்டார்கள். அவர்கள் தம் ஒழுக்கத்தை இழப்பதைக்

காட்டிலும், அதனால் வரும் அளவற்ற பொருளை இழக்க முற்படுவர்.

கன்னன் குந்தியின் மூத்த மகன்; பாண்டவரின் தமையன். குந்தி அவனைத் தன் கன்னிப் பருவத்தில் ஈன்றமையால், ஊரார் பழிக்கு அஞ்சிக் குழந்தையை ஒரு பேழையிலே வைத்து மூடிக் கங்கை யாற்றிலே விடுத்தாள். துரியோதனனுடைய தேர்ப்பாகன் அக் குழந்தையை எடுத்து மிக்க பரிவோடு வளர்த்து வந்தான். நாளடைவில் துரியோதனனுக்கும், கன்னனுக்கும் நட்பு ஏற்பட்டது. இருவரும் ஒருவரையொருவர் மிக்க ஆர்வமுடன் நேசிக்க லாயினர். துரியோதனன் கன்னனை அங்க தேசத்து அரசனாக்கினான். பாண்டவர்களுக்கும் துரியோதனாதியர்க்கும் போர் மூண்டது. கன்னன் தன்னுடைய மூத்த மகன் என்பதைக் குந்தி அறிந்து அவனிடம் சென்று, தான் அவன் தாய் என்றும், பாண்டவர்கள் அவனுடைய தம்பிமார்கள் என்றும், அவர்களுக்குத் துணையாக அவன் வந்து நின்று துரியோதனாதியர்களை எதிர்க்க வேண்டும் என்றும் வேண்டினாள். தான் ஒரு தாயற்ற மகன் என்று அதுவரை எண்ணி யிருந்த கன்னன், தன்முன் தன் தாயைக் கண்டதும் அவன் உள்ளம் எவ்வளவு பூரிப் படைந்திருக்கும்! அவள் இடும் ஆணையை மறுக்க அவனுக்கு மனம் வந்திருக்குமா? மேலும் வீரத்திற் சிறந்த பாண்டவர் ஐவரும் தன் தம்பிமார்களே என்றறிந்ததும் அவன் அவர்களை விரைந் தடைந்து அவர்களுக்குத் தலைமை தாங்கித் துரியோதனாதியர்களை எதிர்ப்ப தன்றோ முறை? ஆனால் கன்னன் இங்ஙனம் செய்யவில்லை. தான் ஏன் பாண்டவரை அடைய விரும்பவில்லை என்பதைத் தன் தாய்க்கு மிக உருக்கமாகக் கூறினான் :

‘ பெற்றநீர் மகவன் பிலாமையோ
அன்றிப் பெரும்பழி நாணியோ விடுத்தீர்
அற்றை நாள் தொடங்கி என்னை
யின்றளவும் ஆருயிர்த் துணையெனக் கருதிக்
கொற்றமா மகுடம் புனைந்(து)
அரசளித்துக் கூடவுண்(டு) உரிய தம்பியரும்
சுற்றமா னவரும் என்னடி வணங்கத்
தோற்றமும் ஏற்றமும் அளித்தான் ”

என்று கன்னன் கூறி, மேலும் இங்ஙனம் தனக்கு ஏற்றமளித்த துரியோதனனுக்குச்

‘ செஞ்சோற்றுக் கடன் கழிப்பதுவே எனக்(கு)
இனிப்புகழும் கருமமும் தருமமும், ”

என்றான்.

திக்கற்றவனாகிய தன்னை ஒரு பொருட்டாக எண்ணி, அன்பு கொண்டு அங்க தேசத்தின் அரசனாக்கித் தன்னைப் பலரும் வணங்கும்படியான உயர்ந்த பதவியைத் தந்து ஆதரித்த துரியோதனனுக்குத் தன் உயிர் கொடுப்பதே தனக்குரிய கடமையும் தருமமும் ஆகும் என்று தன் தாயின் வேண்டுகோளை மறுத்துரைத்தான். உயர் குடிப்பிறப்பிற் குரிய செய்நன்றி மறவாப் பண்பினைக் கன்னனிடத்தில் காணலாம். பாண்டவரை அடைந்தால் தனக்கு மிகப் பெரிய அரச செல்வம் கிடைக்கும் என்பதை நன்கு உணர்ந்தும், கன்னன் அதற்காகச் செய்நன்றி கொல்லும் இழி தகைமையை ஏற்க விரும்ப வில்லை. இது நற்குடிப் பிறந்தாரின் உயரிய இயல்பு. இந்த இயல்பினைத்தான்,

“ அடுக்கிய கோடி பெறினும் குடிப் பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர். ”

என்ற குறளில் திருவள்ளுவர் குறிக்கின்றார்.

இனி, உயர்குடிப் பிறந்தார் வறுமையால் தொடர்ந்து வாடி வருந்துகின்ற காலத்தில் இச்சீரிய பண்புகள் அவர்களிடம் நிலைத்திருக்குமா என்பதை அடுத்துத் திருவள்ளுவர் விளக்குகின்றார்.

உயர்குடிப் பிறப்பினர் ஒவ்வொருவரும் வள்ளலாகவே விளங்குவர். அவர்கள், 'இல்லையென்று இரப்போர்க்கு இல்லை யெனா இதயம்' படைத்தவர்கள். தாம் செல்வம் சுருங்கி வறுமையால் வாடுகின்ற காலத்தும், அவர்கள் தம் கொடைப் பண்பினைக் கைவிடார். அவர்கள் தந்நலங் கருதாது பிறர் நலமே கருதும் பெரும் தியாகியர் ஆவர். தம்முடைய செல்வமற்ற நிலையை அவர்கள் வறுமையாகக் கருத மாட்டார்கள்; துன்புறும் பிறர்க்குத் தம்மால் உதவி செய்ய இயலாததைத்தான் வறுமையினும் வறுமையாகக் கருதுவர்.

காளத்தியப்ப முதலியார் ஒரு சிறந்த வள்ளல். அவர்தம் கொடையால் அவர் புகழ் எங்கும் பரவி ஓங்கியது. அதைக் கண்டு பொறுக்கலாற்றாத அவ்வூர் அரசன் அவர் பொருள் அனைத்தையும் பறித்துக் கொண்டான். வள்ளல் வறுமையால் வாடினார். அயலூரை நாடிச் சென்றார். வழியில் ஒரு சத்திரத்தில் அவர் தங்க நேர்ந்தது. அங்குப் பசியால் வாடிய புலவர் ஒருவர் வள்ளலின் புகழைப்பாடிப் பொருள் வேண்டினர். வள்ளல் உடனே தம் வீடு திரும்பித் தன் மனைவியின் அணிகலன்களை விற்றுப் புலவரின் பசியைத் தீர்த்தார். மேலும் புலவர்க்குப் பொருள் கொடுத்து அவர் வறுமையைத் தீர்க்க விரும்பினார். ஆனால் அவரிடம் பொருள் ஏது? தம்மால் அவருக்குப் பொருள் கொடுக்க இயலாமையை நினைத்து மனம் நொந்தார். தாம் புலவர்க்கு உதவ முடியாத நிலையில் இருப்பதைக்

காட்டிலும் உயிர்விடுவதே மேல் என்று கருதி, ஒரு பாம்புப் புற்றில் கையை விட்டார். புற்றிலுள்ள பாம்பு அவர் கையைக் கடித்துத் தம்முயிரைப் போக்கிவிடும் என்று நம்பினர். ஆனல், வள்ளலின் பெருமையை யுணர்ந்த பாம்பு அவர் கையில் மாணிக்கத்தை உமிழ்ந்தது. முதலியார் மகிழ்ச்சி மிக்கவராய் அவ் விலை யுயர்ந்த மாணிக்கத்தைப் புலவர்க்குக் கொடுத் தருளினர். புலவர் அதனை விற்பதற்காக அவ்வூர் அரசனிடம் சென்றார். புலவர் அம்மாணிக்கத்தைக் காளத்தியப்ப முதலியாரிடமிருந்து பெற்ற செய்தியை அறிந்து அரசன் காளத்தியப்பரை வரவழைத்து, 'இன்னும் இதுபோன்ற விலை யுயர்ந்த பொருள்கள் எவ்வளவு மறைத்து வைத்திருக்கிறீர்?' என்று சீற்ற முடன் வினவினன். முதலியார் நிகழ்ந்ததைக் கூறினர். 'அங்ஙனமாயின் அப்பாம்பின் ஜீவரத்தினத்தையும் பெறுவீராக! இல்லையேல் உம் உயிரை வாங்கி விடுவேன்,' என்று அரசன் ஆணை யிட்டான். முதலியார் புற்றருகே சென்று ஜீவரத்தினத்தைக் கொடுத்தருளும்படி பாம்பை வேண்டினர். பாம்பு வெளியே வந்து தன் ஜீவரத்தினத்தை உமிழ்ந்து இறந்தது. அரசன் முதலியாரின் பெருமையை உணர்ந்து மன்னிப்பு வேண்டினன்.

> 'வழங்குவ(து) உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
> பண்பின் தலைப்பிரிதல் இன்று.'

இக்குறளுக்குத் தக்க சான்ருய்க் காளத்தியப்ப முதலியாரின் வரலாறு விளங்குவதைக் காணலாம் தாம் வழங்குவதற்குத் தம்மிடம் பொருள் இல்லாத காலத்தும் அவர் தம் கொடைப் பண்பினைக் கைவிடாமல் தம்மை அடைந்த புலவரை ஆதரித்தது அவருடைய

உயர்குடிப் பிறப்பின் தன்மையை உணர்த்துவ தாகும்.

‘ சலம்பற்றிச் சால்பில செய்யார் மாசற்ற
குலம்பற்றி வாழ்துமென் பார். ’

இக்குறள் குற்ற மற்ற குடியிலே பிறந்தவர்கள் தாம் எவ்வளவு முயன்றாலும், அவர்கள் வஞ்சனையை மேற்கொண்டு தம் பண்புக்குப் பொருந்தாத செயல்களைச் செய்யார் என்று கூறுகின்றது. இஃது அவர்தம் மன ஒழுக்கத்தை உணர்த்துவ தாகும்.

இதுவரை நாம் ஆராய்ந்த வற்றில் உயர்குடி மக்கள் மனத்தாலும், சொல்லாலும், செயலாலும், தம் குடிக்குப் பொருந்தாத குற்றங்களை என்றுமே செய்ய மாட்டார்கள் என்பதைக் கண்டோம். அப்படி ஒரு வேளை தம் விழிப்பின்மையாலும் விதிவசத்தாலும் தவறிச் சிறு குற்றம் ஒன்றை இழைத்து விடுவார்களானால், அக்குற்றம் உலகத்தார்களுக்கு மிகப் பெரிதாகத் தோன்றும். குற்றமே செய்தறியாத பெரியார் ஒருவர் தவறி ஒரு சிறு குற்றம் செய்து விடுவாரானால், அக்குற்றத்தைப் பெரிதாகப் பாராட்டித் தூற்றுவது இவ்வுலக இயல்பாக இருப்பதை நாம் இன்றும் காணலாம். விண்ணில் தோன்றும் சந்திரன் உலகமெலாம் குளிர்ந்த ஒளி வீசி உதவுகிறது. சிறந்த ஒளி வடிவமாய் விளங்கும் அதனிடத்தில் ஒரு களங்கமும் உண்டு. அது மிகச் சிறிய களங்கம்தான். எனினும், உலகத்தார் கண்களுக் கெல்லாம் அஃது ஓங்கித் தோன்று கிறது. இதைப் போலவே மாசற்ற பெருமக்களிடத்தில் ஒரு சிறு குற்றம் நிகழ்ந்து விடின், அஃது உலகத்தார் கண்களுக்கு மிகப் பெரிய குற்றமாகத் தோன்றும். எனவே, உயர்குடி மக்கள் தம்மிடம் ஒரு சிறு குற்றமும்

நிகழாதபடி விழிப்பாக இருக்க வேண்டும் என்று எச்சரிக்கை செய்கிறார் வள்ளுவர்.

> ‘ குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
> மதிக்கண் மறுப்போல் உயர்ந்து. ’

என்பது வள்ளுவர் வாய்மொழி.

அதோடு குற்ற மிழைத்தவர்களாகிய உயர்குடி மக்கள் தம் குற்றத்தை நினைத்து நினைத்து மனங் கரைவர். என்றும் மாசுபடாத தம் குடி தம்மால் மாசு பட்டு விட்டதே என்று உள்ளம் பதைப்பர். அவர்தம் குற்ற நெஞ்சம் அவர்களை நாளும் வாட்டி வாட்டிச் சிதைக்கும்.

உயர்குடிப் பிறப்பினர் இயல்பாகவே ஈர முடைய வர்கள். அதாவது கருணை நிறைந்தவர்கள்; மிக எளியவர்களிடத்தும் தாழ்மையுடையராய் அன்புமொழி பேசி அவர்களை ஆதரிக்கும் பண்புடையவர்கள். இவ் வுண்மைகளை நாம் முன்பே கண்டோம். உயர்குடியிலே பிறந்த ஒருவன் இதற்கு மாறாக எளியவர்களிடத்துக் கருணை யற்றவனாய்க் கடுஞ்சொல் பேசி அவர்களுக்கு உதவி செய்ய மறுப்பா னானால், அவன் உயர்குடியைச் சேர்ந்தவனோ என்று உலகம் ஐயப்படும். அஃதாவது அவனது கருணையற்ற தன்மையானது அவன் உயர் குடிப்பிறப்பினன் ஆகமுடியாது என்பதைத் தெரி விக்கும்.

சோழன் நலங்கிள்ளிதம்பி மாவளத்தானும், தாமப் பல்கண்ணன் என்ற புலவரும் சேர்ந்து ஒருநாள் சொக்கட்டான் ஆடிக்கொண் டிருந்தனர். சோழன் காயைக் கையில் மறைத்து ஆடினான். புலவருக்குச் சீற்றம் மிகுந்து விட்டது. உயர்குடியாகிய சோழர் குடியிலே பிறந்த நலங்கிள்ளி நேர்மையை விட்டு

வஞ்சனையாக ஆடுவதா? அவன் உண்மையிலே சோழர் குடியில் பிறந்தவன்தானு என்று புலவர் ஐயுற்ருர். அவர் அரசனை நோக்கி, 'ஐயமுடையேன்,......மற்றிது நீர்த்தோ நினக்கிது' என்ருர். இச் சான்று,

'நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்.'

என்ற குறளுக்குத் தக்க விளக்கமாக அமைவதைக் காணலாம்.

மக்களுள் உயர்குடிப் பிறப்பினர் இவர், அல்லாதவர் இவர் என்று எப்படி அறிவது? அதற்கு எளிதான வழி ஏதேனும் உண்டா? உண்டு என்று நம் திருவள்ளுவர் கூறுகிருர்.

'நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தவர் வாய்ச்சொல்.'

இதுதான் வள்ளுவர் காட்டும் வழி.

ஒரு நிலத்தில் விதை விதைக்கிருேம். விதைத்த விதையிலிருந்து முளை நன்ருக வெளிவருமாஞல், அந் நிலம் வளமுடைய நிலம் என்று உணர்கிருேம். இல்லையேல், அது பயனற்றது என்று முடிவு செய்கிருேம். அதுபோல மக்களுள், அவர்கள் பேசுகின்ற சொல்லைக் கொண்டு உயர்குடியினர் இவர், தாழ்ந்த குடியினர் இவர் என்று கூறிவிடலாம். எவரிடத்தும் இன்சொல்லே பேசும் மக்கள் உயர்குடிப் பிறப்பினர் ஆவர். கடுஞ் சொல் பேசித் திரிகிறவர்களைத் தாழ் குடியினர் என்று கொள்ளவேண்டும்.

குடிமைக்கு இன்றியமையாதது என்று முதலில் குறித்த நாணுடைமையை இறுதியிலும் வள்ளுவர்

வற்புறுத்துகின்றார். ஒருவன் நாணுடையவனாக—அஃதாவது பழி, பாவங்களுக்கு அஞ்சி ஒழுகுபவனாக—இருப்பானானால், அவனுக்கு இப்பிறவியில் புகழும், மறு பிறவியில் புண்ணியமும் பெருகும் என்பதும், அதோடு யாவரிடத்திலும்—தன்னினும் மிகத் தாழ்ந்தவரிடத்தும் -தாழ்மையுடையவனாக நடந்துகொள்வானாயின், அவன் குலப் பெருமை ஓங்கும் என்பதும் திருவள்ளுவரின் கருத்தாகும்.

இதனை,

'நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு'

என்ற செந்தமிழ் மொழிகளால் வள்ளுவர் வற்புறுத்துகின்றார்.

எனவே, குடிமையானது உயர்ந்த குடியில் பிறந்தவர்களது தன்மை என்பதாகும். அவர்களுடைய பண்புகளாவன, செப்பம், நாண், ஒழுக்கம், வாய்மை, வறியர்களை ஓம்புதல், பெரும் பொருளுக்காகப் பண்பு இழவாமை, வறுமை யுற்ற காலத்திலும் வள்ளன்மை இழவாமை, பணிவு என்பனவாம். உயர்குடிப் பிறந்தார் சிறு குற்றம் செய்தாலும், சந்திரனிடத்துக் களங்கம் போல யார்க்கும் ஓங்கித் தோன்றுவ தாகும். அக்குடியில் பிறந்த ஒருவன் கருணையற்றவனாக இருப்பானானால், அவன் பிறந்த குடியிடத்து ஐயம் ஏற்படும். முளையானது தான் விளையும் நிலத்தின் தன்மையைக் காட்டுவது போல, ஒருவன் வாய்ச்சொல் அவன் பிறந்த குலத்தின் தன்மையைக் காட்டிவிடும். இவை குடிமையைப் பற்றித் திருவள்ளுவர் உணர்த்தும் உண்மைகளாம்.

12

# தேவரின் ஓர் அரிய படைப்பு

இவ்வுலகத்து உயிர்களும் பொருள்களும் இறைவன் படைப்பு என்பர். உயிர்களும் எத்தனை வகையானவை! பொருள்களும் எத்தனை வகை! அவற்றை ஆராயுந் தோறும் பல அரிய நுட்பங்கள் புலனுகின்றன. இந் நுட்பங்களை அறிபவர்கள் அவற்றைப் படைத்த இறைவனின் பெருமையை உணரவல்லவ ராகிருர்கள்.

கவிகள் உலகத் தன்மையை நுண்ணிதின் ஆராய்ந்து, தாமும் தம் காவியங்களில் கற்பனையினுல் பல மக்களையும் பிற உயிர்களையும் பொருள்களையும் படைக்கின்றனர். அவர்கள் படைப்பு சில சமயங்களில் இறைவனின் படைப்பையும் வென்று விடுகின்றது. அவர்களுடைய அறிவுத் திறனுக்கு ஏற்ப அவர்தம் படைப்பும் பல நுட்பங்கள் பொருந்தி விளங்குவ தாகும். புலவர்கள் தம்முடைய படைப்பின் வாயிலாக வாழ்க்கை யின் தன்மையை விளக்கி, மக்கள் கொள்ளுதற்குரிய

நன்மையையும், கடிதற்குரிய தீமையையும் அறிவுறுத்து கிருர்கள். மேனுட்டு அறிஞராகிய ஆஸ்கார் வைல்ட் என்பவர், 'இலக்கியமாவது வாழ்க்கைத்திறத்தினை ஆய்வதாகும். வாழ்க்கையை உள்ளபடி எடுத்துக் கூறுவது இலக்கிய மாகாது. மக்கள் பெரும்பயன் பெற அதை உருப்படுத்துவதே இலக்கியத்தின் நோக்கமாகும்,' என்று கூறுகின்ருர். பண்டைத் தமிழ்ச் சான்ருேர்களும் இந்நோக்கத்தோடு தம் காவியங்களை யாத்தனர் என்ற உண்மையை அவர்தம் நூல்களினின்று நன்கு தெளியலாம்.

திருத்தக்கதேவர் பண்டைப் பெரும் புலவர்களில் ஒருவர். அவர்தம் காவியமாகிய சீவகசிந்தாமணியில் பண்பு வாய்ந்த மக்களைப் படைத்திருக்கிருர். காமக்களிப்பால் அறிவு மழுங்கி அரசை இழந்து அமைச்சனுல் கொலையுண்ட சச்சந்தன் என்னும் அரசனையும், தீப்பண்பும் தீச் செயலும் உருக்கொண்டவனுகத் தோன்றி அரசனைக் கொன்று அரசைக் கைப்பற்றிய அமைச்சன் கட்டியங்காரனையும், காதல், வீரம், கலை முதலியவற்ருல் சிறந்து விளங்கும் சீவகனையும், சீவகனைத் தன் மகனுகவே எடுத்து வளர்த்து ஆளாக்கும் வணிக வள்ளல் கந்துக்கடனையும், சீவகன்பால் உண்மையான நட்புரிமை பூண்டொழுகும் நந்தட்டனையும், அழகும் அறிவும் ஒருங்கே வாய்க்கப் பெற்று, ஆருயிர்க் கணவனை இழந்து துறவு பூண்டொழுகும் சீவகன் தாயாகிய விசயையும், சீவகன்பால் காதல் கொண்டு அவனைக் கணவனுகப் பெற்ருெழுகும் பேரெழில் வாய்ந்த பாவையர் எண்மரையும், இன்னும் பிறரையும் திருத்தக்க தேவர் தம் காவியத்தில் படைத்திருக்கிருர். அவர் இவர்கள் வாயிலாக உலக இயல்பினை விளக்கிப் பின் உய்யுமாற்றையும் தெளிவுபடுத்துகிருர்.

குணமாலை என்பவள் சீவகனை மணந்த மங்கையர் எண்மருள் ஒருத்தி. தேவர் படைப்பில் இவள் ஓர் அரிய படைப்பாக விளங்குகிருள். இவள்பால் அமைந்து காணும் இனிய பண்புகள் நெஞ்சத்தை உருக்கும் தகையனவாய்த் திகழ்கின்றன.

மக்களுக்குக் காமத்தை மிகுவிக்கும் வேனிற்காலம் வருகிறது. அதனால் இராசமாபுரம் விண்ணுலகை ஒத்து விளங்குகிறது. இணையிலா இன்பத்தையுடைய இராசமாபுரத்து மக்கள் ஆற்றயலில் உள்ள ஒரு பூங்காவில் ஆடி மகிழச் செல்கின்றனர். குணமாலையும், அவளுடைய உயிரினிய தோழியாகிய சுரமஞ்சரியும் அக்காவினுள் பல் வண்ணத் திரை யமைத்து, அதனுள்ளே தம் அழகு பொலிய விண்ணவர் மங்கையர் போன்று அமர்ந்திருக்கின்றனர். அப்போது குணமாலை தான் செய்த சுண்ணத்தைச் (வாசனைப் பொடி) சுரமஞ்சரிக்குக் காட்டுகிருள். சுரமஞ்சரி அதனை மிகவும் இழித்துப் பேசித் தன்னுடைய சுண்ணமே உயர்ந்த தெனக் கூறுகிருள்.

'சுண்ணம் என்பதோர் பேர்கொடு சோர்குழல்
வண்ண மாலை நுசுப்பு வருத்துவான்
எண்ணி வந்தன; கூறு இவையோ என
நண்ணி மாலையை நக்கனள்.'

'நீண்ட கூந்தலையுடைய குணமாலையே! இவை சுண்ணம் என்பதொரு பெயரை மேற்கொண்டு நின்னை வருத்துதற்கு வந்தனவோ? உயர்ந்தன என்று சொல்லின் என்னுடைய சுண்ணங்களைச் சொல்வாயாக! என்று கூறி நகைத்தாள்,' என்பது இப்பாடலின் பொருள்.

இதனின்றும் சுரமஞ்சரியினுடைய செருக்குப் புலனுகிறது. குணமாலை தான் செய்து கொணர்ந்த சுண்ணங்களை அன்புமேலீட்டால் தன் இன்னுயிர்த் தோழியாகிய சுரமஞ்சரிக்குக் காட்டுகிருள். ஆனால் சுரமஞ்சரி, 'இவை

யும் சுண்ணம் என்ற பெயர் கொண்டு இருக்கின்றனவே!' என்று கண்ணுறக் கடிந்தும், இகழ்ந்தும் நகைக்கும் போது குணமாலையின் நல்லுள்ளம் எவ்வளவு வருந்தும்! எனினும், குணமாலை தன் பொறுமையை இழக்காமல் அமைதியோடு, 'செம்பொற்பாவை அன்னாய்! தேவர் உலகத்தி லன்றி இவ்வுலகில் இவ்விடத்து என் சுண்ணத்திற்கு ஒப்பான வேறு சில சுண்ணம் உள என்று அறிவோர் கூறுவார்களாயின், நீயும் நின் சுண்ணத்தையும் இதற்கு ஒப்பாகும் என்று கூறுவாயாக,' என்று நயமாக நவில்கின்றாள். இதன் கருத்தாவது தன்னுடைய சுண்ணத்திற்கு ஒப்பானவை இம்மண்ணுலகில் வேறில்லை என்பது ஆகும். இங்ஙனம் குணமாலை கூறக் கேட்டதும், சுரமஞ்சரி உள்ளங் கொதித்து, தம் இருவருடைய சுண்ணங்களுள் எவருடைய சுண்ணம் குறைபாடுடையது என்று அறிஞர்கள் கூறுகிறார்களோ அவள் புனலாடுதல் கூடாதென்றும், அருகனுக்கு மாற்றுயர்ந்த பொன் கோடி கொடுக்க வேண்டும் என்றும் சபத மிடுகிறாள். இங்ஙனம் உயிர்த் தோழியர் இருவரும் சுண்ணங் காரணத்தால் தம் நட்புக் குலைகிறார்கள். பின்பு இருவருடைய சுண்ணங்களும் சீவகனுக்கு அனுப்பப்படுகின்றன. சீவகன் அச் சுண்ணங்களை ஆராய்ந்து, குணமாலையின் சுண்ணமே உயர்ந்ததெனத் தேர்ந்து உரைக்கின்றான். இதனைச் சுரமஞ்சரி அறிந்ததும், இடியுண்ட நாகம் போல் பெருவருத்த முறுகிறாள். குணமாலையும் மனம் நோகின்றாள். குணமாலை மனம் நோவதேன்? தான் வென்றமைக்காக உள்ளத்தில் உவகை நிரம்பிச் செருக்கும், தருக்கும் பொருந்தி யன்றோ அவள் திகழ வேண்டும்? சுரமஞ்சரி வென்றிருப்பாளாயின், ஆணவம் தலைக்கேறி ஆரவாரம் செய்திருப்பாள் அல்லளோ? ஆனால், குணமாலையோ

சுண்ணங் காரணமாகச் சுரமஞ்சரியின் அன்பைத் தான் இழக்க நேரிடுகின்றதே என்று நினைத்து உருகுகின்றாள்; அவள் தன்பால் பகைமை கொண்டு பேசாமல் இருப் பதைப் பொறுக்கலாற்றாது உள்ளம் பதைக்கின்றாள். பின்பு, தன்னுடனே முன்போல நகையாடிப் பேசும்படி அவளுடைய பாதங்களிலே வீழ்ந்து இரக்கின்றாள்.

'திங்க ளங்கதிர் செற்றுழக் கப்பட்ட
பங்க யப்படு வொத்துளே பாவாய்
நங்கை யென்னொ(டு) உரையாய் நனியொல்லே
இங்கண் என்றடி வீழ்ந்திரந் திட்டாள்'

என்பர் திருத்தக்கதேவர்.

"சந்திர னொளியால் மிகவும் வாடுகின்ற தாமரை யைப் போல இவ்விடத்தே பெரிதும் வருந்துகின்ற பாவையே, விரைவில் முன்போல என்னுடனே நகை யாடி உரையாடுவாயாக!" என்று குணமாலே சுரமஞ்சரி யின் அடிகளிலே வீழ்ந்து இரந்தாள்" என்பது இச் செய்யுளின் பொருள்.

தன்னோடு உரையாடும் போதெல்லாம் அன்புப் பெருக்கால் சூரியனைக் கண்ட தாமரை போல மலரும் சுரமஞ்சரியின் முகம், இப்போது தன்பால் கொண்ட பகை மையாலும் தோல்வியாலும் சந்திரனைக் கண்ட தாமரை போல் வாடிச் சுருங்கித் தோன்றுவதைக் குணமாலே பொறுக்க முடியாமல், 'திங்கள் அம்கதிர் செற்று உழக்கப் பட்ட, பங்கயப் படுஒத்து உளேபாவாய்!' என்று அவளே விளிக்கின்றாள். இங்ஙனம் குணமாலே சுரமஞ்சரியை நோக்கி விளித்தும் சுரமஞ்சரி பேச இணங்குவதாக இல்லே. தன்னேக் காணுந்தோறும் தன்னொடு அளவளா விப் பேசி அகமகிழ்விக்கும் உயிர்த்தோழியாகிய சுரமஞ் சரி, இப்போது பேசாமலிருப்பதைக் குணமாலே எங்ங

னம் பொறுப்பாள்? எனவே அவள் சுரமஞ்சரியை நோக்கி, 'நங்கை, என்னொடு உரையாய் நனி ஒல்லே' என்று கூறுகிறாள். தன்னொடு உரையாடாமல் காலம் நீட்டித்தால் தன்னால் தாங்க முடியாது; ஆகையால் மிகவும் விரைந்து தன்னோடு பேச வேண்டும் என்ற கருத்தமைய 'நனியொல்லே' என்று உரைக்கிறாள். குண மாலை கூறிய இம்மொழிகளும் சுரமஞ்சரியின் உள் ளத்தை மாற்றுவனவாக இல்லை. இதனை யுணர்ந்த குணமாலை இனி வேறு வழி இல்லை என நினைந்து, சுர மஞ்சரியின் திருவடிகளிலே வீழ்ந்து, 'வெறுப்பு நீங்கித் தன்னுடன் உரையாட வேண்டும்,' என்று வேண்டுகின் றாள். இதற்கும் சுரமஞ்சரியின் நெஞ்சம் நெகிழ வில்லை. அவள் தன் அடிபணிந்து இரக்கும் போது, அவள் விரும் பும் வண்ணம் சுரமஞ்சரி அவளோடு இன்னுரை யாடாது, 'சீவகன் உன் மேலுள்ள விருப்பத்தினால், என் னுடைய நல்ல சுண்ணத்தையும் தீது என்றான். அவன் உன்னை விரும்புவதற்குக் காரணம் நீ முன்னே நோற் றாய். இனி அவன் என்னையும் விரும்பித் தானே வந்து என்னடி தொழும்படி நான் நோற்பேன்,' என்று கூறி அவ்விடத்தினின்றும் நீங்கினாள். கொடியவர்களும் தம் அடியிலே விழுந்து குறை யிரப்பார்களானால், பெருந் தகைமை வாய்ந்தவர்கள் அவர்களுக்கு அருள் செய்யத் தவறார். நல்லவரினும் நல்லவளாக விளங்கும் மெல் லியலாள் ஆகிய குணமாலை தன் அடிபணிந்து வேண்டும் போது, சுரமஞ்சரி இன்னும் அவள்பால் வெறுப்பு மிகுந்து இறுமாந்து, 'நோற்றனை நீ', என்று கூறி அகல் வது அவளுடைய இழிதகைமையைப் புலப்படுத்துகிறது. மேலும் மெல்லியளாகிய அவள் கல்லியல் வாய்ந்த நெஞ்சம் பொருந்தியவள் என்பதையும் அஃது உணர்த்து கின்றது. சுரமஞ்சரி தன்பால் கொண்டுள்ள நட்புரி

மைக்காகக் குணமாலை அவள் அடி வீழ்கிருள். எனவே, குணமாலை நட்பிற்கு அடிபணிகிருள் எனலாம். ஆனுல் அந் நட்பு, பொருமையினுல் அவள் பெருமையை ஓராது அவளை விலக்குகின்றது.

சுரமஞ்சரி தன்னைப் பிரிந்த பிறகு குணமாலை அடையும் வருத்தம் அளவிடற்பால தன்று. இன்பத்துக்குக் காரணமாய விளையாட்டே துன்பத்திற்குக் காரணமாய் இன்பத்தை நீக்கும் என்ற பழமொழியை அப்பாவை நினைந்து நினைந்து அன்பினுல் வருந்தி அழுகிருள்.

இன்பக் காரண மாம்விளை யாட்டினுள்.
துன்பக் காரண மாய்த்துறப் பித்திடும்
என்பதே நினைந்(து) ஈர்மலர் மாலை தன்
அன்பி னுல்அவ ளித்தழு திட்டாள்'

இவை தேவரின் செஞ்சொற்கள்.

இவற்ருல் குணமாலையின் நட்பின் தன்மையும் பெட்பின் திறமும் நன்கு தெளியலாம்.

இனி, குணமாலையின் காதல் திறமும் ஒப்பற்ற சிறப்பு வாய்ந்த தாகும். சோலையில் இருந்தோர் யாவரும் தத்தம் ஊர்திகளில் ஏறி நகரத்திற்குச் செல்கையில், அசனிவேகம் என்ற பட்டத்து யானை செருக்குற்றுக் கட்டுத்தறியை முறித்துப் பாகனுக் கடங்காமல் விரைந்து வருகிறது. இங்ஙனம் வரும் யானை குணமாலைக் கெதிரே சென்று, சினந்து நின்று அவளைக் கொல்லத் தொடங்குகிறது. சீவகன் அப்பாவையினது இடரைக் காண்கிருன். உடனே அவன் அந்த யானை மீது பாய்கிருன். யானை சீவகனைக் கண்டதும் குணமாலையைக் கைவிட்டு அவனை எதிர்க்கிறது. சீவகன் அஞ்சானுய்க், 'குணமாலையைப் பிழைக்கக் கொண்டு போமின்,' என்று

கூறி அக்களிறேடு பொருது அதனை அப்பாற் செலுத்து கிருன்.

முன்னரே சீவகன்பால் விருப்புற்றிருந்த குணமாலை, அவனை நேரில் கண்டதும் ஆருக் காதல் கொள்கிருள். அவள் தன் மனையை அடைந்து உணவு முதலிய வற்றை வெறுத்துச் சீவகனையே நினைந்து நினைந்து நெஞ்சம் உருகுகின்ருள். பிறகு தன்னருகே இருக்கும் கிளியை நோக்கி,

'உய்யு மா(று) உரை உன்னைய லால்இலேன்
செய்ய வாய்க்கிளி யேசிறந் தாய்,'

என்று கூறி அதனைச் சீவகன்பால் தூது விடுகிருள். இங்ஙனம் தூது விட்ட பிறகு அவள்,'கிளி சென்றதோ, சென்று சீவகன் தன் துணைவியாகிய காந்தருவதத்தை யோடு இருக்கின்ற இருப்பிடத்தினின்றும் நீங்கித் தனி யாக இருக்கும் போது அவனை அடையக் கருதி யிருந் ததோ, அவன் காந்தருவதத்தையோடு இருப்பதைப் பொறுக்காமல் திரும்பியதோ, அல்லது பொறுத்துப் போய்ச் சேர்ந்ததோ, சேர்ந்து இது காலம் என்றறிந்து, நினைக்குத் துணைவி யாகின்ற குணமாலை வார்த்தை இஃது; அவள் காமத்தீயால் உருகும்; இதற்கு நீ செய் யக் கருதுகின்றது என்ன?'' எனக் கூறிற்ரே? என்னே இஃதொரு பாவம்!' என்று கருதுகிருள்.

'தன்துணைவி கோட்டியினி னிங்கித் தனியிடம் பார்த்(து)
இன்துணைவன் சேர்வான் இருந்ததுகொல் போந்ததுகொல்
சென்றதுகொல் சேர்ந்ததுகொல் செவ்வியறிந்துருகும்
என்துணைவி மாற்றம் இ:(து) என்றதுகொல் பாவம்,'

என்பது சிந்தாமணி.

இதனின்றும் குணமாலை சீவகன்பால் கொண்டுள்ள எல்லையற்ற காதல் தெளிவாகும்.

தனக்காகத் தனது அருமைக் கிளி இவ்வளவு பாடு பட நேரிடுகிறதே என்று அதன்பால் இரங்கிப் 'பாவம்' என்று குணமாலை கூறுகின்றாள். எத்துணை இரக்க முள்ள நெஞ்சம்!

தான் காதலால் மெலிந்து கசிந்து உருகுகின்ற நிலையிலே அவளுள்ளத்தில் அக்காதல் கைகூடினால் போதும் என்ற எண்ணமே அன்றோ குடிகொண்டிருக்கும்? வேறொன்றுக்கு அப்போது அவ்வுள்ளத்தில் இடமேது? எனினும் குணமாலை அந்த நிலையிலும் தன் காதல் கைகூடுவதற்குச் செல்லும் கிளியின் மெய் வருத்தத்தை நினைந்து இரங்குகின்றாள் எனின், அவள் எளியோர்க்கு இரங்கும் சீரிய பண்பு வாய்ந்தவள் என்பது விளங்குகின்றதன்றோ?

இங்ஙனம் சீவகனையே நினைந்து மெலிகின்ற குணமாலையைச் செவிலித்தாய் அணுகி, அவளை அவளுடைய மாமன் மகனுக்குத் திருமணம் செய்து கொடுக்க தந்தை உடன் பட்டதைத் தெரிவிக்கின்றாள்.

> 'மைத்துனன் வனப்பின் மிக்கான் வளர்நிதிக் கிழவன்காளை
> உத்தமன் உனது நாமம் அல்ல தொன்(று) உரைத்தல் தேற்றான்
> இத்திறத்து இவன்கண் நின்னை யெண்ணினார்''

என்று அவள் கூறுகின்றாள்.

பொதுவாக ஒருத்தி தன் மாமன் மகனிடத்தில் அன்புடையவளாக இருப்பாள். எனவே தன் அன்பிற்குரிய மாமன் மகனுக்குக் குணமாலை மனைவியாகப் போகிறாள் என்பதைக் குறிக்க 'மைத்துனன்' என்று செவிலித்தாய் முதலிலே கூறுகிறாள். அடுத்து இன்னும் அவளிடத்திலே குணமாலைக்குக் காதல் மிகுதல் வேண்டும் என்ற கருத்தோடு செவிலி 'வனப்பின் மிக்கான்' என்றும், அவனைத் திருமணம் செய்துகொண்டால் குணமாலை

யாவற்ருலும் நிறைபட வாழலாம் என்பதைக் குறிக்க 'வளர்நிதிக் கிழவன்' என்றும், இளநங்கையாகிய குண மாலைக்கு ஏற்ற இளம் பருவமுடையவன் என்பதைக் குறிப்பிடுவதற்குக் 'காளை' என்றும், அவனைக் கணவனுக ஏற்ருல் அவன் நல்லியல்பு காரணமாக அவள் அவனேடு மிக இனிதாக வாழ்க்கை நடத்தலாம் என்பதற்கு 'உத்த மன்' என்றும், அவன் அவள்பால் ஆருக்காதல் உடைய வனுக விளங்குகிருன் என்பதை 'உனது நாமம் அல்லது ஒன்று உரைத்தல் தேற்ருன்' என்றும் எடுத்துரைக் கிருள். இங்ஙனம் அழகும், நாளும் பெருகுகின்ற செல்வ மும், இளமையும், நற்குணமும், காதலும் உடைய மைத் துனன் பெருமையைக் கேட்பதற்கும் அவனைக் கணவ னுக ஏற்பதற்கும் எவள்தான் மறுப்பாள்? எனினும் குண மாலை இங்ஙனம் பல்லாற்ருலும் பொலிவெய்தி விளங் கும் தன் மாமன் மகனைப்பற்றிக் கேட்கவும், மணக்கவும் மறுக்கிருள். 'இவனுக்கு உன்னைத் திருமணம் செய்து கொடுக்க உன் பெற்ருேர்கள் எண்ணிஞர்கள்,' என்று செவிலி கூறக் கேட்டதும், குணமாலை அச்சொற்களைக் கேட்கப் பொருதவளாய்க் கையாலே தன் செவியைப் புதைத்து,

> "மணிமதக் களிறு வென்ருன் வருத்தச்சொற் கூலி யாக
> அணிமதக் களிற ஞனுக்(கு) அடிப்பணி செய்வதல்லால்,
> துணிவதென் சுடுசொல் வாளாற் செவிமுதல் ஈரல்"

என்று கூறுகிருள்.

மைத்துனன் பெருமையைக் குறித்துச் செவிலி கூறிய மொழிகளைக் குணமாலை தன் செவியிடத்தை அறுக்கும் வாளாகக் கருதுகிருள். சீவகனை உயிர்க் கண வனுகத் தன் உள்ளத்தே கொண்டிருக்கும் குணமாலை எங்ஙனம் மற்ருெருவனை நினைக்க முடியும்? அவனைப்

பற்றிக் கேட்பதும் தவறன்றோ? ஆகவே அவன் பெருமையைக் குறிக்கும் மொழிகள் அவள் செவியை அறுக்கும் கூரிய வாளாக அவளுக்குத் தோன்றுகின்றன. குணமாலை, தான் களிறிடை அகப்பட்டுத் துன்புற்ற காலையில் அக்களிற்றை வென்று, 'இவளைக் கொண்டுய்யப் போமின்,' என்று சொல்லித் தன்னைக் காப்பாற்றிய செயலுக்குக் கூலியாகச் சீவகனுக்குத் தான் என்றும் தாழ்ந்து ஏவல் செய்வதன்றி வேறொருவனை மணக்கத் துணிவது தகாத செயல் என்கிறாள். மேலும் அவள் தான் சீவகனை மணக்கத் தன் பெற்றோர்கள் உடன் படாமற் போனால், தான் இறந்துபடுவது, தவம் மேற்கொள்வது ஆகிய இவ்விரண்டினுள் ஒன்று மறுநாளே நிகழும் என்று கூறுகிறாள் இக்கருத்தைக்,

> 'கந்துகப் படையிற் பொங்கும் கலினமா வல்லன் காளைக்(கு)
> எந்தையும் யாயும் நேரா ராய்விடின் இறத்த லொன்றோ
> சிந்தனை பிறிதொன் றாகிச் செய்தவம் முயறல் ஒன்றோ
> வந்ததால் நாளை என்றாள் வடுவெனக் கிடந்த கண்ணாள்,'

என்ற செய்யுளில் தேவர் குறிக்கின்றார். இதனின்றும் குணமாலை சீவகனை மணப்பதற்குக் கொண்ட உறுதிப்பாடு தெளிவாகும்.

சீவகன் குணமாலையை மணந்து அவளோடு கூடியிருக்குங்கால், ஒரு சமயம் குணமாலை ஊடல் கொள்கிறாள். ஊடலால் காதல் சிறக்கும் என்பர். 'ஊடுதல் காமத்திற் கின்பம்' என்பது திருக்குறள். குணமாலை ஊடலுக்கு அவளுடைய நட்பிற்குரிய சுரமஞ்சரியைப் பற்றிய பேச்சு காரணமாய் அமைகிறது. சீவகன் குணமாலையின்பால் காதல் மிக்கவனாய், 'அன்று நறுஞ்சுண்ணம் தோற்றவளாகிய சுரமஞ்சரி கண்ணறச் சொல்லிய வெஞ்சொல் எனக்கு இன்பமே ஆயிற்றன்றோ?' என்று

கூறுகிருன். 'சுண்ணந் தோற்றனம், தீம் புனலாடலம்,' என்று சுரமஞ்சரி அன்று சபதம் கூறினுள் அல்லளோ? சுரமஞ்சரி தோல்வி யுறவே, அச்சபதத்தின்படி அவள் புனலாடாமல் ஏக, வெற்றியுடன் விளங்கிய குணமாலே திரும்பும் நேரத்தில் களிறு அவளே எதிர்க்கவே சீவகன் அவளேக் காப்பாற்றி அவள் காதலேப் பெற்ருன். ஆகையால் அவன் பெரு நயப்பிளுல் சுரமஞ்சரி கண்ணறச் சொல்லிய சொல் அவனுக்கு நன்மையாய் அமைந்தது என்கிருன். ஆனுல் அம்மொழிகளேக் கேட்ட குணமாலே சீவகன் மனதில் சுரமஞ்சரியைப் பற்றிய நினேவு எழுந்தது என்று எண்ணிப் பொருமல் அவனேடு ஊடுகிருள்.

"நற்ருே ளவள்சுண்ண நலஞ்சொ லுவான்
உற்றீர் மறந்தீர்மனத் துள்உறை கின்ருள்
செற்ருல் அரிதால், சென்மின், போமின் தீண்டா(து);
எற்றே அறியாத வொர் ஏழையே ேேயான்"

என்பன அவள் புலந்து கூறிய மொழிகள்.

இங்ஙனம் குணமாலேயோடு சீவகன் இன்புற்றிருக்கும் நாளில், தனது யானேயைச் சீவகன் அடக்கி வென்ற செய்தியை அரசனுகிய கட்டியங்காரன் அறிந்து, சீவகன்பால் சினங்கொண்டு அவனேக் கொணருமாறு தன் வீரர்களே ஏவுகிருன். வீரர்கள் சீவகனே வளேந்து கொள்கிருர்கள். சீவகன் சினந்து அவர்களே எதிர்த்துப் போர் செய்ய முதலில் நினேக்கிருன். பிறகு தான் ஒரு வருடம் வரை கட்டியங்காரனே எதிர்ப்பதில்லே என்று தன் ஆசிரியருக்குக் கொடுத்த வாக்குறுதியை நினேந்து அவன் கோபம் தணிகிருன். அப்போது அவனே வளர்த்த கந்துக்கடனும், அவன் மனேவியாகிய சுநந்தையும் வந்து, 'அரசனுக்கு அடங்கியொழுகுதல் ஆண்மை,' என்கின்றனர். அதனுலும் சீவகன் தன் வீரத்தை

வெளிப்படுத்தாமல் இருக்கக் கட்டியங்காரனுடைய வீரர்கள் அவனைப் பற்றிச் செல்கின்றனர். அதைக்கண்ட குணமாலை துன்பம் பொறுக்கலாற்ருது,

'ஏலாது ஏலாது எம்பெருமானுக்கு இஃது'

என்று அரற்றி, எரியிலே விழுந்த மலர் மாலை கரிந்து போவது போலத் துயரமாகிய தீயால் வெந்து சாம்புகிருள். அவள் அழுது அரற்றும் மொழிகள் நெஞ்சத்தை உருக்குவன வாகும்.

இங்ஙனம் குணமாலை ஒப்புயர்வற்ற பல இனிய பண்புகள் வாய்க்கப் பெற்று விளங்குவதால், அவள் தன் இன்னுயிர்த் துணைவனின் முதன் மனைவியாகிய காந்தர்வதத்தையின் பெருமதிப்பிற் குரியவளாகிருள். ஓரகத்தியர் இருவர் அன்பினுல் ஒன்றி இவ்வுலகத்தில் வாழ்வது அருமையினும் அருமை யாகும். எனினும் காந்தருவதத்தை, குணமாலையின்பால் பேரன்புபூண்டு ஒழுகுகின்ருள். அவள் பேரன்புக்குக் காரணம் குணமாலையின் பெறலருங் குணமே யாகும்.

சீவகன் ஏமமாபுரத்தே அரசிளங் குமரியாகிய கனகமாலையை மணந்து மகிழ்ச்சியோடு அவளுடன் தங்கி இருக்கிருன். காந்தருவதத்தை, அவன் பிரிவைப் பொறுக்க லாற்ருது அவனுக்குப் புத்திசேனன் என்ற அவனுடைய தோழன் மூலமாகத் திருமுகம் எழுதியனுப்புகிருள். அத்திருமுகத்தில் அவள்,

"அல்லதுவும் எங்கைகுண மாலையவள் ஆற்ருள்
செல்லுமதி நோக்கிப்பக லேசிறியை என்னும்
பல்கதிரை நோக்கிமதி யேபெரியை என்னும்
எல்லியிது காலையிது என்பதறி கல்லாள்"

என்று குறிக்கின்ருள். "என் தங்கையாகிய குண மாலே உனது பிரிவை ஆற்ருளாய் இரவு இது, பகல் இது என்பது அறியாமல், சந்திரன் அவளுக்கு வெம்மை செய்வதால் அவனைக் கதிரவனுகக் கருதிப், 'பகலே நீ சிறுமைத் தன்மையுடையாய்' என்றும், கதிரவன் அவளுக்குக் குளிர்ச்சியைத் தருவதால் அவனைச் சந் திரனுக நினைத்து, 'மதியே நீ பெருமை யுடையாய்,' என்றும் மதிமயங்கி மாழ்குகின்ருள்,' என்று எழுது கிருள். மேலும் அதற்குள் அவள், 'உருவமழிந்து அடிச்சி யுள்ளாங்கொல் உணர்கலனே" என்றும் குறிக் கின்ருள். அஃதாவது, 'சீவகனுக்குப் பணியாற்றி யொழுகும் குணமாலை பிரிவாகிய பெருந்துயரத்தால் அவ ளுடைய அழகிய வடிவம் அழிகின்ருள். ஆதலால் அவள் பிழைப்பாளோ இறப்பாளோ அறியேன்,' என்றும் எழுதுகிருள். தன் ஆருயிர்க்கணவன் பிரிவைத் தான் பொறுப்பினும், தன் ஓரகத்தியாகிய பெருங்குண நங்கை குணமாலை அக்கொடும் பிரிவைப் பொறுக்க லாற்ருது அவலித்து உயிர் சோர்தலைத் தன்னுல் தாங்க முடிய வில்லை என்பது காந்தருவதத்தை எழுதிய வாசகத்தின் கருத்து. இதனுல் குணமாலையின் இனிய பண்புகள் காந்தருவதத்தையை எவ்வளவு கவர்ந்திருக்கின்றன என்பது தெளிவாகின்ற தன்ருே?

இங்ஙனம், 'மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங் குணத்துக் காத'லுடையவளாகக் குணமாலையைத் தேவர் தம் காவியத்திலே படைத்து மகிழ்கின்ருர். இப் படைப் பின் மூலமாக உலகத்தார்க்கு அவர் உண்மையான நட் பின் திறத்தையும், தலையாய காதலின் தன்மையையும், அன்பும் அமைதியும் அமைந்து விளங்கும் பெண்மை யின் பெருமையையும் உணர்த்துகின்ருர்; இன்னும் பல பாத்திரங்கள் வாயிலாகப் பல உண்மைகளை விளக்கி

உலகம் உய்யு மாற்றைத் தெளிவிக்கின்றார். தேவரின் உள்ளம் எவ்வளவு பெரியது! உலகத்து உயிர்கள் உண்மை நெறியைக் கடைப்பிடித்து உயர்ந்து உய்வு பெறவேண்டுமென்ற எண்ணமே குடிகொண்ட உள்ள மன்றோ அது? இவ்வுள்ளத்தில் அரும்பி மலர்ந்த சீவக சிந்தாமணி ஓர் அறிவுக் களஞ்சியமாக விளங்குகிறது. இவ்வரிய நூல் வாழ்க!

13

# மணிமேகலையில் இயற்கைக்கு இகந்த நிகழ்ச்சிகள்

**மா**தவிக்கும் கோவலனுக்கும் மகளாகத் தோன்றியவள் மணிமேகலை. அவள் பேரழகு வாய்ந்த பாவை. அவள் தாய் அவளைத் தவத்திலே ஈடுபடுத்தினள். மணிமேகலை ஒரு நாள் உவவனம் என்ற மலர்ச் சோலையில் புத்த பெருமானுக்காக மலர் பறித்திருந்தபோது, அவள் மீது காதலுற்ற அரசிளங் குமரனாகிய உதயகுமரன் அங்கு வந்து அவளை அடைய முயன்றான்; முடியவில்லை; அவளை வேறு வழியில் பெற உறுதிகொண்டு, அவன் அவ்விடத்தினின்றும் அகன்றான். பிறகு அவ் வுவவனத்தில் மணிமேகலா தெய்வம் தோன்றி மணிமேகலையை மணிபல்லவம் என்ற தீவினுக்கு எடுத்துச் சென்றது. அங்குப் புத்த பீடிகை வாயிலாக மணிமேகலை தன் பழம்

பிறப்பு வரலாற்றை உணர்ந்தாள். மேலும் அத்தீவின் கண் இருந்த கோமுகிப் பொய்கையில் தோன்றிய அமுத சுரபியையும் அவள் பெற்ருள். அமுதசுரபியாவது, உணவு சுரக்கும் தெய்வீகப் பாத்திரமாகும். பிறகு மணி மேகலே காவிரிப்பூம்பட்டினத்திற்குத் திரும்பி, அங்கு உலக அறவி என்ற அம்பலத்தில் தங்கி, அமுதசுரபி யைக் கொண்டு பல ஏழை மக்களுக்கு உணவளித்து வந் தாள். உதயகுமரன் அங்கு வந்து அவளே அடைய மீண்டும் முயன்ருன். மணிமேகலே அவனிடமிருந்து தப்புவதற்காக, முன்பு மணிமேகலா தெய்வம் தனக்கு உபதேசித்த ஒரு மந்திரத்திஞல் காயசண்டிகை என்ற வித்தியாதர மகளாக உருக்கொண்டாள். எனினும் உதயகுமரன் அவள் மணிமேகலேயே என்று உணர்ந்து அவளேக் காதலிக்கலாஞன். காய சண்டிகையைத் தேடிக்கொண்டு அவள் கணவன் வித்தியாதரன் உலக அறவிக்கு வந்தான்; அங்குக் காயசண்டிகை உருவத்தி லிருந்த மணிமேகலேயைத் தன் மனேவியே என்று கருதி ஞன்; அவளே உதயகுமரன் காதலிப்பதைக் கண்டு பொருமல் அவனே வெட்டி வீழ்த்திஞன். உதயகுமரன் கொலே செய்யப்பட்டதற்குக் காரணம் மணிமேகலேயே என்று அரசன் கருதி அவளேச் சிறையி லிட்டான். அரசி மணிமேகலேயைப் பலவாறு துன்புறுத்திஞள். முடிவில் அவள் பெருமையை உணர்ந்து, அரசி மணிமேகலே யிடம் மன்னிப்பு வேண்டிஞள். பிறகு மணிமேகலே சாவக நாட்டிற்குச் சென்று, அந்நாட்டு அரசஞகிய ஆபுத்திரனேடு மணிபல்லவத் தீவிற்குச் சென்ருள்; அங்கு ஆபுத்திரன் புத்தபீடிகையைத் தொழுது, அவன் பழம் பிறப்பு உணருமாறு செய்தாள். அங்கிருந்து மணி மேகலே வஞ்சி நகர் சென்று, அங்குப் பல சமயவாதி களேக் கண்டு, அவரவர் சமயப் பொருட்களேக் கேட்

டுணர்ந்தாள்; வஞ்சிநகரி லிருந்து கச்சிமா நகர்க்குச் சென்று, அங்கு அறவண அடிகளைத் தொழுது, அவரிட மிருந்து அறவுரைகளைச் செவியேற்ருள். முடிவில், மணிமேகலை மெய்யுணர்வு பெற்றுத் தவமேற்கொண்டு, பிறப்பறுக்க நோற்கலானுள்.

இது மணிமேகலை என்ற காவியத்தில் கூறப்பெறும் கதையின் சுருக்கம்.

இஃது ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று. இக்காவியத்தை இயற்றியவர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனுர் ஆவர். இவர் இந்நூலில் புத்தமதக் கோட்பாடுகளையும், முறைகளையும், நெறிகளையும் நன்கு விளக்கியுள்ளார். பௌத்த சமயக் கருத்துக்களைத் தெளிவுறுத்துவதே இந்நூலின் அடிப்படையான நோக்கமாகும் என்றுகூறலாம். மக்கள் உள்ளத்தே உணர்ச்சியை எழுப்ப வல்லதுவே இலக்கியம் எனப்படும். உணர்ச்சியை எழுப்பும் ஆற்றல் இலக்கியத்திற்கு இருப்பதனுலேயே படிக்குந்தொறும் அது சுவைக்கிறது. இலக்கியம் எப்படி அவ்வாற்றலைப் பெறுகிறது? ஒரு நிகழ்ச்சியைக் கூறினுல், அதனைக் கேட்போர் உணர்ச்சிவயப் படுவதில்லை. அதே நிகழ்ச்சியைக் கவிஞர்கள் தம் கற்பனையோடு கூறினுல், அஃது உணர்ச்சியைப் பெருக்கும் ஆற்றலை யடைகிறது. எனவே, கவிஞர்கள் தம் காவியத்தில் அமைக்கும் கற்பனைகளே காவியத்திற்குச் சுவையூட்டுபவை எனலாம். இக் கற்பனைகள் இயற்கைக்கு உகந்தவையாயும் இருக்கும்; அல்லது இயற்கைக்கோ, இயல்புக்கோ இகந்தவையாயும் இருப்ப துண்டு.

இயற்கைக்கு அல்லது இயல்பிற்கு இகந்த கற்பனைகளை அமைப்பதற்குப் பல காரணங்களைக் கூறலாம். காவியக் கதையைக் கவிஞர் சொல்லிக்கொண்டே போகும்போது, இடையே கதையில் சிக்கல் ஏற்படலாம்.

இச் சிக்கலி லிருந்து விடுபெறுதற்கு ஆசிரியர் இயற்கைக்கு இகந்த ஒரு கற்பனையை அமைக்கலாம். ஆசிரியர் தம் கொள்கையை வலியுறுத்த இயற்கைக்கு இகந்த ஒரு நிகழ்ச்சியைக் கூறலாம்; ஒரு நீதியைக் கற்பிக்க ஆசிரியர் இயற்கைக்கு இகந்த நிகழ்ச்சியைக் கூறலும் உண்டு.

புதுமையான ஒரு பொருளைக் காணுங்கால் நம் உள்ளத்தே இன்பம் ஏற்படுவது இயல் பன்றோ? இதைப் போலவே இயற்கைக்குப் பொருந்தாத புதுமையான ஒரு நிகழ்ச்சியைப் படிக்குங்கால், அப்புதுமையை நம்முள்ளம் நினைத்து மகிழ்கின்றது.

மணிமேகலை உவவனத்தில், தன் தோழி சுதமதியோடு மலர் பறித்துக்கொண்டிருந்த போது, அரசிளங் குமரனாகிய உதயகுமரன் அவளை அடையும்பொருட்டு அங்கு வந்தான். அவன் வரவை உணர்ந்ததும், மணிமேகலை அங்கிருந்த பளிக்கறைக்குள் சென்று மறைந்து கொண்டாள். உதயகுமரன் வந்ததும், தோழி சுதமதி அவனுக்கு மணிமேகலையின் தவ ஒழுக்கத்தை எடுத்துச் சொல்லி அவளை அவன் அடைய விரும்புதல் தக்கதன்று என்றும் கூறினள். பின்பு உதயகுமரன் மணிமேகலையை மாதவியின் தாய் சித்திராபதியைக் கொண்டு அடைய உறுதிகொண்டு, அவ்விடத்தினின்றும் அகன்றனன். பளிங்கறைக்குள் ளிருந்த மணிமேகலை உதயகுமரனைக் கண்ணுற்றனள். அவனைக் கண்டதும் அவள் மனம் அவனை நாடியது. ஆனால் மணிமேகலை தன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டாள். அதற்குள் அந்தி மாலை வந்தது. அப்போது மணிமேகலா தெய்வம் அவ்வூரின் பெண் வடிவங் கொண்டு அங்குத் தோன்றி, மணிமேகலையைத் தழுவி எடுத்து ஆகாய வழியே சென்று மணிபல்லவம் என்ற தீவில் அவளை

வைத்து அகன்றது. இயற்கைக்குப் பொருந்தாத இந் நிகழ்ச்சியைச் சாத்தனார் தம் காவியத்தில் அமைத்ததன் நோக்கம் யாதென நாம் ஆராய வேண்டும்.

உவனத்தில் மணிமேகலையை அடையமுடியாது திரும்பிய உதயகுமரன், அவள் தம் மலர்வனத்தைவிட்டு வெளி வரும் தருணத்தை எதிர்பார்த் திருப்பான் அல்லனோ? அவள் அச் சோலையை விட்டு வீதி வழியே சென்றால், உதய குமரன் எதிர்ப்பட்டு அவளைக் கவர்ந்து செல்வான்.

> " அரசிளங் குமரன் ஆயிழை தன்மேல்
> தணியா நோக்கந் தவிர்ந்தில னாகி
> அறத்தோர் வனமென் றகன்றன னாயினும்
> புறத்தோர் வீதியில் பொருந்துதல் ஒழியான்"

என்று மணிமேகலா தெய்வம் சுதமதியை நோக்கிக் கூறுவதாக ஆசிரியர் அமைத்துள்ள இவ்வடிகளி லிருந்து இதனை உணரலாம். எனவே, மணிமேகலையை உவவனத்தி லிருந்து எப்படி வெளியேற்றுவது? இச் சிக்கலி லிருந்து எளிதில் விடுபெறுவதற்காக ஆசிரியர் அங்கு மணிமேகலா தெய்வத்தைத் தோற்றுவிக்கிறார் எனலாம். இங்ஙனம் தோன்றிய மணிமேகலா தெய்வம் மணிமேகலையை அவளுடைய வீட்டிற்கு எடுத்துச் சென்றிருக்கலாம் அல்லவா? அவளை மணிபல்லவத்திற்குக் கொண்டு சென்றதன் காரணம் யாது? உவவனத்தில் மணிமேகலை உதயகுமரனைக் கண்டதும் அவள் மனம் அவனை நாடியது அன்றோ? இதனின்றும் மணிமேகலை துறவுக்கோலம் பூண்டிருப்பினும், அவளுடைய மனம் இன்னும் பக்குவம் எய்தவில்லை என்று உணரலாம். மங்கைப் பருவத்தினளாய மணிமேகலையை எப்படியும் உலக இன்பங்களை அறவே வெறுத்த ஒரு தனிப்பெருந் துறவியாக ஆக்கவேண்டும் என்பதே ஆசிரியரின் கருத்

தாம். ஆகவே அவளை மணிமேகலா தெய்வம் மணி பல்லவத்திற்குக் கொண்டு போகும்படிச் செய்கிறார் ஆசிரியர்.

இனி, மணிபல்லவத்தில் அவள் மனம் எப்படிப் பக்குவம் அடைந்தது என்பதைக் காண்போம். அங்கு ஆசிரியர் ஒரு புத்த பீடிகையைப் படைக்கிறார்; அதோடு அந்தப் புத்தபீடிகையைப் பாதுகாக்கும் தீவதிலகை என்ற ஒரு தெய்வ மகளையும் தோற்றுவிக்கிறார். மணிமேகலை அப்புத்த பீடிகையைத் தொழுது தன் பழம் பிறப்பை உணர்ந்தாள். முன்பிறப்பில் தான் இரவிவன்மன் என்ற அரசனுக்கும் அவன் தேவி அமுதபதிக்கும் மகளாகப் பிறந்து, இலக்குமி என்ற பெயர் எய்தி, இராகுலன் என்பவனுக்கு மனைவியாக வாழ்ந்ததும், இராகுலன் திட்டிவிடம் என்ற பாம்பால் இறந்தவுடன் தானும் தீயிற்புகுந்து உயிர் விட்டதும் ஆகிய இப்பழம் பிறப்பு வரலாற்றை அவள் அறிந்தாள். அப்போது மணி மேகலா தெய்வம் அவள்முன் தோன்றி, முன்பிறப்பில் அவள் கணவனாக இருந்த இராகுலனே இந்தப் பிறப்பில் உதயகுமரனாகத் தோன்றி இருப்பதாகவும், அப்பிறப்பில் அவளுக்குத் தமக்கையர்களாக இருந்த தாரை, வீரை என்பவர்களே இப்பிறப்பில் மாதவியும், சுதமதியுமாகப் பிறவி எடுத்துள்ளதாகவும் அவளுக்கு அறிவுறுத்தியது. மேலும் மணிமேகலை உதயகுமரனைக் கண்டதும் அவள் மனம் அவனை நாடியதன் காரணம் அவன் முற்பிறப்பில் அவளுடைய கணவனாக இருந்தமையே ஆகும் என்றும், அவளுடைய மனப்பற்றை மாற்றி அவளை நல்வழிப்படுத்தவேதான் அவளை மணிபல்லவத்திற்குக் கொண்டுவந்ததாகவும் அத்தெய்வம் கூறிற்று. இவற்றையெல்லாம் கேட்டுத் தெளிந்த மணிமேகலையின் மனம் பற்றை நீக்கி மெய்யுணர்வு எய்தியது.

இவ் வுலகத் துன்பங்களே நன்கு உணர்ந்தவர்களே பிறப்பின்பால் வெறுப்புக் கொள்ளமுடியும். துன்பத்துள் துன்பம் வறுமைத் துன்ப மன்ருே? இவ் வறுமைத் துன்பத்தை நீக்குதலினும் சிறந்த அறம் இவ்வுலகில் வேருென்று மில்லே என்பது இந் நூலாசிரியர் சாத்தனுரின் அழுத்தமான நம்பிக்கை. எனவே இத்துன்பத்தின் தன்மையை மணிமேகலே உணரவேண்டு மென்றும், அத்துன்ப முற்ருர்க்கு உதவுதலாகிய பேரறத்தை அவள் மேற்கொள்ள வேண்டு மென்றும் ஆசிரியர் கருதுகின்ருர்; இதற்காகத் தீவதிலகை என்ற தெய்வ மகளேத் தம் காவியத்தில் படைக்கிருர். தெய்வ மகளின் வாயினின்றும் எழும் உரைக்கு மதிப்பும் பெருமையும் உண்டல்லவா?

மணிமேகலே மணிபல்லவத் தீவின் கண்ணுள்ள இயற்கை எழிலேக் கண்டு உலாவி வருங்கால், தீவதிலகை அவள்முன் தோன்றினள். தீவதிலகை மணிமேகலேயின் பெருமையை உணர்ந்து, வறுமையின் கொடுமையையும், அது தீர்த்தோர் எய்தும் நன்மையையும் நன்கு மணிமேகலேக்கு அறிவுறுத்தினுள்,

> ''பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோர்
> இசைச்சொல் அளவைக்கு என்நா நிமிராது''

என்றும்,

> ''மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்(கு) எல்லாம்
> உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே,'

என்றும் கூறி, மணிமேகலேயைத் தெருட்டினுள்.

உலகத்துப் பசியைப் போக்குதற்குப் பெரும்பொருள் தேவை யன்ருே? மணிமேகலேயோ தவக்கோலம் பூண்டவள்; பொருளே நாடாத பொன்னுள்ளம் படைத்தவள்;

அவளால் எப்படி உலகோர் பசியைப் போக்கமுடியும்? இங்கே இயற்கைக்கு இகந்த ஒரு நிகழ்ச்சியைஅமைத்து இச்சிக்கலைத் தீர்க்கிருர் ஆசிரியர்.

மணிபல்லவத் தீவில் கோமுகி என்னும் பொய்கை ஒன்றுண்டு. அதில் ஆண்டு தோறும் புத்தர் பிறந்த நாளாகிய வைகாசித் திங்கள் நிறைமதி நாளில் அமுத சுரபி என்னும் அட்சயபாத்திரம் தோன்றும். அப்பாத்தி ரத்தில் இட்ட வுணவு எடுக்க எடுக்கக் குறையாது சுரக் கும்; மணிமேகலை அத்தீவி லிருந்த நாளே அப்பாத் திரம் தோன்றும் நாளாகும். இதனைத் தீவதிலகை மூல மாக மணிமேகலை அறிந்து, கோமுகிப் பொய்கையைத் தொழுது வலம் வந்து நின்றனள். அப்போது அப் பொய்கையில் தோன்றிய அமுதசுரபி மணிமேகலை கையை அடைந்தது. இதுவே ஆசிரியர் கூறும் அந் நிகழ்ச்சி. இனி, இப்பாத்திரத்தைக் கொண்டு மணி மேகலை பசிப்பிணியை ஒழித்தலாகிய பேரறத்தைப் புரியலா மன்ருே?

மணிபல்லவத்தில் மனப்பக்குவம் எய்திய மணிமே கலை மீண்டும் காவிரிப்பூம்பட்டினத்தை அடைய வேண் டும். முன்பு அவளை அங்கிருந்து இத்தீவிற்குக் கொண்டு வந்த மணிமேகலா தெய்வமே மீண்டும் அவளைக் காவி ரிப்பூம்பட்டினத்திற்கு எடுத்துச் சென்றதாக ஆசிரியர் கூறவில்லை. ஒரே நிகழ்ச்சியை மீண்டும் கூறுவது காவியத்திற்குச் சுவை தராது. எனவே ஆசிரியர் இங்கு வேருெரு கற்பனையை மேற்கொள்ளுகிருர்.

முன்பு மணிமேகலை முன் தோன்றிய மணிமேகலா தெய்வம், அவளுக்கு மூன்று மந்திரங்களை அறிவுறுத் தியது. ஒரு மந்திரத்தால் மணிமேகலை வேருேர் உருக் கொள்ளலாம். மற்ருெரு மந்திரத்தால் அவள் வானில்

இயங்கலாம். இன்னொரு மந்திரம் பெரும் பசியைப் போக்க வல்லது.

எனவே, மணிமேகலை மணிபல்லவத் தீவிலிருந்து காவிரிப்பூம்பட்டினம் செல்ல வானில் இயங்குதற்குரிய மந்திரம் பயன் பட்டது. இம் மந்திரத்தை மணிமேகலா தெய்வம் உபதேசித்ததாக ஆசிரியர் தம் காவியத்தில் அமைத்ததற்கு வேருெரு காரணமும் உண்டு.

மணிமேகலை பலர்க்கும் நன்மை செய்யும் நோக்கத் தோடு சாவக நாடு, வஞ்சிமா நகர் முதலிய இடங்களுக் குச் சென்றதாக ஆசிரியர் காவியத்தின் பின்பகுதியில் பாடுகிருர். அவ்விடங்களுக்குச் சென்றதால் அவளறிவு மேலும் பண்பட்டது இவ்விடங்களுக் கெல்லாம் ஒரு வித இடையூறுமின்றி அவள் எளிதில் செல்லுதற்கு வானில் இயங்குதற்குரிய மந்திரத்தை ஆசிரியர் கற்பனை செய்துள்ளார் என்று கொள்ளலாம். மணிமேகலை வேற்றுரு கொள்வதற்குரிய மந்திரத்தையும் ஆசிரியர் கற்பனை செய்ததன் காரணம்,

“ அறிபிறப் புற்றனை; அறம்பா(டு) அறிந்தனை;
பிறவறம் உரைப்போர் பெற்றியும் கேட்குவை;
பல்வேறு சமயப் படிற்றுரை யெல்லாம்
அல்லியங் கோதை! கேட்குறும் அந்நாள்,
இளையள், வளையோள், என்றுனக்(கி) யாவரும்
விளைபொருள் உரையார்; வேற்றுரு எய்தவும்,
அந்தரத்(து)த் திரியவும் ஆங்குமிவ் வருந்திறன்
மந்திரங் கொள்(க) என வாய்மையின் ஓதி”

என்று மணிமேகலா தெய்வம் மணிமேகலைக்குக் கூறிய அடிகளி லிருந்து உணரலாம்.

மணிமேகலை தன் பழம்பிறப் புணர்ந்து பக்குவம் எய்தினள்; அறத்தின் தன்மையை எல்லாம் உணர்ந்

தனள். இவற்ேறாடு, அவள் பல சமயத்தார் உரைகளை யும் கேட்டு உண்மைச் சமயம் எதுவெனத் தெளிய வேண்டுமென்பது சாத்தனாரின் விருப்பம். சாத்தனார் பௌத்த சமயத்தில் தளராப் பற்றுடையவர். இப்பற் றின் காரணமாக வேறு சமயங்களைப் பல்வேறு சமயப் படிற்றுரை என்று இகழ்கிறார். பௌத்த சமயமே மெய் யுணர்வு அளிக்க வல்லது; ஏனைய சமயங்களெல்லாம் பொய் யுணர்வு கொண்டவை என்ற நம்பிக்கைகொண்ட வர் அவர். மணிமேகலை தன் உண்மை உருவத்தோடு பல சமயவாதிகளிடம் சென்றால், 'இவள் இளம் பெண்,' என்று இகழ்ந்து அவளுக்கு, அவர் தம் சமய உரைகளைக் கூறமாட்டார்கள்; ஆகையால் அவள் வேற்றுருவுடன் சென்று, பல சமய உரைகளையும் கேட்கும் பொருட்டு மணிமேகலா தெய்வம் அவளுக்கு மந்திரம் உபதேசித்த தாக ஆசிரியர் கூறுகிறார். ஆபுத்திரன் என்பவனோடு மீண்டும் மணிபல்லவத் தீவிற்குச் சென்ற மணிமேகலை, அங்கிருந்து வஞ்சிமா நகரம் சென்று, ஆணுருக் கொண்டு, பல சமயவாதிகள் உரைகளைக் கேட்டு, முடி வில் பௌத்த சமயமே உயர்ந்த உண்மைச் சமயம் என உணர்ந்தாள்.

இதற்குமுன் ஒருமுறை மணிமேகலை வேற்றுருக் கொள்ளும் மந்திரத்தைத் தனக்குப் பயன்படுத்தினள். அவள் உலக அறவி என்னும் அம்பலத்தை அடைந்து பசியால் வாடியோர்க்கு உணவளித்து வருங்கால் அவள் அங்கிருப்பதை உதயகுமரன் அறிந்து அங்கு வந்தனன்; வந்து அவள் தவக்கோலம் பூண்டு பிச்சையேற்பதன் காரணம் யாதென அவளை வினவினன். மணிமேகலை அவனை வணங்கி, உள்ளே சென்று, மணிமேகலா தெய் வம் அருளிச் செய்த மந்திரத்தை ஓதிக் 'காய சண்டிகை' என்னும் வித்தியாதர மகளின் வடிவமுற்று அமுதசுரபி

யோடு வெளியே வந்து நின்ருள். அவள் அவனைக் கண்டதும் வேற்றுவடிவம் கொண்டதன் காரணம் யாது? பழம்பிறப்பில் அவன் அவளுடைய கணவனுக இருந்த வன்; ஆகையால் இப்போது அவளை அவன் தன்னுடன் வரும்படிக் கைப்பற்றி இழுத்தால், அவனேடு அவள் போதற்குக் கடமைப் பட்டவள் ஆவள். இந்த நிலையி னின்றும் தான் தப்புதற்கு மணிமேகலை காயசண்டிகை உருவங் கொண்டனள்.

“ அறைபோய் நெஞ்சம் அவன்பால் அணுகினும்
இறைவளை முன்கை ஈங்கிவன் பற்றினும்
தொன்று காதலன் சொல்லெதிர் மறுத்தல்
நன்றி யன்றென நடுங்கினள் மயங்கி”

என்ற இவ்வடிகளி லிருந்து இதை உணரலாம்.

சிலப்பதிகாரத்தில் கண்ணகி மதுரைமா நகரத்தை எரித்தது மணிமேகலை ஆசிரியர் சாத்தனுர்க்கு உடன் பாடன்று. அதை அவள் செய்தது பெரும் பாவச் செயல் என்பதை அவர் தம் காவியத்தில் ஒரு கற்பனை வாயிலாகக் கூறுகிருர். மணிமேகலை வான்வழியாக வஞ்சிநகரை அடைந்து, அங்குக் கண்ணகிக்கும் கோவ லனுக்கும் அமைக்கப்பட் டிருந்த படிவங்களை வணங்கித் துதித்தாள். அவள் கண்ணகி படிவமுன் நின்று, கண் ணீர் சொரிந்து, ‘தாயே, தாங்கள் கற்புக்கடம் பூண்டு கடன்முடித்த திறத்தைத் தெளிவிக்க வேண்டு’ மென்று வேண்டினுள். அதற்குக் கண்ணகியார் படிவம்.

“ சீற்றங் கொண்டு செழுநகர் சிதைத்தேன்
மேற்செய்நல் வினையின் விண்ணவர்ச் சென்றேம்
அவ்வினை யிறுதியின் அடுசினப் பாவம்
எவ்வகை யானும் எய்துதல் ஒழியாது,”

30 APR 1961

என்று வருந்திக் கூறியதாக ஆசிரியர் உரைக்கிருர். இங்ஙனம் ஆசிரியர் தம் கருத்தைச் சுவையூட்டும் இக் கற்பனை மூலமாக உணர்த்துவது படித்துப் படித்து இன்புறற் பாலது.

இன்னும், இக்காவியத்தில் காஞ்சனன் என்ற வித்தியாதரன் உலக அறவியின்கண் உதயகுமரனை வாளால் துணித்துக் காயசண்டிகை வடிவில் இருந்த மணிமேகலையைத் தன் மனைவியெனக் கருதி, அவளைக் கைப்பற்றிச் செல்ல முயன்றபோது, அங்குள்ள கந்திற்பாவை அவனுக்கு அறிவுரை கூறுவதும்,விஞ்சையன் வாளால் உதயகுமரன் வெட்டுண்டு இறந்துபட்டதைக் குறித்து மணிமேகலை வெய்துயிர்த்துப் புலம்பி, அவனுடலருகே சென்ற போது அதே பாவை மணிமேகலையை நோக்கி உரைப்பதும் ஆகிய இன்னேரன்னவை சீத்தலைச் சாத்தனர் தம் பௌத்த சமயக் கொள்கைகளை அறிவுறுத்த மேற்கொண்ட அழகிய கற்பனைகளாகும். இவைகளெல்லாம் இயற்கைக்கு இகந்த கற்பனைகளேனும் காவியத்திற்கு மிகுந்த சுவைநலம் பயப்பனவாம்.

UNIVERSITY EXTENSION LIBRARY
30 APR 1961